
# திருக்கோயில்

செப்டம்பர் - அக்டோபர் 1985

விலை ரூ. 4-00





மதுரை அருள்மிகு மீனாட்சிசுந்தரேசுவரர் ஆலயத்தில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு இராம. வீரப்பன் அவர்கள் "திருக்கோயில் தூய்மைப் பராமரிப்புப் பணி"யைத் தொடக்கி வைக்கிறார். தமிழக அரசின் தலைமைச்செயலாளர் திரு T. V. அந்தோணி ஐ.ஏ.எஸ். அவர்களும், அறநிலையத்துறை ஆணையர் மற்றும் சமூகநலத்துறையின் அரசுச்செயலாளர் திரு கு. ஆளுடைய பிள்ளை ஐ.ஏ.எஸ். அவர்களும், தக்கார் திரு V. N. சிதம்பரம் மற்றும் துணை ஆணையர் ஆர். அரங்கசாமி பி.எஸ்ஸி. பி.எல்., அவர்களும் படத்தில் உள்ளனர்.



முகப்பு

சேலம் அருள்மிகு இராஜகணபதி
ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும்
இராஜகணபதி

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-600 034.

ஆசிரியர்: கவிஞர் டாக்டர்
த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை : 27 | திருவள்ளுவர் ஆண்டு 2016 குரோதன ஆண்டு புரட்டாசி & ஐப்பசி
செப்டம்பர், அக்டோபர் 1985 விலை ரூ. 4-00 | மணி : 9, 10

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள் !

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்

உயர்திரு
ஆணையர் அவர்கள்
அறநிலைய ஆட்சித்துறை
சென்னை-600034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.
ஜனவரி முதல் டிசம்பர் வரையுள்ள காலம் சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும்.

தனிப்பட்ட சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக ஆணையர் அலுவலகத்திற்கே பணம் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

**திருக்கோயில் இதழின் ஆண்டுச் சந்தா**
உள்நாடு ரூ 24.00
வெளிநாடு ரூ 36.00

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும் பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும் பொழுது மணியார்டர் கூப்பனில் புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

## பொருளடக்கம்

மதுரை அருள்மிகு மீனாட்சிசுந்தரேசுவரர் ஆலயத்தில் நடைபெற்ற ஆலயத்தூய்மைப்பராமரிப்புப் பணித் தொடக்க விழாவில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு. இராம. வீரப்பன் அவர்கள் ஆற்றிய சிறப்புரை.

அன்னதானம்
—திருமுருக கிருபானந்தவாரியார்

திருநள்ளாறு தலவரலாறு
—T. S. சிட்டிபாபு

வள்ளலார் வற்புறுத்திய சமரசம்
— திரு வி. க.

பிரதோச வழிபாடு
—வித்துவான் முத்துசாமிப்பிள்ளை

முதுமொழிகளும் மூவர் வரலாறும்
—டாக்டர் பருத்தியூர் சந்தானராமன்

திருப்போரூர் சிதம்பர சுவாமிகள்
—திருப்போரூரான்

கிருட்டிணன் தூது
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

தீண்டாமை தொலைந்தது
—செவ்வேள்

மகாத்மா காந்தி மணிமொழிகள்
உலக உயர்வும் சமயங்களும்
—ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வாழ்வு ஒளிபெற ஓது திருமுறை
—டாக்டர் சிவ. பார்வதி

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

## மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் நடைபெற்ற

# திருக்கோயில் தூய்மைப் பராமரிப்பு பணித் தொடக்க விழாவில்

### மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் இராம. வீரப்பன் அவர்கள் ஆற்றிய சிறப்புரை....



அன்புள்ள இந்த நிகழ்ச்சியினுடைய தலைவர்-தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு அந்தோணி அவர்களே! அறநிலையத் துறை ஆணையர், தமிழக அரசினுடைய சமூக நலத்துறையினுடைய செயலாளர் அன்பிற்குரிய ஆளுடையபிள்ளை அவர்களே! இந்த ஆலயத்தினுடைய தக்கார் அருமைச்சகோதரர் வி.என்.சிதம்பரம் அவர்களே! தமிழ்நாடு வேளாண் விளை பொருள் வாரியத்தினுடைய தலைவர் அருமைச்சகோதரர் பாண்டியன் அவர்களே! முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இலட்சுமிநாராயணன் அவர்களே! வருகை தந்திருக்கின்ற சான்றோர்களே! தாய்மார்களே! மாணவிகளே! நண்பர்களே!

## அப்பர் பெருமான் நடத்திய இயக்கம்

அருள்மிகு மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயிலில் ஒரு மிகச்சிறந்த நிகழ்ச்சியை -அநேகமாக இதற்கு முன்னாலே இந்த ஆலயத்திலே நடைபெற்றிராத ஒரு நிகழ்ச்சியை -நம்முடைய தலைமைச் செயலாளர் திரு அந்தோணி அவர்களுடைய முயற்சியினால் இன்றைக்கு நாம் நடத்திக்கொண்டிருக்கிறோம். ஆலயங்களைத் துப்புரவாகத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்கிற நெறி, நியதி, எல்லா சமயத்தவர்க்கும் பொதுவான ஒன்றாகும். அதிலும் ஆலயத்தைத் தூய்மையாகவும் துப்புரவாகவும் வைத்துக்கொள்ள வேண்டும் என்கின்ற ஒரு உணர்வுக்காக, ஒரு இயக்கத்தையே நடத்தியவர் நம்முடைய சான்றோராக விளங்கிய அப்பர் பெருமான் ஆவார்கள். ஆயிரத்தி முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்திலே சைவ நெறியை-தமிழ் நெறியைப் பரப்புவதற்காகத் தோன்றி அரும்பாடுபட்ட வணக்கத்திற்குரிய திருநாவுக்கரசர் பெருமான், வாழ்க்கையில் எத்தகைய சிறந்த பணிகளை மனிதன் மேற்கொண்டு வாழவேண்டும்என்பதற்கு முன்மாதிரியாக - மிகச்சிறந்த சான்றாக வாழ்ந்துகாட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சமயத்தைப் பின்பற்றுகிற நாம் நம்முடைய முன்னோர்கள் எழுப்பிய மாபெரும் ஆலயங்களை, அறநிலையங்களைத் தூய்மையாகத் துப்புரவாக வைத்துகொள்வதில் தவறி இருக்கிறோம் என்பதை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

## என் கடன் பணிசெய்து கிடப்பதே

ஆலயங்களை மாத்திரம் துப்புரவாக வைத்தால்போதுமா? என்பதைப்பற்றி எண்ணுகிற நேரத்திலே தான் நாம் வாழ்கிற ஒவ்வொரு இடத்தையும், நாம் பழகிக்கொண்டிருக்கிற அந்தச் சுற்றுப்புறங்களையும், தூய்மையாகத் துப்புரவாக வைத்துக்கொள்ளவேண்டும் என்கின்ற உணர்வை நாம் பெற்றாகவேண்டும் என்

பதை நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள் இங்கே எடுத்துச்சொன்னார்கள். முதலிலே நாம் வணங்குகின்ற-இறைவன் விளங்குகின்ற ஆலயத்தைத் துப்புரவாக வைத்துக் கொள்வதற்குப் பழகினால் தான் அந்தஉணர்வு நமக்கு ஏற்பட்டால்தான், அதைத்தொடர்ந்து நாம் வாழ்கிற வீட்டையும் மற்றும் பழகுகின்ற சுற்றுப்புறச் சூழல்களையும் துப்புரவாக வைத்துக் கொள்கின்ற அந்த பழக்கமும் நமக்கு வந்துசேரும் என்பதனால் தான், நம்முடைய சான்றோர்கள் முதலில் ஆலயங்களைத் துப்புரவாக வைத்துக் கொள்ளவேண்டும் என்கின்ற அந்த நெறியை ஒரு இயக்கமாகவே மாற்றித் தந்தார்கள். ''என் கடன் பணிசெய்து கிடப்பதே'' என்று நம்முடைய அப்பர் பெருமான் தமிழ் இலக்கியமாக நமக்கு வழங்கிவிட்டுச் சென்றிருக்கிற வார்த்தைகள் வெறும் சொற்றொடர்கள் அல்ல. மனிதன் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தவேண்டிய ஒரு மிகச் சிறந்த லட்சியமாகும். கடன் என்பனதயும், பணி என்பதையும், நாம் அந்த இரண்டையும் இணைத்துப்பார்த்தால் தான், மனிதன் எத்தகைய கடமையை நிறைவேற்ற வேண்டும்; கடமையின் விளைவாக எத்தகைய பணிகளை முடிக்க வேண்டும் என்கின்ற அந்த அருமையான தத்துவத்தை நம்மாலே புரிந்துகொள்ள முடியும்.

## தாய்மையின் தூய்மை

இன்றைக்கு ஆலயங்களைச் சுத்தமாக வைத்திருக்கிறோமா என்பதையும், அதைவிட நாம் வாழ்கின்ற இல்லங்களை, நம்முடைய சுற்றுப்புற சூழல்களைச் சுத்தமாக வைத்துக் கொள்கிறோமா என்பதையும், இன்றைக்கு எண்ணிப் பார்த்தால் வருந்துவதற்குரிய மன உணர்வே நம்மை ஆட்கொளக் காணுகின்றோம்.அதைத்தான் நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள், அவர்களுடைய திருக்குமாரனைப்பற்றிய ஒரு சான்றை இங்கே எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்கு வளர்ந்து கொண்டு வருகின்ற அணு யுகத்தில், விஞ்ஞான யுகத்தில் மனிதன் தன்னுடைய தேவைகளைத் தானே நிறைவேற்றிக் கொள்வதும் கூட தவறு என்று எண்ணுகிற அந்த உணர்விற்கும் ஆட்பட்டிருக்கிறான். இதற்கு முன்னாலே மற்ற மனிதர்களை-பணியாளர்களைப் பயன்படுத்திக் கொண்டிருந்தோம். இப்பொழுது இயந்திரங்களைப் பயன்படுத்திக்கொள்ள முன் வந்திருக்கிறோம். முறையிலே மாற்றம் இருக்கிறதே தவிர உணர்விலே மாற்றம் ஏற்படவில்லை. நம்முடைய காரியத்தைச் செய்வதற்கு யாராவது ஒருவர் வரவேண்டுமென்று முன்னாலே நாம் எதிர்பார்த்தோம். அது வீட்டிலே மனைவியாக இருக்கலாம். அல்லது வேலைக்காரனாக இருக்கலாம் என்று எண்ணுகிற மனப்பான்மை நீண்டகாலமாக இருந்தது. இன்றைக்கு மனிதர்கள் கிடைக்கவில்லை என்கின்ற அந்தப்பஞ்சம் வந்தவுடன், இயந்திரத்தைப் பயன்படுத்த ஆரம்பித்திருக்கிறோம். ஆகவே நம்முடைய காரியத்தைச் செய்வதற்கு-நம்மாலே முடிந்த காரியத்தைச் செய்வதற்கு-நாம் செய்தே தீர வேண்டிய கடமையுடைய காரியத்தைச் செய்வதற்கும் நாம் மற்றவர்களுடைய உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இது இன்றைக்கு எங்கே கொண்டு வந்து விட்டிருக்கிறது என்றால், வீட்டில் பெண்கள் தான், தாய்மார்கள் தான் இந்தப்பணியைச் செய்து கொண்டிருந்தார்கள். நல்லவேளை அந்த புண்ணியத்தை அவர்கள் நிறைவேற்றிக்கொண்டிருந்தார்கள். அதனுடைய விளைவு ஆண்களாக இருக்கிறவர்கள் இந்தக் காரியத்தையே செய்ய வேண்டாம் என்கிற உணர்வும் சமுதாயத்திலே வளர்ந்திருந்தது. காரணம் பெண்களுக்குத் தானே கருத்தரித்து, ஒன்பது மாதத்திற்கு மேல் சுமந்து, பத்தியம் இருந்து, வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி, மரணத்தின் வாயிற்படிவரை சென்று, அந்த மகப்பேற்றைப் பெற்று, அந்த மகவைப் பார்த்ததற்குப் பிறகு, எல்லாத்துன்பங்களையும் மறந்து, அந்த மழலையினுடைய சிரிப்பிலே, அதனுடைய பேச்சிலே, அதனுடைய அழகிலே அதனுடைய தளிர்நடையிலே அது நடமாடுகிறபொழுது, வளர்கின்றபொழுது பார்த்துப் பார்த்துப் புளகாங்கிதம் அடைந்து பூரிக்கின்ற தாய், அதனுடைய தேவைகள் முழுவதையும் இவளே கவனித்து, மலத்தை எடுத்து சிறுநீரைச் சுத்தம் பண்ணி, அதன் உடலுக்கு நோய்வருகிறது என்றால், தனக்கு நோய் வந்ததாக எண்ணி, உடலுக்கு நோய்வராமல் இருப்பதற்காக, தான் பத்தியம் ஏற்றுக்கொண்டு, அப்படிப்பட்ட ஒரு தியாக உணர்வோடு நம்முடைய நாட்டிலே தாய்மார்கள் மற்றவர்களுக்காக வாழ்ந்து வாழ்ந்து அந்தப் பழக்கத்தை ஏற்படுத்திவிட்ட காரணத்தினாலே - ஆண்களுக்குத் தான் அப்படி ஒரு அலட்சியம் ஏற்பட்டிருந்தது என்றால் இன்றைக்கு மன்னிக்க வேண்டும்-நம்முடைய பள்ளிகளிலே இருந்து வந்திருக்கின்ற மாணவிகள், பெண் குழந்தைகளுக்குக்கூட அந்த அலட்சிய மனோபாவம் வந்துவிட்டது.


## கண்ணிருந்தும் குருடர்கள்

நம்முடைய தலைமைச்செயலாளர் அவர்கள் சொன்னதைப் போல வீட்டிலே ஒரு இடத்திலே ஒரு சாமான் முறைதவறிக் கிடக்கிறது என்றால் அதை எடுத்து அதனதன் இடத்திலே, எடுத்துவைக்க வேண்டும் என்கின்ற அந்த அடிப்படைப்புத்தி கூட இன்றைக்குப் பலருக்கு கிடையாது.

அதைப்பார்த்துக் கொண்டே பலபேர் போகிறோம். அதைக் காலாலே தள்ளிவிட்டுச் சிலபேர் போகிறார்கள். இன்னும் சிலர் காலாலே மிதித்துவிட்டும் செல்கிறார்கள். கண்

ணிருந்தும் குருடர்கள் என்று ஒரு பழமொழி இருக்கிறது. அது எதற்காக ஏற்பட்டது என்பது இவ்வளவுநாள் தெரியவில்லை. இப்பொழுது தான் தெரிகிறது. கண் எதிரே கிடக்கின்ற குப்பையை, கண் எதிரே தாறுமாறாகக் கிடக்கிற பொருளை ஒழுங்காக எடுத்துவைத்து விட்டுப் போகாமல் -அப்படி எடுத்துவைத்து விட்டுச் செல்லவேண்டும் என்கின்ற உணர்வைக் கூடப்பெறாமல் போகிறோமே! நமக்காகத் தான் ''கண்ணிருந்தும் குருடர்கள்'' என்ற அந்த பழமொழியே தோன்றியிருக்கிறது.

நடக்கிற இடத்தில் ஏதோ குப்பைக் கூளங்கள் கிடக்கிறது. அதை எடுத்துவைக்க வேண்டும். ஆபத்து விளைவிக்காத குப்பைகளுக்கு மாத்திரம் அல்ல. ஆபத்தை உண்டாக்கக்கூடிய



9-9-85 இல் மணிவிழாத் தொடக்க ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திருமிகு ஆர்.எம்.வீ. அவர்களை வாழ்த்துகிறோம்.

ஆணிகளைப் போன்ற காலிலே காயம் ஏற்படுத்தக்கூடிய கருவிகள். அப்படிப்பட்ட பொருள்கள் கிடந்தால் கூட அதையெடுத்து ஒரு இடத்திலே வைக்கவேண்டும் என்கின்ற உணர்வே இல்லாமல் போகிறோம். இவன் போகிறான் அதைப் பார்த்துவிட்டு; பின்னாலே அதைப் பார்க்காமல் வருகிறவன் காலிலே அது குத்துகிறது. துருப்பிடித்த ஆணி குத்தினால் அது மனிதனுடைய உயிருக்கே அபாயம் விளைக்கிறது. ஆகவே ஒரு சிறிய தவறு. அதைப் பொறுப்புணர்வோடு நாம் திருத்தாத காரணத்தாலே அது எவ்வளவு பெரிய ஆபத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை இன்றைக்கும் நாம் உணர்ந்தபாடில்லை. வீட்டிலே ஒரு சாமான் கிடக்கிறது. அதை நாமே எடுத்துவைக்காமல் ஒரு ஆளை கூப்பிடுகிறோம். ''அம்மா'' என்று அழைத்து ''இதோ பார் கிடக்கிறது, எடுத்துவை'' என்கிறார்கள். இவன் கூப்பிடுகிற நேரத்திலே இவனே குனிந்து எடுத்து வைத்துவிடலாம். இதற்காக இவன் கூப்பிட்டு - வீட்டிலே அடுப்பங்கரையிலே வேலை செய்துகொண்டிருக்கிற தாய் அல்லது சகோதரி அல்லது மனைவி இப்படி யாரையாவது கூப்பிட்டு அவர்கள் வந்து அதை எடுத்துவைக்க வேண்டும் என்று விரும்புகிற உணர்வு இருக்கிறதே தவிர, அதை எடுத்துக்கொண்டுபோய் இவன் வைத்துவிட்டால் அந்த வேலை மிச்சமாகிவிடும் என்கிற உணர்வும் வரவில்லை. இடமும் சுத்தமாகி விடும் என்கிற அந்தப்பொறுப்பும் வரவில்லை. இது பெரியவர்களிடத்திலே தொடங்கி இளைஞர்கள் இடத்திலேயும் வந்து இருக்கிறது. சிறுவர்கள் இடத்திலேயும் வந்து இருக்கிறது.

## அடிப்படை ஒழுங்குதான்

இன்னும் இதிலே மிகப்பெரிய கொடுமை என்னவென்றால், கொஞ்சம் வசதி படைத்தவர்கள் வீட்டிலே - பணக்காரர்கள் வீட்டிலே அவர்கள் குழந்தைகள் ஏதாவது ஒரு வேலையைச் செய்யப் போனால், அந்தத்தாய் அன்பைக்காட்டுவதாக நினைத்துக் கொண்டு ''இதை ஏண்டா நீ செய்கிறாய்? வேலைக்காரர்களைக் கூப்பிட்டுச் செய்யச் சொல்லவேண்டியது தானே!'' என்று அவனுக்கும் சொல்லிக்கொடுக்கிற பழக்கம் இன்னறக்கு நம்முடைய சமுதாயத்திலே வளர்ந்திருக்கிறது. இது எங்கே கொண்டுபோய் நிறுத்தியிருக்கிறது என்றால் இன்றைக்கு இளைஞர்களைப் பொறுப்பற்றவர்களாக மாற்றுகிற அளவிற்குப்போய் இருக்கிறது. பொறுப்பு என்பது ஒரு சிறிய சாமானை எடுத்துவைப்பதில் தான் தொடங்குகிறது. இங்கே பொறுப்பை உணர்த்தவில்லையென்றால் நாட்டிலே குழப்பம் விளைவிக்கிற அளவிற்குப் பொறுப்பற்ற தன்மை வளர்ந்துகொண்டிருக்கிறது. எதையும் ஒழுங்காக வைக்கவேண்டும், ஒழுங்காக இருக்கவேண்டும். ஒழுங்கு வந்தால் தான் ஒழுக்கமே வரும். ஒழுக்கம் வந்தால்தான் பண்புவரும். பண்பு வந்தால் தான் உயர்ந்த மனிதர்கள் தோன்றுவார்கள். அடிப்படை ஒழுங்கு தான். அந்த ஒழுங்கை இன்றைக்கு நாம் கற்றுத்தருவதில்லை. அந்த ஒழுங்கைக் கற்றுத் தருவதற்குத்தான் நம்முடைய சான்றோர்கள், நம்முடைய அப்பர் பெருமான் போன்றவர்கள், கையிலே அந்த உழவாரப் படையை வைத்துக்கொண்டு திருப்பணியில் ஈடுபட்டார்கள். அவர்கள் ஆலயத்தை மாத்திரம் சுத்தம் செய்ய வேண்டும் என்கிற அந்த முயற்சியில் மட்டும் ஈடுபடவில்லை. சமுதாயம்

முழுவதும் மக்கள் வாழுகின்ற அந்தப்பகுதிகள் முழுவதும் அத்தகைய பணிகளிலே தங்களை ஈடுபடுத்திக்கொண்டார்கள். அதைப் பெரிய வர்கள் செய்தால்தான், மற்றவர்களும் அதைப் பின்பற்றுவார்கள் என்கின்ற அந்தக் கார ணத்தினாலே தான், வணக்கத்திற்குரிய அந்தச் சான்றோர்கள் தாங்களே இந்தக் காரியத்தைச் செய்தார்கள். பல குழந்தைகள் ஒரு வீட் டிலே இருக்கிறபொழுது, தகப்பன் அல்லது தாய், அந்த வீட்டிற்குப் பெரியவர் அந்தக் காரி யத்தைச் செய்தால் தான் அந்தக்குழந்தைக்கே அந்த உணர்வு வரும். குழந்தைக்கு அந்த உணர்வு வரவேண்டுமானால் இவனே அந்தக் காரியத்தைச் செய்யவேண்டும். இவனே குனிய முடியாமல், குனிந்து அந்தக் காரியத்தைச் செய்ய முடியாமல், எவனையாவது கூப்பிடு என்று வேலை வாங்குவதற்கு, அந்தக் குழந் தையைத்தான் பயன்படுத்துகிறான். ''டேய்! சுப்பிரமணியம்! போய் அந்த வேலைக்காரனை அழைத்துக்கொண்டு வந்து, இதை எடுத்து வைக்கச்சொல்'' என்று அந்தப் பச்சிளம் குழந் தையிடம், இந்த வேலையை ஒரு வேலைக் காரன் தான் செய்யவேண்டும் என்கிற அந்த உணர்வைத் தகப்பன் பதிக்கிறான். அதனு டைய விளைவு, அந்தக் குழந்தை, '' ஓஹோ இந்த வேலையை நாம் செய்யக் கூடாது போலி ருக்கிறது! இதற்கென்று நியமிக்கப்பட்ட வேலைக்காரன் தான் செய்யவேண்டும் போலி ருக்கிறது! நாம் செய்தால் நமக்கு இழிவு வந்து விடும். நம்முடைய செல்வாக்கிற்குப் பங்கம் வந்து விடும்! நாம் பணக்காரவீட்டுப்பிள்ளை''! என்கின்ற உணர்வுகளை நாம் குழந்தைகளிடம் கூட வளர்த்துக்கொண்டு வருகின்றோம். இத னுடைய விளைவு எதைப்பார்த்தாலும் கண் ணிருந்தும் குருடர்களாகப் போய்க் கொண்டி ருக்கிறோம்.

## கீழே இறங்கிவந்தும் காரியங்களை ஆற்ற வேண்டும்

ஆலயத்திற்குள் நுழைகிறபொழுது, வணக் கத்திற்குரிய ஆலயங்கள், இறைவன் குடியிருக் கின்ற ஆலயங்கள், எவ்வளவு தூய்மையாக வைத்திருக்கவேண்டும், வைக்கப்பட வேண்டும் என்பதிலே நமக்கு எந்தவிதமான உணர்வும் இருப்பதாகத் தெரியவில்லை. பல்லாயிரக்கணக் கான மக்கள் கூடுகிறார்கள். அவ்வாறு கூடுவ தனாலே அங்கே கொஞ்சம் குறைகள் ஏற்படு கின்றன. ஒழுங்கு முறைகள் குறைகின்றன. ஆனால் இதை மனிதன் நினைத்தால் மாற்றி விடலாம். அதற்குத் தான் நம்முடைய தலை மைச் செயலாளர் அவர்கள்-வாழ்க்கையினு டைய ஒவ்வொரு பகுதியிலேயும் மிகுந்த அக் கறை காட்டுகிறவர்கள்-ஒருமாநிலத்தினுடைய நிர்வாகி, தலை சிறந்த நிர்வாகி, தலைமை நிர் வாகி அவர் உயர்ந்த அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பித்துவிட்டு வீட்டிலேயே உட்கார்ந்து கொண்டிருக்கலாம். காரியாலய அறையிலேயே இருக்கலாம். ஆனால் அவர்கள் கீழே இறங்கி வருகிறார்கள். மக்களோடு மக்களாக வருகி றார்கள். என்ன நடைபெறுகிறது என்பதைத் தெரிந்துகொள்வதிலே அக்கறை காட்டுகிறார் கள். அவர்கள் இன்றைக்குக் காலையிலேகூட ஒரு சைக்கிளை எடுத்துக்கொண்டு சுற்று கிறார். இவரை யாரென்று பலருக்குத் தெரி யாது. இன்றைக்குக் கூட காலையில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றதாக நம்முடைய அருமை சகோதரர் பாண்டியன் அந்த விவரத்தைச் சொன்னார்கள். இங்கே நம்முடைய தமிழகத்தி னுடைய தலைவர் மாண்புமிகு டாக்டர் புரட் சித் தலைவர் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய சிலைக்கு மாலை அணிவிப்ப தற்காக அங்கே ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. பல்லாயிரக்கணக்கான மக் கள் அங்கே கூடியிருந்தார்கள். பாதுகாப்பிற் காகக் காவல்துறையினர் மிகுந்த பந்தோ பஸ்தை ஏற்பாடு செய்திருந்தார்கள். அங்கே ஒருவர் சைக்கிளிலே வந்திருக்கிறார். சைக் கிளிலே வந்தவர் அந்த போலீஸ் வளையத் தைத்தாண்டி உள்ளே வர முயன்றபோது, அங்கே பக்கத்திலே இருந்தவர்கள் காவல்துறை யினர் உள்பட, யாரிவர் வெளியே போங்கள் என்று சொல்லி, வெளியே போகச்சொல்லி யிருக்கிறார்கள். கடைசியில் அந்தச் சைக் கிளிலே வந்தவர், நம்முடைய தலைமைச்செய லாளர் அந்தோணி அவர்கள். காரணம் அவர் சைக்கிளிலே வந்தால்தான் அந்த மக்களுடைய உணர்வுகள் என்ன என்று புரியும். சைக்கிளிலே வருகிற மக்கள் எப்படி நடந்துகொள்கிறார்கள் என்பதும் புரியும். சைக்கிளிலே வருகிறவர்களை அதிகாரிகள் எப்படி நடத்துகிறார்கள் என்பதும் புரியும்.

## கபாலீசுவரர் ஆலயத்திலேயே தொடங்கப் பட்டிருக்க வேண்டிய திருப்பணி

இவ்வாறு வாழ்க்கைப் பிரச்சினைகளை அனுபவ பூர்வமாகத் தெரிந்து கொள்ளவேண் டும் என்கிற அந்த அடிப்படை உணர்வோடு அவர்கள் நடந்து கொள்கிறவர்கள்-அவர்கள் ஏற்றுக்கொள்ளுகிற எந்தக்காரியம் ஆனாலும் இரவு பகலாக அதிலே தம்மை ஈடுபடுத்திக் கொள்கிறவர்கள்; வாழ்க்கையில் நான் அவ ரைப் பார்க்கிற பொழுதெல்லாம் இப்படி எல்லோரும் இருந்துவிட்டால் பிரச்சினையே இருக்காதே என்று எண்ணுவதுண்டு. நான் ஒரு அதிகாரியாக அவரைப் பார்ப்ப தில்லை. இந்தச் சமுதாயத்தினுடைய ஒரு அங்கமாக -ஒரு தனிமனிதனாக - ஒரு குடும் பத் தலைவராகப் பார்க்கிறபொழுது எனக்கு மிகப் பெரிய மகிழ்ச்சிவரும். அதை விடப் பெரிய மகிழ்ச்சி அவருடைய துணைவியாரை எண்ணும்போது வரும். எனக்கு ஒரு சந்தேகம், இன்றைக்கு ஒரு பழமொழி இருக்கிறது உல

கத்திலே - ''மிகச்சிறந்த ஆடவனுக்குப்பின் னாலே அந்தப்புகழுக்குப் காரணமான ஒரு பெண்மணி இருக்கிறாள்'' என்பது ஒரு பழ மொழி. நம்முடைய அந்தோணி அவர்களு டைய சிறப்பிற்கும் பெருமைக்கும் காரணமாக அமைந்திருக்கிறவர் அவருடைய துணைவியார் தானா? என்பது எனக்கொரு சந்தேகத்திற் குரிய பிரச்சினை. அநேகமாக அவர் தான் அதைச் சொல்லவேண்டும். அவர்களும் அவ் வளவு ஒரு ஒழுக்கத்திலே - கடமையிலே- கட்டுப்பாட்டிலே தம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறவர் - ஒரு உயர்ந்த அதி காரியினுடைய துணைவியாராக அவரை நீங் கள் பார்க்கமுடியாது. சில நேரங்களிலே அவர் கள் ஆசிரியையாகக் காட்சி தருகிறார்கள். சில நேரங்களிலே குழந்தையைக் கட்டுப்படுத்து கிற குடும்பத்தலைவியாகப் பார்க்க முடியும். சில நேரங்களிலே சமுதாயத்திற்கு தொண்டு செய்கிற சமூகசேவகியாகப் பார்க்க முடியும். சில நேரங்களில் அந்தோணி அவர்களோடு வரு கிறபொழுது தான் உயர் அதிகாரியினுடைய துணைவியாக நமக்குத்தெரியும். அதைத்தவிர மற்ற நேரங்களில் அவர்கள் ஒரு இல்லத்தரசி எப்படி இருக்கவேண்டும் என்பதற்குத் தமிழ்ச் சமுதாயத்தினுடைய ஒரு சான்றாக விளங்கு கின்றவர்கள். அப்படிப்பட்ட ஒரு மிகச்சிறந்த நிர்வாகி, தலைமைச்செயலாளர் இன்றைக்கு அவர்கள் பல துறைகளிலே தம்முடைய அக் கறையைச் செலுத்தினாலும், இந்த ஆலயங் களைத் தூய்மையாக வைத்துக்கொள்ளவேண் டும். ஆலயங்களைத் தூய்மையாக வைக்க வேண்டும் என்கின்ற அந்த உணர்வை மக்க ளிடத்திலே வளர்த்துவிட்டால், அவர்கள் இல் லங்களையும் தூய்மையாக வைத்துக்கொள் வார்கள். அப்படி தூய்மையாக வைத்துக்கொள் கிற பழக்கம் வந்துவிட்டால், கண்ணிலே தெரி கிற மற்ற எந்த குப்பைகள் கூளங்கள் ஆனாலும் அதை அப்புறப்படுத்த வேண்டும்; அதற்கு முயற்சி எடுக்கவேண்டும் என்கிற அந்த உணர்வையும் மக்கள் பெற்றுக்கொள்வார்கள். ஆலயம் மிகச்சிறந்த சுத்தமான தூய்மையான இடமாக மாறும் என்கிற அந்த உணர்வை அவர்கள் நீண்டகாலமாக வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வரு டத்திற்கு முன்பே சென்னையிலேயே கபாலீசு வரர் ஆலயத்திலே இதை நடத்தவேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள்.

## முப்பிறவி கண்ட முதல்வரின் வருகை

அதை நடத்துகின்ற அந்த முயற்சியிலே அவர்கள் ஈடுபட்டுப்பல நிகழ்ச்சிகளை அவர் கள் ஏற்பாடு செய்து என்ன காரணத்தாலோ நடத்தப்படவில்லை. அப்படி நடத்தப்படாத அந்த நிகழ்ச்சி நம்முடைய மூதூர் மதுரையிலே, அருள்மிகு மீனாட்சியம்மன் சந்நிதியிலே, புரட் சித்தலைவர் அவர்கள் மூன்றாவது பிறவி எடுத்து, மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்று, மதுரைக்கு வருகின்ற இந்த நாளிலே, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்தநாளிலே இது தொடங்கப்பட வேண்டும் என்பது இறைவன் விதித்த விதியோ என்னவோ தெரியாது. இன்றைக்கு அதுகூடி இருக்கிறது. ஒருவேளை அன்றைக்கு அவர்கள் அதை நடத் தியிருந்தால், அன்றைக்கு அவர்கள் இரண்டா வது செயலாளராகத்தான் இருந்தார். இன் றைக்கு அவர்கள் தலைமைச் செயலாளராக இருக்கிறார்கள். நம்முடைய ஆளுடையபிள்ளை அவர்களும் நம்முடைய அறநிலையத்துறையின் ஆணையராக இருந்து, பதவி உயர்வுபெற்று, தமிழக அரசினுடைய செயலாளராக உயர்வு பெற்று இலங்கைக்கு இந்திய அரசினுடைய தூதுவர் ஆலயத்தினுடைய முதற்செயலாளர் பொறுப்பை ஏற்க இருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட ஒரு அருமையான சூழ்நிலையில் இந்த நிகழ்ச்சி இங்கே நடைபெறவேண்டும் என்பதை இயற்கை விதித்திருக்கிறது.

## அண்ணாவின் கடமை உணர்வு

பேரறிஞர் அண்ணா அவர்களும் இதே உணர்வைக் கொண்டவர்கள். அவர்கள் தங்க ளுக்கு வேண்டிய வேலையை அவரே செய்து கொள்வார்கள். ஆளைத்தேடாமல், தன் சட் டையே எடுத்து அவரச அவசரமாகத் தானே போட்டுக் கொள்வார்கள். அப்படி அவசரமா கப்போடுகிற காரணத்தினாலேயே எந்தப் பொத்தானை எங்கே மாட்டுவது என்று கூட இல்லாமல், மாற்றி மாற்றி மாட்டிக்கொள்ளு வார்கள். அதைப்போல அவர்களுக்கு ஒரு இயற்கையான குணம். தம் வேலையை இன் னொருவரிடத்திலே சொல்லுவதற்கே அவர்கள் தயங்குவார்கள். அவர்களை ஏன் துன்புறுத்த வேண்டும்? அவர்களுக்கு ஏன் தொல்லை கொடுக்க வேண்டும்? அந்த வேலையை நாமே செய்துகொள்ளலாமே என்று அவர்களேசெய்து கொள்வார்கள்.

## உறுதி எடுத்துக்கொண்டு துப்புரவுப் பணியைத் தொடங்குவோம்

நாம் இருக்கிற இடம் தூய்மையாக இருக்க வேண்டும். மனிதன் புறத்தைத் தூய்மையாக வைத்து இருந்தால்தான் அவனுடைய அகமும் தூய்மையாக இருக்கும். அகம் தூய்மையாக இல்லாமல் இருந்தால், அவன் புறத்தையும் தூய்மை இல்லாமல்தான் வைத்திருப்பான். அகமும் புறமும் ஒன்றாகத் தான் என்றைக்கும் இயங்கும். வெளியிலே சுத்தமாக வைத்துவிட்டு உள்ளுக்குள்ளே இருளை அல்லது அழுக்கை வைத்துக் கொண்டிருப்பதிலே பலனில்லை. அகத் தைத்தூய்மையாக வைத்துக்கொண்டிருப்பவன் புறத்தைத் தூய்மையின்றி அழகாக வைத்துக் கொள்ள விரும்பமாட்டான். ஆகவே அகமும்

தூய்மையாக இருக்கவேண்டும். புறமும் தூய்மையாக இருக்கவேண்டும். அதற்காகத்தான் நம்முடைய சான்றோர்கள் ஒரு இயக்கத்தையே நடத்தினார்கள். பாடல்களையும் பாடினார்கள். வாழ்ந்தும் காட்டினார்கள். ஆகவே, அப்படிப்பட்ட அப்பர் பெருமான் சந்நிதியில் இன்றைக்கு நாம் உறுதிமொழிகள்எடுத்து இந்த துப்புரவுப் பணியைத் தொடங்க இருக்கிறோம். எங்களைப் போன்ற அமைச்சர்கள், அதிகாரிகள் ஏதோ விழா நடத்திப் புகைப்படக்காரர்களுக்கும் போஸ் கொடுத்து, கையிலே உழவாரப் படையை வைத்துக்கொண்டு சுத்தம் செய்வதைப்போலப் பத்திரிகைகளில் வந்துவிட்டால் மாத்திரம் இந்த இயக்கம் வெற்றிபெறாது. 15 நாட்களுக்கு இங்கே பல்வேறு சமூக அமைப்புகள் இந்த ஆலயத்தைச் சுத்தம் செய்கிற பணியை ஏற்றுக்கொண்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் 15 அமைப்புக்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். 30 நாட்களும், ஒவ்வொரு நாள் ஒவ்வொரு அமைப்பு இங்கே சுத்தம் செய்யவேண்டும். ஒரு அமைப்பினால் ஆகாதென்றால், பல பகுதிகளாகப் பிரித்துப் பல அமைப்புக்களுக்குக் கொடுத்தாக வேண்டும். முப்பது நாளும் இந்தத்தூய்மைப்பணி, துப்புரவுப் பணி நடந்தாக வேண்டும். இதைப் பார்க்கிற பொழுது பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் இப்படி துப்புரவு செய்கிற உணர்வைப் பெற்றாக வேண்டும்.

## இறைவன் கற்றுத்தரும் பாடம்

வீட்டிலே இருக்கிறபொழுது கையிலே விளக்குமாறை எடுத்து நம் வீட்டைக் கூட்டுவதற்கே கூச்சப்படுகிறோம். வெட்கப்படுகிறோம். நம் வீடு குப்பையாக இருந்தால், ஒரு துடப்பம் எடுத்துக்கூட்டுவதில் என்னஅசிங்கம்? என்ன நஷ்டம்? ஆனால் அதையே நாம் கேவலமாக நினைக்கிறோம்! அதற்குத்தான் இறைவன் நமக்கு எவ்வளவு பெரிய போதனையைத்தந்திருக்கிறார்! அதை நாம் நினைத்துப் பார்ப்பதில்லை. மிக அருமையாகச் சட்டையைப் போட்டுக்கொள்கிறோம். வெளி அலங்காரத்தைச் செய்து கொள்கிறோம். பவுடரைப் போட்டுக் கொள்கிறோம். ஆனால் இந்த உடம்புக்குள்ளே தான் நாம் கையை வைக்க அஞ்சுகிறோமே! கையை வைக்கக் கூசுகிறோமே! அந்த அசுத்தத்தையே இந்த உடம்பு தான் தாங்கிக்கொண்டிருக்கிறது. அதைத் தாங்கிக் கொண்டிருக்கிற இந்த மனிதன், அதைச்சுமந்து கொண்டிருக்கிற சுமைதாங்கி, அதைப்பார்த்து வெட்கப்படுவது என்ன நியாயம்? அதை எடுக்கிறவன் முடியாது என்று இன்றைக்குச் சொல்லிக்கொண்டு இருக்கிறானே! நாளைக்கு நாம் தானே சுமந்தாக வேண்டும்! இப்படிப்பட்ட உணர்வுகளை மக்கள் என்றும் மறந்துவிடக் கூடாது, ஒதுக்கிவிடக்கூடாது என்பதற்குத்

---

## தூய்மைப் பராமரிப்புப் பணியில் பங்குகொண்டுள்ள அமைப்புகள்.

அருள்மிகு மீனாட்சிசுந்தரேஸ்வரர் ஆலயத்தூய்மைப் பராமரிப்புப் பணியில் பங்குகொள்ள முன்வந்த 15 அமைப்புகள் ஒவ்வொன்றிற்கும், மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தம் திருக்கரங்களால் உழவாரம் உள்ளிட்ட துப்புரவுக் கருவிகளை வழங்கிப்பணியைத் தொடக்கிவைத்தார்கள். அப்பதினைந்து அமைப்புகளும், அவை தூய்மைப்பராமரிப்பிற்கு ஏற்றுக்கொண்டுள்ள இட விவரங்களும் வருமாறு;

| | |
|---|---|
| 1. தூய்மை தொண்டர் குழு | ஆடி வீதிகள் |
| 2. பன்னிரு திருமுறை மன்றம் | கல்யாண சுந்தரர் சன்னிதி |
| 3. பள்ளி ஆசிரியைகள் | அஷ்டசக்தி மண்டபமும் மீனாட்சிநாயகர் மண்டபமும். |
| 4. மாதங்கி மகளிர் மன்றம் | பொற்றாமரைக் குளமும் அதன் பிரகாரமும் |
| 5. இந்து நாடார் பக்த சபை | கிளிக்கூட்டு மண்டபம் |
| 6. நாராயண குரு நற்பணி மன்றம் | கம்பத்தடி மண்டபம் (சுவாமி கோயில்) |
| 7. கோடி அருச்சனை பாராயண சபை | அம்மன் சன்னிதி வெளிப்பிரகாரம் |
| 8. திருப்பாவை, திருவெம்பாவை இசைப்பள்ளி | அம்மன் சன்னிதி உள்பிரகாரம். |
| 9. வன்னியடி பக்த சபை | வன்னியடி விநாயகர் சன்னிதி |
| 10. உள்கடைக்காரர்கள் சங்கம் | முக்குறுணி விநாயகர் சன்னிதி |
| 11. வெளிக்கடைக்காரர்கள் சங்கம் | சுவாமிகோயில் உள்பிரகாரம் (இரண்டாம் சுற்று) |
| 12. நகரத்தார் சங்கம் | சுவாமிகோயில்உள்பிரகாரம் (முதல்சுற்று) |
| 13. சுழற்கழகங்கள் (இனர்வீல்) | சுவாமி சன்னிதி நந்தி மண்டபம். |
| 14. சுழற்கழகங்கள் | ஆயிரங்கால் மண்டபம் |
| 15. அரிமா சங்கம் | மங்கையர்க்கரசி மண்டபம், வழிபடுவோர் ஓய்வுக்கூடம். |

தான் அதையும் உரமாக இறைவன் நமக்குத் தந்திருக்கிறான்.

இன்றைக்குப் புதிய உரங்கள், விஞ்ஞானத்தினால் கண்டுபிடித்திருக்கிற மருந்து வகைகள் கலந்து செய்யப்படுகிற உரங்கள், மனிதனுடைய வாழ்வைக் குறைத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் இயற்கை உரங்கள் தான் மனித வாழ்வை வளர்த்துக் கொண்டிருக்கின்றன. கொஞ்சம் கொஞ்சமாக இயற்கையை நாம் குறைத்து விட்டுச் செயற்கையை நாம் அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதனுடைய விளைவு மனிதனுடைய வாழ்வும் சிக்கலாகிக்கொண்டிருக்கிறது. எத்தனையோ மருந்துகள் கண்டுபிடிக்க கண்டுபிடிக்க வியாதிகளின் எண்ணிக்கையும் வளர்ந்துகொண்டே இருக்கிறது. பல வியாதிகளுக்குப் பெயரே தெரியவில்லை. அந்த வியாதிகள் வருவதற்கான காரணமும் தெரியவில்லை. காரணம்தெரியவில்லை என்றால், பெயர் தெரியவில்லை என்றால் அலர்ஜி என்று ஒரு பெயரைச் சொல்லி விடுகிறார்கள். ஆகவே இயற்கை அல்லது இறைவன் மனிதனைச் சோதித்துக்கொண்டே இருக்கிறான். இந்த அறிவை அவன் தூண்டிவிட்டுக் கொண்டே இருக்கிறான். இன்னொரு பக்கத்தில் இறைவன் பரீட்சை வைத்துக்கொண்டே இருக்கிறான். நாம் வெல்லுகிறோமா, இயற்கை வெல்லுகிறதா என்பது தீர்மானிக்க முடியாத ஒரு விசயம். நாம் பாடம் கற்றுக் கொண்டே இருக்கிறோம். ஆகவே எதையும் அசிங்கம் என்று தள்ளிவிடக்கூடாது என்பதற்குதான் இதையும் படைத்திருக்கிறான். பயனுள்ளதாகவும் ஆக்கி இருக்கிறான்.

## உலகேத்தும் உழவாரப்படையாளி

ஆகவே வீட்டைச் சுத்தப்படுத்துவது என்பதையும் ஆலயத்தைத் தூய்மைப்படுத்துவது என்பதையும் நாம் அவசியக் கடமைகளாக ஏற்றுக்கொண்டாக வேண்டும். நம்முடைய பிள்ளைகள் இங்கே இருக்கிறபோது, ஒருவேலையைச் செய்ய மறுக்கிறார்கள். இவர்களையே அமெரிக்காவிற்கு அனுப்பினால், இங்கிலாந்திற்கு அனுப்பினால் அங்கேஅவரவர்வேலையை அவர்களே செய்து கொள்கிறார்கள். அங்கே படித்துவிட்டு இங்கே வந்து காலை எவத்த உடனேயே, ஆளைக் கூப்பிடுகிறான். இங்கே வெளிநாடு சென்றுவந்தவர்கள் பலருக்குத் தெரியும். இங்கேதான் போர்ட்டர்களை, கூலிகளை வைத்துக்கொண்டிருக்கிறோம். வெளிநாடுகளுக்குச் சென்றால் உங்களுடைய பெட்டிகளைத்தூக்குவதற்கு ஆள்இருக்கமாட்டார்கள். அவரவர்களே சுமந்துகொண்டு சென்றாக வேண்டும். அல்லது தள்ளுவண்டியிலேவைத்துத் தள்ளிக்கொண்டு சென்றாக வேண்டும். அங்கே செய்கிறபொழுது இவனுக்கு வெட்கம் இல்லை, துக்கமில்லை, கௌரவக்குறைச்சல் இல்லை. ஆனால் நம்முடைய தாயகத்திற்கு வந்துவிட்டால் மட்டும் எடுத்ததற்கெல்லாம் ஆட்கள் வேண்டியிருக்கிறது! இப்படிப்பட்ட இளைஞர்களுக்குப் பாடமாகத்தான் அன்றைக்கே அப்பர் பெருமானும், மாணிக்கவாசகரும், சேக்கிழாரும் ஆலயத் தூய்மையை வற்புறுத்திப்பாடி விட்டுச் சென்றிருக்கிறார்கள். ''திருநாவுக்கரசர் வளர் திருத்தொண்டின் நெறி வாழவரும், ஞானத்தவ முனிவர்'' என்றும், ''உலகேத்தும் உழவாரப்படையாளி'' என்றும், சேக்கிழார் பெருமான் இன்றைக்கு 800 ஆடுகளுக்குமுன் பாடியதை, நாம் இன்றைக்குப் பாடமாகக் கொண்டாக வேண்டும். நாளைக்கும் பாடமாக கொண்டு, வரும் தலைமுறைகளும் வாழ்ந்தாக வேண்டும். ஆகவே, இத்தகைய சிறப்பு மிக்க திருக்கோயில் தூய்மைப் பராமரிப்புப் பணியை தொடங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி கொள்வதோடு, இதேபோன்று எல்லா ஆலயங்களிலும் திருக்கோயில் தூய்மைப்பராமரிப்புப் பணிகளைத்தொடர்ந்து அனைவரும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாழ்த்தி, விடைகூறி, அமைகிறேன் வணக்கம். ***

---

“சத்தியத்தையே ஆயுதமாகக்கொண்டு ராணுவ வலிமைகொண்ட ஆட்சியை அகற்றியவர் மகாத்மாகாந்தி. அவருக்கு இந்திய விடுதலை எப்படி முக்கியமானதாக இருந்ததோ அந்த அளவு விடுதலை பெறும் பாதையும் முக்கியமாக இருந்தது. அந்த காந்தியடிகளின் தத்துவம் இன்று இந்தியாவை ஒரு அமைதிப்பிரதேசமாக மாற்றியுள்ளது. இந்தியாவில் படித்தவர்கள் அதிகமாக இல்லாவிட்டாலும் மக்கள் எந்த நேரத்தில் எத்தகைய தலைவனைத்தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற அறிவும் ஆற்றலும் கொண்டவர்கள். அவர்கள் சமாதானத்தை அடிப்படையாகக்கொண்ட இந்திய நாட்டினைப் பெற்றிருக்கிறார்கள். உலகத்திலேயே அமைதியான நாடாக அது உள்ளது. அதிலும் தமிழ்நாடு அமைதியில் சிறந்த மாநிலமாகத் திகழ்கிறது. அமைதி வழியினை போதித்த காந்தியின் வாழ்வு நமக்கெல்லாம் பாடமாக அமையவேண்டும்''.

[காந்திகிராமப் பல்கலைக் கழகத்தில்
மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர்
திருமிகு இராம. வீரப்பன் அவர்கள்
“சமயமும் சமாதானமும்'' என்ற தலைப்பில்
ஆற்றிய உரையிலிருந்து.]

# அன்னதானம்

திருமுருக கிருபானந்தவாரியார்

உலகத்திலுள்ள மக்கள் வீடுபேறடைவதற்குச் சாதனமாக இருந்து உபகரிப்பது அறம் ஒன்றேயாம். நாம் சம்பாதித்த பொருள் இந்த சென்மத்தில் மட்டும் உதவி செய்யும். நாம் செய்யும் அறமோ மறுமைக்கும் வந்து உதவி செய்யும்.

''பொங்கார வேலையில் வேலைவிட்
டோனருள்போ லுதவ
எங்காயினும் வரும் ஏற்பவர்க் கிட்டது;
இடாமல் வைத்த
வங்கார மும்உங்கள் சிங்கார வீடு
மடந்தையருஞ்
சங்காத மோகெடு வீருயிர் போமத் தனி
வழிக்கே''

என்று நம் பரமாசாரிய மூர்த்திகளாகிய அருணகிரிநாத சுவாமிகள் உபதேசித்துள்ளார். எத்தேசத்தில், எக்குலத்தில், எந்தப் பிறப்பில் பிறந்தாலும் நாம் இப்பொழுது இங்கு செய்யும் அறம் பின்தொடர்ந்து வரும். அதனாலன்றோ ஔவைப் பிராட்டியார் நமக்கு உபதேசிக்க வந்த போது முதலில் ''அறஞ்செய விரும்பு'' என்று வற்புறுத்தியுள்ளார். அந்த அறமாவது பலதிறப்பட்டுளது. அவற்றில் தானம், தருமம் என்ற இருவகை சிறந்து விளங்குகின்றன. இந்த இருவகையில் முதலாவதாக நின்ற தானத்தில் பூதானம், கோதானம், வஸ்திரதானம், கன்னிகாதானம், சுவர்ணதானம் எனப்பலப்பல கிளைகளுண்டு, இவற்றுள் தலைசிறந்து விளங்குவது அன்னதானம் ஒன்றேயாகும். இதனை எல்லாச் சமயத்தவரும், எத்திறப்பட்டோரும் சங்கை இன்றி ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதற்குச் சமமானது முன்னுமில்லை. பின்னுமில்லை. எதனால் அன்னதானம் உயர்ந்தது என்பதைச் சிறிது ஆராய்வோம்.

உயிரானது கிருத யுகத்தில் எலும்புகளைப் பற்றி இருந்தது. திரேதாயுகத்தில் மாமிசத்தை பற்றி இருந்தது. துவாபர யுகத்தில் இரத்தத்தைப் பற்றி இருந்தது. கலியுகத்தில் அன்னத்தைப்பற்றி இருக்கிறது.

க்ருதே த்வஸ்திகதா: ப்ராணா த்ரேதாயாம்
மாம்ஸ மாச்ரிதா:
த்வாபரே ருதிரே சைவ கலௌது அன்னா
திஷீஸ்திதா;

—ஸ்ம்ருதி முக்தாபலம்.

ஆதலால் உயிர்கள் அன்னத்தைத்தான் முக்கிய ஆதாரமாகக்கொண்டு வாழ்கின்றன. பசித்தோருக்கு அன்னத்தைக் கொடுத்தால் உயிரைக் கொடுத்தது போலாகும்.

குஷ்டம், க்ஷயம், சூலை முதலியவைகளில் எத்துணைக்கொடிய நோய் ஒருவனுக்கு வந்து வருத்தினாலும், சில காலமாவது உயிர் வாழலாம். பசி என்னும் கொடியநோய் ஒருவனுக்கு வந்து சேர்ந்தால் சிறிது நேரமாவது உயிர் வாழமுடியுமா? பசி நோய் வந்த காலத்து எவ்வளவு சிரமம் உண்டாகிறது? கண் பஞ்சடைகிறது. காதடைக்கிறது. தலை சுற்றுகிறது. வயிறு ஒட்டிப்போகிறது. கால்கள் தடுமாறுகின்றன. அகக் கருவிகளாகிய மனஞ் சோர்வையடைகின்றன. புத்தி தடுமாறுகிறது. உயிர் துடிக்கிறது. கருவி கரணங்களெல்லாம் தத்தஞ் செயல்களினின்றுந் தவிக்கின்றனவல்லவா? அத்தகைய கொடிய பசியை ஆற்றுவதைக் காட்டிலும் சிறந்த தருமம் மூன்று உலகத்திலும் கிடையாதென்பது உறுதி. பசியென்னும் நோயை அன்னம் என்கிற மருந்தைக்கொடுத்து நீக்க வேண்டும். பசியால் களைத்து வந்தவனுக்குச் சிறிது அன்னங்கொடுக்க அதை அருந்திய வுடனே அவன் முகம் எவ்வளவு பொலிவடைகிறது. மனம் எவ்வளவு ஆனந்தத்தை யடைகிறது? ஆன்மா எவ்வளவு சாந்தியடைகிறது. சிந்தியுங்கள், அப்போது அன்னம் கொடுத்த

வனுக்கு எவ்வளவு புண்ணியம் உண்டாகிறது? பசியாற்றுவதைக் காட்டிலும் சிறந்த தவம் வேறு இல்லை.

ஒருவனுக்குப் பசிப்பிணி வந்தபோது, நான் போய் ஒருவரை ஒன்றுங் கேட்கமாட்டேன்; ''ஏற்பதிகழ்ச்சி'' என்று சொல்லிக் கொண்டிருந்த மானமும் நீங்குகிறது. நான் உயர்ந்த குலம், ஆசாரத்திற் சிறந்தவன், அவன் தாழ்ந்தவன் என்று பாராட்டுகிற குலமும் நீங்குகிறது. கல்வி கேள்விகளிற் சிறந்து நுண்ணிய மதியுடன் திகழ்கின்றோரது கல்வி அறிவும் மங்குகிறது; காண்பார்களது கண்களைக் கவரும் கட்டழகும் குன்றுகிறது. பொருளுடையோன் என்கிற பெருமிதமும் பெயர்கிறது; தானம் புரிகின்ற தன்மையும் தவிர்கிறது; உணர்ச்சியும் ஒழிகிறது; தேன் போன்ற இனிய சொற்களையுடைய மாதர் மேல் மனத்தை வைத்து கங்குல் பகலாய்க் கண் துஞ்சாது கலங்குகின்ற காம வேட்கையும் கடிதில் விலகுகிறது.

மானங்குலங் கல்விவண்மை அறிவுடைமை

தானந் தவமுயர்ச்சி தாளாண்மை-தேனின்

கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்

பசிவந்திடப் பறந்துபோம்

—ஔவைப்பிராட்டியார்.

பசி இன்னும் என்னென்ன விபரீதங்களை யுண்டுபண்ணுகிறது. அரிதிற் பெற்ற பிள்ளையை விற்கச்செய்கிறது. தவமிருந்து பெற்ற பிள்ளையைத் தூக்கிக்கல்லின் மேலறையச் செய்கிறது. எல்லாம் கடந்த ஞானிகளாக காட்டிலிருந்து கருத்தை யொடுக்கிக் கனலிடை நின்று கடுந்தவமியற்றும் முனிவர்களையும் கூட காயோ கனியோ கந்த மூலங்களோ இலையோ சருகோ கிடைக்குமா என்று தேடி உண்ணச் செய்கிறது. முற்றுந் துறந்தவரையும் வீடுதேடி பிச்சை வாங்கச் செய்கிறது. விரதமுங் கிடையாது; பலமுங்கிடையாது என்று விரத நாளினுங் கூட மூன்று வேளை தலையணைக்குப் பஞ்சடைக்கிற மாதிரி வயிற்றில் சோற்றைத் திணிக்கச் செய்கிறது. விரத மிருக்கிறவர்களை பல ஆகாரங்களாகப் பழமாகப் பாலாக வயிறுபுடைக்க உண்ணச்செய்கிறது. சிவபெருமானால் உபதேசிக்கப்பெற்ற பட்டினத்தடிகளும் பசியால் வாடி ஒருவன் வீட்டிற்கு உணவை நாடிச் செல்ல நேர்ந்தது. அவன் சுவாமிகளைத் துன்புறுத்த அக்கால் சுவாமிகள் மனம் வருந்தி,

''பூணும் படிக்கல்ல பொன்னுக்குத்
தானல்ல பூமிதனைக்
காணும் படிக்கல்ல மங்கையர்க் கல்லநற்
காட்சிக்கல்ல
சேணுங் கடந்த சிவனடிக் கல்லவென்
சிந்தை கெட்டு
சாணும் வளர்க்க அடியேன் படுந்துயர்
சற்றல்லவே''.

என்று கூறியுள்ளார். அருணகிரி சுவாமிகளும் ''நீள் பசியவிக்கக் கனபானம் வேணும்'' என்றனர். வேறொரு வழியின்றி பசி தாகத்தால் மெலிந்தவர்களை அன்போடும் அருளோடும் அன்னமீந்து ஆதரிக்க வேண்டும். நிலத்தில் ஒரு விதை விதைத்தால் அது ஒன்றுக்கு ஆயிரமாக விளைகிறதல்லவா? அது போல் ஏழைகள் வயிற்றில் கொடுத்த அன்னம், மறுமைக்கு ஆயிர மடங்காகப் பெருகி நமக்கு நன்மையை நல்குகிறது. சென்ற வருடத்தில் விளைவித்த தானியத்தையல்லவா இப்போது உண்ணுகிறோம். அதுபோல முன் ஜென்மத்தில் செய்த நன்மையினால் நாம் இப்போது, சுகத்தை அனுபவிக்கிறோம். இப்போதும் நன்றாகப் பயிரிட்டு விளைவித்தால் அல்லவா அடுத்த வருடத்தில் கவலையற்றிருக்கலாம். இப்போது நாம் நன்மையைச் செய்தாலல்லவா மறு பிறவியில் சுகம் பெறலாம். நாம் எவ்வளவோ பாடுபட்டு செல்வத்தைத்தேடுகிறோம். அங்ஙனம் உடல் வருந்தி சேகரித்தபொருளை இவ்விடத்திலேயே வைத்துவிட்டுப் போகலாமா? அந்தச் செல்வத்தை நல்ல சேமநிதி நிலையத்தில் (பண்டாபீஸ்) போட்டு வைத்தால் நாம் போகும் இடத்திற்கு அது உதவுமல்லவா? இப்போது நாம் தேடிய பொருளை சேமித்து வைக்க வேண்டிய இடம் யாது? எங்கு வைத்தால் ஒன்றுக்கு ஆயிரமாக வரும்? என்று ஆராய்ந்து பார்த்தால் அடியார்கள், ஏழைகள் வயிறுதான் நல்ல சேமநிதி நிலையம் (பண்டாபீஸ்). அதற்கு தலைவர் தரும தேவதை. அது எப்பொழுதும் கெடாது. ஆனால் ஏழைகள் வயிற்றில் பணமாகப் போட முடியுமா? முடியாது. பின்னர் என்ன செய்யவேண்டும்? அன்னமாக மாற்றிப் போடவேண்டும். அப்படிப் போட்டு வைத்தால் அது பிறவிகள் தோறும் தொடர்ந்துகொண்டே வரும். இப்போது ஒருவன் சுகமாக இருக்கிறான் அவனைக் கண்டு நாம் சொல்லுகிறோம். ''கொடுத்து வைத்தவன்'' என்கிறோமல்லவா? எங்கு கொடுத்து வைத்தான்? அடியார்களுக்கும் ஏழைகளுக்கும் கொடுத்து அவர்கள் வயிற்றில் வைத்தான்; அது இப்போது வந்து சேருகிறது. எந்தவேலையும் செய்யாமல் சுக ஜீவியாயிருக்கிறான். பல வேலை செய்தும் கால் வயிற்றுக் கஞ்சி கூடக் கிடைக்காமல் சிலர் துன்புறுகிறார்கள், என்ன காரணம்? முன் பிறவியில் அறஞ்செய்யாதவர்களல்லவா? இவைகளை எல்லாம் நோக்கியே தெய்வப்புலவர்

''அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி''

என்று திருவாய் மலர்ந்தருளினர். ஆன்ம திருப்தியை யுண்டு பண்ணுவது அன்னதானம் ஒன்றே

யாம். இத்தகைய சிறந்த அன்னதானத்தைச் செய்து அரச செல்வத்தை யடைந்த ஓர் வரலாற்றை விளக்குவாம்.

வடநாட்டில் ஒரு சிற்றூரில் தரும குணமே ஒரு வடிவெடுத்தாற்போன்ற ஓர் அம்மையார் இருந்தார். அவ்வம்மையார் தன் வீடுதேடி வந்தவர்களுக்கு எவ்வாற்றானும் பசியாற்றுவதையே முக்கிய அறமாகக்கொண்டார். நாயகன் வானாடு புகுந்த பின் தன் மகனுடன் வாழ்ந்திருந்தார். பரோபகார சிந்தை யுடைய அப் பணிமொழி யம்மையார் மிடியென்னும் பகையினால் வருந்தினார். என் செய்வார் பாவம்; வருகிற அகதிகளுக்கு அன்னங்கொடுப்பதற்கு என்செய்வேனென்று ஏங்கினார். வேறு வழியின்மையால் பிச்சை எடுத்தாவது வந்தவர்கள் பசியாற்றுவேனென்று எண்ணினார். (திருமங்கை மன்னர் வழிப்பறிசெய்தும் அன்ன தானம் புரிந்தாரல்லவா) இவ்வாறு உன்னிய அம்மாது சிரோன்மணி ஐயமேற்பாராயினார். அதனால் வரும் அரிசியை அமுதாக்கி ஏழைகளது பசி நோயை நீக்கினார். வறியோர்களது பசியை யாற்றுவதையே உடம்பெடுத்ததன் பயனாக எண்ணினார். எளியவர்க்குக் கொடுத்து மிகுந்த அன்னத்தை மகனும் தானும் உண்டு பசியாறினர்.

அவ்வம்மையாரது குமாரன் அன்னையை நோக்கி, ''அம்மா! தாங்கள் ஒவ்வொரு நாளும் உடல் வருந்தி, பிச்சையெடுத்துவருகிற அரிசி முழுவதையும் சமைத்துப்பசித்தவர் புசிக்கத் தருகிறாயே. கொஞ்சம் எடுத்து மிகுதி செய்து வைத்தால் பிற்காலத்திலாவது, நோய்வாய்ப் பட்ட காலத்திற்காவது உதவுமல்லவா?'' என்று கூறினான். அம்மையார் ''குழந்தாய்! பொறுமையாகக்கேள், நமக்கு என்று சேர்க்கின்ற பொருள் நம்முடையதாக ஆகாது. பிறருக்கென்று கொடுத்தது தான் நம்முடையதாக ஆகும். வறியவர்கள் வயிறுதான் பெரியநிலம். நமக்குக் கிடைக்கிற பொருள் முழுவதையும் ஏழைகள் வயிற்றில் வைக்க வேண்டும். வீட்டில் வைத்தால் கள்வர்கள் அபகரித்துக்கொள்வார்கள். வீட்டில் வைத்தால் அது அதிகமாகவும் பெருகாது: அகதிகளுக்குத் தருகிற எந்த ஒரு பொருளுண்டோ அதை ஒருவரும் அபகரிக்க முடியாது. ஒன்றுக்கு ஆயிரமாக வளரும், பட்சிகளாவது மிருகங்களாவது நாளைக்கு வேண்டுமென்று சேமித்துவைக்கின்றனவா? அவைகள் எப்போதாவது நாளைக்கு என்செய்வோமென்று நெஞ்சம் கவல்கின்றனவா? கருவுக்குள் இருக்கிற சிசுவுக்கும் கல்லுக்குள்இருக்கும் தேரைக்கும் உணவு தந்து காப்பாற்றுகிற கருணாமூர்த்தியாகிய கடவுள், உருப்பெற்ற நம்மை மட்டும் காவாதொழிவானோ? மகனே! பசியாற்றுவதைக் காட்டிலும் சிறந்தபேறு வேறு கிடையாது. இதை எக்காலத்தும் மறவாதே. எனக்குப் பிறகு இதை விடாது கடைபிடித்து வருவாய்'' என்று கூறினார்.

அப்பொன்மொழிகளைக் கேட்ட குமாரன் தாயை நோக்கி ''அன்னையே! 'தாய் சொல் துறந்தால் வாசகமில்லை' என்பதை நான் நன்றாக உணர்ந்திருக்கிறேன்; நின் சொல்லே வேத மொழிகளாகும். அந்த அன்னதானத்தின் பலனை விளக்கமாகக் கூறவேண்டும் என்றான். அன்னை ''மைந்தா! அன்னதானத்தின் பலன் என்னாற் கூறுந்தரமுடையதன்று. அருங்கானகத்தில் தவமியற்றும் அருந்தவ அடிகளை

---

## அரசமரமும் மும்மூர்த்திகளும்

புத்தபகவான் ஞானம் பெற்றது போதிமரமாகிய அரசமரத்தினடியில்தான். அதன் அடிப்பகுதியில் நான்முகனும், நடுப்பகுதியில் திருமாலும், உச்சிப்பகுதியில் சிவபெருமானும் தங்கியிருப்பதாக ஐதீகம். அரசமரத்தை வணங்கினால் மும்மூர்த்திகளையும் வழிபட்டதாகும் என உரைக்கின்றது திருவாரூர்ப் புராணப்பாடல்.

தங்குவன் அதன தாதிதனிற்
சதுமுகன் என்று ஓரார்
தங்குவன் சங்கம் ஏந்தி
அதனடு தனில்என்று ஓரார்
தங்குவன் அதன துச்சிச்
சங்கரன் தானென் றெண்ணார்
மங்கல மரமீ தென்றே
வலஞ்செயார் வணக்கம் செய்யார் (884)

---

சென்று வினவி யுணர்வாயாக'' என்றனள். உடனே குமாரன் தாயை வணங்கி, ''வனஞ் சென்று முனிவர்களை கண்டு கேட்டுத் தெரிந்து வருகிறேன். விடை தருவாய்'' என்றனன். அன்னை மகனைத் தனித்து வனத்திற் கனுப்ப அஞ்சினாளெனினும், அன்னதானத்தின் பலனைத்தெரிந்து கொள்வது அவசியமென்று நினைத்து 'அருமைக் கண்மணியே! அங்ஙனமே சென்று அருந்தவ முனிவரையடுத்து சந்தேகந் தெளிந்து வருவாய். நினக்கு வழியில் இன்னலின்றி இறைவன் காத்தருள்வான்'' என்று ஆசி கூறி அனுப்பினாள்.

அந்த இளங்குமாரன் தாயாரை மும்முறை வணங்கி அவளது பூர்ணமான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு வனம் புகுந்தான். நடுக் காட்டை யடைந்தான்; கதிரவன் மேற்கடலில் மூழ்கினான்.

இருள் சூழ்ந்தது. எங்கும் மிருகங்களின் ஒலியாக இருந்தது. அன்னையின் வார்த்தையை உன்னிய தனயன் இறைவன் நம்மைக்காத்து இன்னருள் புரிவானென்று துணிந்து சிவநாமத்தையுரைத்துக் கொண்டே சென்றான். கங்குலானபடியால் எங்கு தங்குவதென்று அறியாது இடர்ப்பட்டான். அக்கால் அங்கோர் பரண் புலப்பட்டது. (பரண் என்றால் விலங்குகளினால் துன்பம் நேராத வண்ணம் பூமிக்குமேல் உயரத்தில் கட்டிக்கொண்டிருக்கும் சிறுவீடு) அதனருகே சென்றான். அப்பரணில் ஒரு வேடன் தன் பத்தினியுடன் வாழ்ந்து கொண்டிருந்தான். பகலெல்லாம் வேட்டையாடி வேண்டிய உணவைத் தேடிவந்து இரவில் அதன் மீது தன் மனைவியுடன் நித்திரை புரிவது வழக்கம். பரண் மீதிருந்த வேடன் பரணை நாடி வரும் இளங்குமரனைக் கண்ணுற்று இறும்பூதுற்றான். ''மிருகங்கள் சஞ்சரிக்கும் இப்பெருங் கானகத்தில் பொழுதுபட்ட இந்தச்சமயத்தில் இங்கு வருகின்ற இந்த இளமகன் யாவனோ?'' எனக் கீழே இறங்கி, அந்தக் குமரனை எடுத்து அணைத்து ''குழந்தாய்! என்னே நின் மனத் துணிவு? ஆயுதபாணிகளும் பகலில்கூட இவ்விடம் வர அஞ்சுவார்களே! நீயோ இளம் பிள்ளை, இரவு வந்த இந்தச்சமயத்தில் இக்காட்டகத்திற்கு எதைக் கருதி நண்ணினாய்? மிருகங்கள் உன்னை உபத்திரவம் புரியவில்லையா? எவ்வாறு துஷ்ட மிருகங்களினின்று நீ தப்பித்துக் கொண்டு வந்தாய்? நின் உறைவிடம் யாது? அறிய விரும்புகிறேன். நின்னைப் பாதுகாக்க என் மனம் பரிதவிக்கிறது. விரைவிற் பகருவாய்'' என்றனன்.

அது கேட்ட குமாரன் ''ஐயா! நினது பரிவுக்கு மிகவும் மகிழ்கிறேன். புலன்களை யடக்கி நலம்பெறத் தவமியற்றும் மாதவரைக் காண வந்தேன். தாய் போற் பரிந்து தமர் போன்று உபசரிக்கும் தயாளுவாகிய நின்னைக் கண்டு, இன்னல் தீர்ந்தேன்'' என்றனன்.

வேடன் ''குழந்தாய்! சந்தோஷம்; நின் வரவு நல்வரவு ஆகுக. எங்களோடு நீயும் இருந்து இந்த இரவை இனிது கழிப்பாய்'' என்று தனக்கும் தன் பத்தினிக்கும் வைத்திருந்த உணவை மூன்று கூறாக ஆக்கி அப்பிள்ளைக்கு ஒரு பங்கைக் கொடுக்க எத்தனம் புரிகையில் அவ் வேடன் பத்தினியாகிய வேட்டுவமாது மிகவுஞ் சினங்கொண்டு, ''வந்தவனுக்காக என் உணவை குறைத்துக்கொள்ள மாட்டேன்; இரண்டாகப் பகிர்ந்து என்பங்கை எனக்குக்கொடுத்து விட்டு, உன்பங்கை இஷ்டமிருந்தால் அவனுக்குக் கொடு'' என்று கூறினாள். 'வேடன் அங்ஙனமேயாகுக' என்று அந்த உணவை இரண்டாக பகிர்ந்து ஒரு பாகத்தைப் பத்தினிக்குக் கொடுத்துவிட்டுத்தன் பாகத்தை அந்தக் குமாரனுக்குப் பரிவோடு கொடுத்தான். பசித்திருந்த அந்தப் பிள்ளை வேடனால் தரப்பட்ட தேனையும் தினைமாவையும் நெருப்பில் சுட்ட கிழங்கையும் உண்டு உள்ளங்களித்தனன். வேடன் மூன்று கை தண்ணீர் பருகி உபவாசியாயிருந்தான்.

பின்னர், வேடன் ''அப்பா! கீழே படுத்தால் மிருகங்கள் கொன்றுவிடும்; இப்பரண் மீது ஏறிப்படுப்பாய்'' என்று அச்சிறுவனை பரண்மீதேற்றி தனக்கும் தன் பத்தினிக்கும் மத்தியில் படுக்கவைத்தான். வேடன் மனைவி அதுகண்டு கோபித்து, ''இவன் என் பக்கத்தில் படுக்கக்கூடாது! பாதியிடத்தை எனக்குக் கொடுத்துவிட்டு மற்றைப் பாதியிடத்தில் அவனும் நீயும் படுத்துக்கொள்!'' என்றாள். வேடன் அவளது துர்க்குணத்தை நினைத்து நெஞ்சம் புண்ணாகி, பாதியிடத்திலே பத்தினி பக்கத்தில் தான் படுத்துக்கொண்டு சிறுவனை ஓரத்திற் படுக்கவைத்து, தூக்கத்தில் விழாவண்ணம், சிறுவனைக் கரத்தால் அணைத்துக் கொண்டு தூங்காது விழித்துக்கொண்டிருந்தான். வேடன் மனைவியும் சிறுவனும் தூங்கி விட்டார்கள். நடுராத்திரியாயிற்று. வேடன் தன் பத்தினி தூங்கிவிட்டதைப் பார்த்து, அச்சிறுவனை நடுவில் மெல்லப்படுக்கவைத்து விட்டுத் தான் ஓரத்தில் படுத்து நித்திரைசெய்தான். வேடப்பெண் நித்திரை தெளிந்தாள். எங்கிருந்தோ வந்த ஒரு பயனுக்கு தன் உணவைக் கொடுத்துவிட்டுத் தன் கணவன் பட்டினி கிடப்பதை நினைத்து ''இந்தப்பையன் இருந்தால் நமக்கு இடைஞ்சல், இவனைக் கீழே தள்ளி விடவேண்டும்'' என்று தீர்மானித்தாள், இருளானபடியால் தன் சமீபத்தில் படுத்திருக்கிறது நாயகன்தான் என்று எண்ணி ஓரத்தில் படுத்திருந்த நாயகனை மெல்ல உருட்டி விட்டாள். நன்றாக தூங்கிக்கொண்டிருந்த வேடன் கீழே விழுந்தான். பரண்டியிற் காத்துக்கொண்டிருந்த மிருகங்கள் அவ்வுத்தமனான வேடுவனை வாயில் போட்டுக்கொண்டன. வேடன் மனைவி 'நம்மைப்பிடித்த சனியன் தொலைந்தது' என்று உள்ளம் உவந்தாள்.

பொழுது புலர்ந்தது. குயில்கள் கூவின. வேட்டுவமாது கண் விழித்து எழுந்தாள்; தன் பக்கத்தில் சிறுவன் படுத்திருக்கக்கண்டு ''நம் பக்கத்தில் நாயகனல்லவா படுத்திருந்தான்; இச் சிறுவன் எப்படி நம் பக்கம் வந்தான்'' என்று அலறினாள். நம்முடைய கெடுமதி நம்மையே கெடுத்தது என்று கூக்குரலிட்டாள். சிறுவன் எழுந்து நிகழ்ந்ததை யுணர்ந்து உளம் வருந்தி ''ஏ பாவி! உத்தமனான வேடனைக் கொன் றனையே, என்னே நின் மூடமதி? சீ உன்முகத் தில் விழித்தாலும் தீமை வரும்'' என்று வெறுத்து, அங்கிருந்து புறப்பட்டு நீராடி தவ முனிவரைத் தேடிக்கொண்டு செல்வானாயி னான். ஓர் தபோவனத்தை யணுகினான். குளிர்ந்த காற்றும், நறுமலர் வாடையும் மணல் மேடையும் இருக்கக்கண்டு அச்சோலையில் நுழைந்தான். ஆங்கோர் தாமரைத்தடாகக் கரையில் பர்ணசாலையில் சித்திரப்பதுமை போல் நின்று தவம் புரியும் ஓர் முனிபுங்க வரைக் கண்டான். கண்ணுங்கருத்துங்களிகூர்ந் தான். கைகூப்பி நின்று கொண்டிருந்தான்.

நெடுநேரத்திற்குப் பின் முனிவர் கண் விழித்தார். எதிரில் அஞ்சலியஸ்தனாக நிற் கும் இளஞ் சிறுவனைக் கண்டார். ஆசி கூறி னார். வந்த காரணம் யாதென வினவினார். சிறுவன் பெரியார் தாள்மீது வீழ்ந்து, ''மாத வரே! அன்னதானத்தின் மகிமையைக் கூற வேண்டு''மென்று விண்ணப்பம் புரிந்தான். முனி வர் மகிழ்ந்து ''பிள்ளாய்! நின்கேள்வி மிகவும் அருமையானது; அதனை யான் கூறுதற்குச் சக்தியற்றவனாயுளேன். அன்ன தானத்தின் பலனை நீ உணர்ந்துகொள்ள வேண்டுமென்று பெரிதும் விழைகிறாய். ஆதலால் நீ காசி நக ரத்தை யரசாளுகின்ற மன்னனுக்குபத்து மாதங் கழித்து காலை 6 மணிக்கு ஓர் ஆண் மகவு தோன்றப்போகிறது. நீ சென்று குழந்தை பிறந்தவுடனே கைபடாமல் தங்கத் தட்டில் ஏந்தி வரச்செய்து இச்சந்தேகத்தை வினவுதி; அக் குழந்தை தெளிவாகக் கூறும். ஐயம் வேண்டாம். செல்லுதி'' என்றனர்.

சிறுவன் அப்பெரியவர் வார்த்தையை சிர மேற்கொண்டு மீண்டும் அவரை வணங்கிவிடை பெற்று காசியம்பதியை நண்ணி மன்னவன் மாப்பேரவைக்குச் சென்றனன். அச்சிறுவனை அரசன் வரவேற்று ''நீ எங்கிருந்து வருகிறாய்? நின் விருப்பம் யாது? கூறுக!'' என்றனன். குமா ரன் ''கொற்றவா நினக்கு ஓர் ஆண் மகவு பிறக்கப்போகிறது,'' என்று கூறி அக்குழந்தை பிறக்கும் காலத்தையும் குறிப்பிட்டான். மன் னன் கேட்டு வியப்புற்று, அக்குழந்தை யுதிக்கும் வரை அச்சிறுவனுக்கு உணவு முதலியன தந்து உபசரித்து வந்தான்.

பின்னர் குறிப்பிட்ட காலத்தில் மன்னன் மனைவி ஓர் அழகிய ஆண்மகவைப் பெற்றனள். மன்னன் கட்டளைப்படி தாதிகள் கைபடாமல் குழந்தையைத் தங்கத்தட்டில் ஏந்தி வந்தார் கள். பூர்ண சந்திரன் போல் அக்குழந்தையின் முகம் பொலிவுற்று விளங்கியது. முனிவர் அரு ளால் அக்குழந்தைக்கும் பூர்வஞானம் வந்தது. குழந்தை, வந்த சிறுவனை நோக்கிப் புன்முறு வல் கொண்டு, ''அப்பா! சேமமா? இங்கு எதை உத்தேசித்து வந்தாய்? நினக்கு யாது சந்தேகம். விரைவில் கூறுக'' என்றது. ஆண் டிருந்தோர் அனைவரும் பிறந்த குழந்தை பேசு வதைக் கண்டு பேராச்சரியம் அடைந்தனர். சிறுவனும் முன்பின் பார்த்தது போல் இக் குழந்தை குசலப்ரச்னம் புரிகிறதே என்று வியப் புற்றுக் குழந்தையை நோக்கி ''அன்னதானத் தின் பலனை கூறவேண்டும்'' என்றனன்.

குழந்தை ''அப்பா! நான் முன் ஜென்மத் தில் காட்டில் வேடனாக இருந்தேன். நீ என் னிடம் வந்தாய். நின்க்கு இடம் தந்து நான் உண்ணுகின்ற அற்ப உணவை உனக்குத்தந் தேன். நீ உண்டு மகிழ்ந்தாய். பசித்துவந்த நினக்குச்சிறிது உணவு தந்ததன் பயன் தாழ்ந்த பிறப்பாகிய வேட சரீரம் நீங்கி உத்தம குலத் தில் நல்ல சேத்திரத்தில் மன்னனுக்கு மகனாக உலகை அரசாளப் பிறந்தேன் என்றால் சதா காலமும் பலருக்கு அன்னதானம் புரிகின்ற அன்னையின் பெருமையை யானோ உரைக்குந் தகுதியன்? எனக்கு அஃது எளிதோ? அன்ன தானத்தின் சிறப்பை நீயே ஆராய்ந்தறிக' என்று கூறி வாய் மூடிற்று. அது கேட்ட மன் னன் முதலிய அனைவரும் அதிசயமுற்றனர்.

சிறுவன் அதுகேட்டு அளவற்ற மகிழ்ச்சி யையடைந்தான். மன்னன் அச்சிறுவனை நோக்கி, ''மஹாநுபாவா! நின்னால் நாங்கள் கேட்பதற்கு அருமையான அன்னதானத்தின் பலனைக் கேட்டு மகிழ்ந்தோம். ஆவி ஈடேறும் வழி அன்னதானமே என்று உணர்ந்தோம்.'' எனக்கூறி வேண்டிய தனத்தைத் தந்து ஓர் தேரி லேற்றி, தக்க துணையுடன் அவன் தாயிடம் அனுப்பினான். இவ்வளவு சிறப்புடன் சென்ற சிறுவன் தன் ஊர் சென்று தாயார் திருவடியில் வீழ்ந்து நிகழ்ந்தன யாவும் கூறினான். அவ்வுத் தமி கேட்டு மனமகிழ்ந்து மகன் கொணர்ந்த செல்வத்தையெல்லாம் ஏழைகளுக்குப் பசியாற் றும் அன்னதானத்திலேயே செலவழித்து மக னுடன் அன்னதானத்தை இடைவிடாது புரிந்து இனிது வாழ்ந்தனள்.

# திருநள்ளாறு தலவரலாறு

டி. எஸ். சிட்டிபாபு பி.ஏ., (ஹானர்ஸ்)
சென்னை.

திரு நள்ளாறு என்னும் பதி, புதுவை அரசின் காரைக்கால் பகுதியில் காரைக்கு சுமார் ஏழு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. அவ்வூருக்கு இரயில் மூலமாகவும் பேருந்து மூலமாகவும் செல்லலாம். அப்பதியைத் தரிசிக்க வருவோர்கள் பெரும்பாலும் தனிப்பேருந்துகளில் வந்து தரிசித்துச் செல்கின்றனர். அப்பதியில் எழுந்தருளியிருக்கும் இறைவனின் பெயர் தர்ப்பாரண்யசுவாமி; இறைவியின் பெயர் போக மார்த்த பூண் முலை நாயகி. தர்ப்பைக்காட்டில் இறைவன் உறைந்ததால் தர்ப்பாரண்யசுவாமி என்ற காரணப்பெயர் பெற்றார். இப்பதியில் மற்ற பகுதிகளைப்போல் ஒன்பது கிரகங்களும் ஒருங்கேயில்லை: ஆனால், சனி பகவான் மட்டும் இறைவனுக்கு எதிரில் தனி இடம் பெற்றுள்ளார்.



நளன் சரிதம் பலருக்கும் தெரிந்ததே. அவன் தன் அரசை இழந்தான்; மனைவியுடன் காடேகினான்; தன் ஆடையையும் அன்னமாய் வந்த சனிபகவானிடம் பறிகொடுத்தான். கானகத்துக்காரிருளில் காதலியைக் கைவிட்டுப் போனான்; நெருப்பில் சிக்குண்ட கார்கோடகனை மீட்க, அது தன்னைத்திண்ட, தன் உரு மாறிப்போனான். அயோத்தி அரசனுக்குப்பணியாற்றினான். அவன் மனைவி தமயந்தி கணவனுடன் காடேகி, கணவனைப் பிரிந்து, வனத்தில் பல இன்னல்களுக்காளாகி கடைசியில் தன் தந்தை ஆளும் ஊர் அடைந்தாள். தன் தந்தையின் உதவியால் தமயந்தி, தன் கணவனோடு இணைந்தாள். ஆனால் நளனுக்கு சதா மனதில் ஒரு அச்சம் இரவிலும் பகலிலும் இருந்து கொண்டே வந்தது. பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடி, புண்ணியப் பதிகளுக்குச் சென்று வழிபடும், நளனுக்கு மன அச்சமும் குழப்பமும் நீங்கியபாடில்லை. அப்பொழுது பரத்வாச முனிவர் நளனைக்கண்டு, அவனைப் பொன்னி நதியின் தென்கரையிலுள்ள திருநள்ளாறுஎன்ற பதியில் பிரமன் அமைத்துள்ள பிரம்ம தீர்த்தத்தில் நீராடி, நாணல் சோலைகளுக்குள்ளே கோயில் கொண்டிருக்கும் சிவலிங்க மூர்த்தியை கண்டு வழிபட்டால் அவனுடைய இன்னல்கள் அனைத்தும் நீங்கிவிடும் என்றுரைத்தார். அவர் கூறியபடி நளன் பிரம்ம தீர்த்தத்தில் நீராடி, ஆலயத்தின் முன், முறைப்படி வணங்கி கோபுரவாயிலில் புகுந்ததும் அவனிடமிருந்த மன அச்சமும் குழப்பமும் அகலக்கண்டான். அவன் சிவலிங்கத்தை அணுகும்போது சனிபகவான் அவனைத் தொடர்ந்திருந்தால், சிவபிரானின் நெற்றிக்கண்ணால் எரிக்கப்பட்டிருப்பான் அல்லவா? நளன் உள்ளே சென்று சிவலிங்கத்தை அணுகி, அதற்கு ஆடை ஆபரணங்கள் சூட்டி, அபிடேகம், ஆராதனை அருச்சனை செய்வித்து, தமிழ்பாமாலைகளால் தோத்திரம் செய்து பேரின்பம் எய்தினான். சிவபெருமான் செழுஞ்சுடராய்த்தோன்றி நளனுக்கு என்ன வரம் வேண்டுமென்று கேட்டார். நளன் இறைவனை வணங்கி அவ்வூருக்குத் தன்பெயரிடல் வேண்டும் என்றும், தன் பெயர் கொண்ட தடாகம் ஒன்று ஏற்பட்டு அங்கு நீராடுவோர் சூனியம், ஏவல், வைப்பு, கிரகதோடம் முதலியவைகளிலிருந்து விடுபடவேண்டுமென்றும், தான் பெற்ற பேறு போல் அங்குவருவோர் அனைவரும் அடையவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டான். இறைவனும் அவன் வேண்டுகோளுக்கு இசைந்தார். திருநள்ளாறுக்கு நளபதி என்ற ஒரு பெயரும் உண்டு. நளதீர்த்தம் என்று ஒரு குளம் இப்பொழுதும் உள்ளது.

நளன் பெற்ற பேறை இப்பொழுது செல்பவர்களும் பெற்று வருகின்றனர். சனிபகவான் சிவபெருமான் முன்னிலையில் எவருக்கும் இன்னல்கள் இழைக்கமுடியாது; அதனால் திருநள்ளாறு ஆலயத்தில் தன்முன்புசனி பகவானுக்குத் தனி இடம் கொடுத்துள்ளார் சிவபெருமான்.

திருநள்ளாறில் தலவிருட்சம் தருப்பை. வெளிப்பிரகாரத்தின் வடக்கில் இன்றும், அதை காணலாம். தங்கள் எண்ணம் ஈடேற தருப்பைகளை இணைத்து வழிபடுவதுண்டு.

சனிபகவான் உலகோர் உய்ய இரண்டரை வருடங்களுக்கு ஒரு இராசியில் உறைவார். மகர கும்பராசிகள் அவருக்கு உரிய இராசிகள். அவருக்கு மிக உகந்த இராசி துலாம். இந்த இராசிகளில் சனி பகவான் புகும்போது சனி பகவானை தரிசிப்போர்க்கு எல்லாவித இன்னல்களும் நீங்கி சகல நன்மைகளும் கிட்டும். ஒரு இராசியிலிருந்து மற்றொரு இராசிக்கு சனி பகவான் செல்வதை சனிப்பெயர்ச்சி என்றுகூறுவர். 4.11.85 அன்று அதிகாலை மணி 2.18க்கு சனி பகவான் துலா இராசியிலிருந்து விருச்சிக இராசிக்குப் பிரவேசிப்பார். அவ்வமயம் பக்தர்கள் திரளாகச் சென்று சனிபகவானை வணங்கி நன்மைபெறுவார்களாக. வணங்குவதற்கு முன் சிலதைலமிட்டு நளதீர்த்தத்தில் நீராடி திலதீபம் போட்டு வணங்கவேண்டும்.

பிரம்ம தீர்த்தத்தின் மகிமையை கலிங்காதிபதி சரிதத்தாலும் அறியலாம். கலிங்க அரசர் ஒருவர் அசுவமேதயாகம் செய்ய எத்தனித்தார். வேள்வியைத்துவக்க வேதியர் ஆலோசனையை வேண்டினார். ஒரு பிராமண வேதியர், வாயிற்காவலனிடம் தன் வருகையை அரசரிடம் கூறுமாறு சொன்னார். அரசர் வெகுநேரம் வரையில் தன்னை அழைக்காததால், வந்த பிராமணர் கோபம்கொண்டு, அரசனையும் அவன் மனைவி மக்களையும் மதயானைகளாக மாறிக் காட்டில் திரியக் கடவர் என்று சாபமிட்டார். அரசனும் அவன் மனைவி மக்களும் சாபம் பெற்று மதயானைகளாக காட்டில் திரிந்து வந்தனர். அவ்யானைகள் யாரென்பதை உணர்ந்த நாரதர் யானையாயிருந்த அரசனை நோக்கி ''அரசே! உன் ஊழ்வினை உன்னை உறுத்து வந்து ஊட்டியுள்ளது. மாசி மாதம் பௌர்ணமியன்று தர்ப்பாரண்ய தலத்திற்குச்சென்று பிரம்ம தீர்த்தத்திவலைகள் உங்கள் மீது படின் உங்கள் இழந்த உருவம் மீண்டும்பெறுவீர்கள்'' என்று கூறிமறைந்தார். அவ்வாறே மாசிமகத்தன்று யானைகளாயிருந்த அரசனும் அவன் மனைவி மக்களும் திருநள்ளாறு சென்று பிரம்ம தீர்த்தத்தின் அருகில் இருந்தனர். அங்கு நீராடிவிட்டு, வந்தவர்கள் தலையையுலர்த்திக் கொண்டு போகும்போது சில திவலைகள் யானைகளின் மீது பட அரசனும் அவன் மனைவி மக்களும் மானிட உருவம் மீண்டும் பெற்றனர். அவர்கள் தர்ப்பாரண்யேசுவரரை வழிபட்டு இழந்த பேறை மீண்டும் பெற்றனர்.

திருநள்ளாறு சப்தவிடங்க தலங்களில் ஒன்று. விஷ்ணுபிரான் பிள்ளைப்பேறு வேண்டி சிவபிரானை நோக்கித்தவம் செய்தார். சிவபிரானும் இசைந்து பிள்ளைப்பேறு வழங்கினார். உமை தன்னை மதித்து விஷ்ணுபிரான் வணங்க வில்லையே என்று மனம் நொந்து, பிறக்கும் பிள்ளை உடனே இறந்துவிடும் என்று சாபமிட்டாள். மனமுடைந்த விஷ்ணுமூர்த்தி சிவபிரான் உமை முருகன் ஆகிய மூவரின், சோமாஸ்கந்த வடிவம் அமைத்து வழிபட்டு வந்தார். சிவபிரானும் உமையும் தோன்றி பிறக்கப்போகும் பிள்ளை இறந்தாலும் சகல உயிர்களிடத்தும் ஆட்சி செலுத்துவான் என்று கூறிமறைந்தார். விஷ்ணுபிரான் தன் மார்பிலேயே சோமாஸ்கந்தமூர்த்தியை இருத்தி பூசித்திரந்தார். அச்சோமாஸ்கந்தமூர்த்தியை இந்திரன் கேட்டு வாங்கி வழிபட்டு வந்தான். வலாசுரயுத்தத்தில் உதவிபுரிந்த முசுகுந்த சக்ரவர்த்தி சிவபிரான் இசைவு பெற்று இந்திரனிடமிருந்த சோமாஸ்கந்த மூர்த்தியைக் கேட்டார். இந்திரன் அவரை விஷ்ணுபிரான் இசைவும் பெறவேண்டுமெனக் கூறினார். முசுகுந்த சக்ரவர்த்தி விஷ்ணுபிரான் இசைவுபெற்ற பின்னும் இந்திரன், கொடுக்க மனமில்லாமல், ஆறு மூர்த்திகள் தான் வைத்திருந்ததுபோல் செய்து மொத்தம் ஏழு மூர்த்திகளையும் முசுகுந்தசக்ரவர்த்தியிடம் காட்டி, இதில் எது விஷ்ணு வழிபட்ட மூர்த்தி எனத் தேர்ந்து எடுத்துச்செல் எனக்கூற, விஷ்ணுவின் அருளால் முசுகுந்தன் உண்மையான சோமாஸ்கந்த மூர்த்தியையே வேண்ட, பின் மனம்மாறி இந்திரனும் ஏழு மூர்த்திகளையுமே முசுகுந்தனிடம் தந்துவிட்டான். அவ்வாறு கொடுத்த ஏழுமூர்த்திகளில் ஒன்றை முசுகுந்த சக்ரவர்த்தி திருநள்ளாறில் பிரதிஷ்டை செய்தார். திருநள்ளாற்றில் நாம் இன்று காண்பது நகவிடங்கத்தியாகர். (உன்மத்த நடனம்)

சிவபிரான் திருநள்ளாறு ஆலயத்தில் ஒரு திருவிளையாடல் புரிந்துள்ளார். கீதாரி என்ற இடையன் அபிடேகத்திற்கு பால் அளித்துவந்தான். அங்கிருந்த கணக்கப்பிள்ளை தனக்கு வேண்டிய அளவு பாலை எடுத்துக்கொண்டு எஞ்சியுள்ள பாலை அபிடேகத்திற்கு அனுப்பி வைத்தான். கீதாரியின் மீது சந்தேகப்பட்ட தருமகர்த்தாக்கள் கீதாரியைச் சிறையிலிட்டு அவனைச் சித்திரவதை செய்தார்கள். சிவபெருமான் கீதாரியிடம் மனமிரங்கிஅவனிடம் சென்று, ''நாளையும் உன்னைச்சித்திரவதை செய்தால், கணக்கனை என் எதிரில் வந்து உண்மையைச் சொல்லச்சொல்லும்'' என்றுகூறுமாறு கூறினார். மறுநாளும் தன்னைச்சித்திரவதைச் செய்த போது சிவபெருமான் ஆணையிட்டவாறு கீதாரி கூறினான். கணக்கப்

பிள்ளை சிறிதும் பொய்சொல்லத்தயங்காமல் சிவபெருமான்முன்னிலையில் பொய்புகன்றான். சிவபெருமான் தன் மழுவாயுதத்தால் அவன் உடலைச்சிதறச் செய்தார். கீதாரி சிவபெருமானை வணங்கி, ''பெருமாளே, அக்கணக்கப் பிள்ளையினாலன்றோ எனக்கு உங்கள் காட்சி கிட்டியது. ஆகையால் அவனுக்கும் காட்சி கொடுத்துதருள்க'' என்று வேண்டிக்கொண்டான். சிவபெருமானும் சிதறுண்ட கணக்கப் பிள்ளையை உயிர்ப்பித்து கீதாரியின் விருப்பப்படி காட்சியளித்தார். சிவபெருமான் கீதாரியை சிறை விடுவிக்க சென்ற சமயத்தில் பலிபீடமும் விலகிவிட்டது. இன்றும் அது விலகியிருப்பதை நாம் காணலாம். ஒவ்வொரு வருடமும், பிரமோற்சவத்தின்போது இரவில் சிவபெருமான் சந்தடியில்லாமல் சென்று கீதாரிக்குக் காட்சி கொடுப்பதாக ஒரு ஐதீகம் உள்ளது.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த இப்பதியை திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசு சுவாமிகளும் அருணகிரிப்பெருமானும் பாடிப்பரவியுள்ளனர்.

திருஞானசம்பந்தர் ''பச்சைப்பதிகம்'' என்று 11 பாடல்களைத் திருநள்ளாறு இறைவன் இறைவிமீது பாடியுள்ளார். முதல் பாடல் ''போகமார்த்த பூண்முலையாள் தன்னொடும் பொன்னகலம்'' என்று ஆரம்பிக்கும். பதிகம் முழுதும் திருநள்ளாறு, பெருமான் விரும்பி வீற்றிருக்கும் இடம் என்று கூறுகிறார். ஒரு சமயம் சமணருக்கும் திருஞானசம்பந்தருக்கும் சமயவாதம் ஏற்பட்டபோது, இப்பதிகத்தை சம்பந்தர் நெருப்பில் இட்டார். ஆனால் ஓலைச் சுவடிகள் எரிந்து சாம்பலாவதற்குப் பதிலாக, மேலும் புதுமையாகவும் பசுமையாகவும் காணப்பட்டன. அவை பசுமையாய்க் காணப்பட்டதால் அவர் இயற்றிய பதிகம் பச்சைப்பதிகம் என்றழைக்கப்படலாயிற்று. சைவ சமயத்தை சமணர்களிடலிருந்து காப்பாற்றிய பெருமை தந்ததும் இப்பதிகமே. மறு முறையும் ஞானசம்பந்தர் திருநள்ளாறு சென்று, ''பாடகமெல்லடி'' என்ற பதிகத்தைப்பாடினார். அம்மையார் பச்சை நிறம் உள்ளவளாதலால், நெருப்பிலிட்ட ஓலைச் சுவடிகள் மேலும் பசுமை பெற்றது. ஞானசம்பந்தர் சிறு வயதில் அம்மையாரிடம் பால் அருந்தியவர் அல்லவா? ஆகையால் தன் பாலகனை சமணர்கள் நிறைந்த மதுரைக்குச் சென்று காப்பாற்றினள் போலும்.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருநள்ளாறு இறைவன் மீது பத்து பாடல்கள் இயற்றியுள்ளார். முதல் பாடல் ''உள்ளா றாததோர் புண்டரிகத்திரள்' என்று ஆரம்பிக்கின்றது.

அருணகிரிப் பெருமானும் ''பச்சையொண்கிரி போலிருமாதன'' என்று ஆரம்பிக்கும் திருப்புகழை இயற்றியுள்ளார்.

திருநள்ளாறு இறைவனின் பெருமையைப் பச்சைப்பதிகத்தின் கடைசி பாடலால் நன்கு உணரலாம். அப்பாடலாவது;

தண்புனலும் வெண்பிறையுந் தாங்கிய
தாழ்சடையன்
நண்புநல்லார் மல்குகாழி ஞானசம்
பந்தன்நல்ல,
பண்பு நள்ளா றேத்துபாடல் பத்துமிவை
வல்லார்
உண்பு நீங்கி வானவரோ டுலகி லுறை
வாரே''

---

## பக்தர்கள் எடுத்துக்கொண்ட உறுதிமொழி

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் 15.9.85 அன்று மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு இராம.வீரப்பன் அவர்கள் திருக்கோயில் தூய்மைப் பராமரிப்புப்பணியைத் தொடக்கிவைத்தார்கள். அதுசமயம் அறநிலையத்துறை ஆணையர் திரு கு.ஆளுடையப்பிள்ளை,ஐ.ஏ.எஸ்., அவர்கள் உறுதிமொழி வாசகங்களை வாசிக்க, மாண்புமிகு அமைச்சர், தலைமைச்செயலர் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான பக்தர்கள் கீழ்க்கண்ட உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர். அவ்வுறுதிமொழி வாசகங்கள் வருமாறு:

தெய்வத் தமிழ்நாட்டில்
திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட
அருளாளர் அப்பரடிகள்
உழவாரத்தின் கைத்திருத்தொண்டுசெய் கடப்பாட்டில் நின்று
என்கடன் பணிசெய்து கிடப்பதே என மொழிந்து
கலைக்கருவூலங்களாம் நமது திருக்கோயில்களைத் தூய்மைப்படுத்தியதுபோல்
நாங்களும் எங்களது கடமையை உணர்ந்து
மாதம் ஒருமுறை இத்திருக்கோயிலுக்கு வந்து
ஆலயத்தைத் தூய்மைப்படுத்தும் அருட்பணியில்
எங்களை உளமாற ஈடுபடுத்திக்கொள்வோம் என்று உறுதிகூறுகிறோம்.

# வள்ளலார் வற்புறுத்திய சமரசம்

திரு. வி. க.



சமரச சன்மார்க்க சங்கம் என்னும் பொருளில் முதலாவது சமரசத்தை எடுத்துக்கொள்வோம். சமரசத்தைப் பற்றி இதுகாறும் எழுந்த பேச்சுக்கள் எழுத்துக்கள் எத்துணை! அவைகட்கோர் அளவுமுண்டோ? சமரசத்தைப் பற்றி எழுந்தபேச்சுகளும் எழுத்துக்களும் மலையெனவுங் கடலெனவும் நிற்கின்றன. முழங்குகின்றன. உலகிடைத் தோன்றிய அறிஞர் அனைவருஞ் சமரசத்தையே அறிவுறுத்திச் சென்றனர். இப்பொல்லாத உலகம் சமரசத்துக்குச் செவி சாய்க்கிறதா? அதை நடையில் கொணர வேட்கையாதல் கொள்கிறதா? இல்லையே! சமரசம், வாழ்வில் நுழைந்து ஆட்சிபுரியின், உலகில் போர் ஏது? பூசல் ஏது? புரட்சி ஏது? சமரசம் பரவின் அரசு எற்றுக்கு ?சட்டம் எற்றுக்கு? நீதிமன்றம் எற்றுக்கு? இவையாவும் உலகில் சமரசம் பரவாமையை யல்லவோ விளக்குகின்றன?

இத்துணைநாள் உலகிடைச் சமரசம் பரவாதிருந்ததற்குக் காரணம் யாது? காரணம் பலபடக்கூறலாம். மனிதன் பாலுள்ள அழுக்காறு அவா வெகுளி முதலியன அவனைச் சமரச ஞானி யாக்குவதில்லை என்று சுருங்கச் சொல்லலாம். மனிதன் அழுக்காறு முதலிய பேய்களான் தொடக்குண்டு இடர்ப்படும் வரை அவன் சமரச ஞானியாதல் அரிது ;அரிது.

சமரசத்தைப் பற்றிப் பேசுதல் எளிது. எழுதுதல் எளிது. அதை நடையில் கொணர்வதே அரிது. மனிதன் சமரசத்தைப்பற்றிப் பேசுவதினும், எழுதுவதினும் அதை நடையில் கொணர முயல்வதே அறிவுடைமை. அதற்கு மனிதன் என்செய்தல் வேண்டும்?

மனிதன், அழுக்காறு முதலியவற்றைப் போக்கவல்ல வாழ்வில் தலைப்படல் வேண்டும். அவ்வாழ்விற்கு இடையூறாக உள்ள கொடுமைகளைக் களைய முயல வேண்டும்.அக்கொடுமைகள் யாவை? அவை பலப்பல. ஈண்டுப்புற உலகியல் வழி நின்று சிலவற்றைக் குறிப்பிடுகிறேன். இச்சிலவற்றைக்களையும் ஆண்மையை மனிதன் பெறுவானாயின், அவன் அழுக்காறு முதலியவற்றைப் படிப்படியாக நாளடைவில் களையும் ஆற்றலுடையவனாவான். அச்சில யாவை? நாடு, மொழி, சமய வெறி, சாதி முதலியன.

நாடு: ஒருவன் தான் பிறந்த நாட்டைத் தாய் போல் நேசிக்கலாம். ஆனால் அந்நேசத்தை மற்ற நாடுகளின் துன்பத்திற்குப் பயன்படுத்தலாகாது. இப்பொழுது நாட்டுப் பற்று அல்லது தேசபக்தி என்பது பிற நாட்டைத் துன்புறுத்தும் வழி நிகழ்ந்து வரல் கண்கூடு.

கடல்களும், மலைகளும், காடுகளும், பிறவும் நாடுகளைப் பிரிக்கின்றன. இப்பிரிவு கொண்டு ஒரு நாட்டார் இன்னொரு நாட்டாரை ஏன் வருத்தல் வேண்டும்? வாழ்வுக்கேற்ற பொருள்களை இயற்கை உதவுகிறது. அப்பொருள்களைப் பெற்றும் விற்றும் மனிதன் இன்ப வாழ்வு நடாத்தலாமன்றோ? மனிதன் அப்பொருளளவில், உள்ளநிறைவு கொள்கிறானோ? அவன் பாலுள்ள ஆசைப்பேய் வாளாகிடக்கிறதோ? இப்பொழுது ஒரு நாட்டார் இன்னொரு நாட்டைப் பற்றி அதன் வளத்தைக் கவருவதிலேயே கருத்துக்கொண்டு வாழ்கிறார். இஃதோர் அறமாகவும் கருதப்படுகிறது. ஆம் மறத்தை அறமாகக் கருதுவது மடமை.

இம்மடமைக்குப் பிறப்பிடம் மேல்நாடு என்று கூறல் மிகையாகாது. மேல்நாட்டார் தாம் பிறந்த நாட்டின் பொருட்டுப் பிறநாடுகளைப் பற்றுவதில் திறமை வாய்ந்தவர். அதற்கென அன்னார் செய்யும் முயற்சிக்கு ஓர் எல்லையில்லை. ஆகாய விமானங்களும், நீர்மூழ்கிகளும், நச்சுக்காற்றும், பிறவும் காணப்படுகின்றன. இவ்வளவும் எதற்கு? பிற நாட்டாரை வருத்துதற்கன்றோ?என்ன அறியாமை! இம்மக்கள் தங்கள் நாட்டையே கடவுளாகக் கருதுகிறார்கள். மற்ற நாட்டாரிடமுங் கடவுளிருத்தல் இவர்க்குப் புலனாவதில்லை போலும். இவர்க்குத்தான் பசிமுதலியன உண்டுபோலும். மற்றவர்க்கு அவை இல்லைபோலும்! இக்கருத்

துடையார்க்குச் சமரச உணர்வு யாண்டிருந்து பிறக்கும்? எல்லா நாட்டாருஞ் சகோதரர் என்பதை இவர் எந்த நாளில் உணரப்போகிறார்? இவ்வாறு பலர், நாடு என்னும் பற்றால் சமரசத்தை இழக்கிறார்.

மொழி: சிலர் மொழியை முற்கொண்டு சமரசத்துக்குக் கேடு சூழ்கிறார். மொழிகள் அவ்வந்நாட்டின் இயல்புக்கேற்றவண்ணம் பல வாய்த் தோன்றியிருக்கின்றன. அவரவர் தத்தம் தாய்மொழியைப் போற்றி வரலாம். ஒருவன் தன் தாய்மொழியின் பொருட்டு மற்ற மொழியை ஏன் குறைகூறல் வேண்டும்? ஏன் தூற்றுதல் வேண்டும்? உலகில் சில பகுதிகளில் மொழி காரணமாகவும் மக்களுக்குள் போர் நிகழ்கிறது. ஒரு மொழியினர் இன்னொரு மொழியினரைப் பகைவராகக் கருதுவது சமரச உணர்வைக் குலைப்பதாகும்.

எல்லா மொழிகட்கும் அடிப்படை ஒன்றே. அஃது ஒலி அல்லது நாதம். அவ்வொலியினின்றும் பிறந்த மொழிகளில் ஏற்றத்தாழ்வு கற்பித்துப்போரிடல் அநாகரிகம். மொழிகாரணமாகவும் சிலர் சமரசப்பேறெய்தா தொழிகிறார்.

**சமயவெறி:**

சமய வெறி கடவுள் அன்பைக்கெடுக்கிறது. ஒருவன் வெறியால் தன் சமயத்தின் மாட்டுப் பற்றுக்கொண்டு மற்ற சமயத்தாரை நிந்திக்கிறான். இதென்ன அறியாமை! சமயமென்பது ஒன்றே. அதுவே சமரசம் என்பது. சமய வெறியர்க்கு பல சமய உணர்வு தோன்றும் போலும். பல சமய உணர்வும் தன் சமயப்பற்றும் சமரசத்தை அழித்து விடுகின்றன. ஆதலால், சமயவெறி கூடாதென்க.

**சாதி:**

பிறப்பில் உயர்வு தாழ்வு கருதல் தவறு. பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும் பெருங்குற்றம் நமது நாட்டுக்கே சிறப்பாக உண்டு. எல்லாக் கொடுமைகளினும் தலையாயது இக்கொடுமை. பிறப்பால் உயர்வு தாழ்வு கருதும் உள்ளத்தில் சமரசச்சாயலும் படராது.

நமது நாட்டிலுள்ளசாதிக்குறைபாட்டைக் களைய அவ்வப்போது தோன்றிப் பெரியோர் பெருமுயற்சி செய்தனர். அம்முயற்சிகள் யாவும் விழலுக்கிரைத்த நீராயின.

நமது நாட்டில் ஒரு பெருங்கொலை நீண்ட காலமாக நிகழ்ந்து வருகிறது. அக்கொலை உலகிற்குப் புலனாவதில்லை. அதாவது பெரியோர் அறிவுறுத்திய கொள்கைகளைக் குழிவெட்டிப் புதைத்து, அவர்தம் உருவத்திற்கு மட்டும் வந்தனை வழிபாடு செய்வது. இப்படிற்றொழுக்கம் நீண்டநாள் வழக்கிலிருந்து வருகிறது.

'சாத்திரம் பல பேசுஞ் சழக்கர்காள்கோத்திரமுங் குலமுங் கொண்டென் செய்வீர்' என்றும், 'சாதி குலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத்

---

ஒரு வருடத்திற்கு முன்னால் என்னுடைய மகன் படிப்பதற்காக அமெரிக்கா போனான். அவன் அமெரிக்காவிற்குப் போவதற்கு முன்பு, நம்நாட்டுப் பழக்கப் பிரகாரம், அவனுடைய அறையைச் சுத்தமாக வைத்துக்கொள்ள மாட்டான். சாப்பாடும்அவனுடைய அம்மாபோட்டால்தான் சாப்பிடுவான். காப்பி வேண்டுமானாலும் அவனுடைய அறைக்கே கொண்டுபோய் கொடுக்கவேண்டும். அப்படி இருந்தது. ஒருவருடம் அவன் அமெரிக்காவில் படித்தான்., எனக்கும் ரூபாய் 50000 செலவு ஆனது. படித்துத் திரும்பி வந்தபொழுது, அவன் முக்கியமாகப் படித்து வந்தது என்னவென்றால் ஒழுக்கம்., அவன் படித்த படிப்பிற்கு அவனுக்கு டிகிரி எல்லாம் கிடைத்தது., அதைவிட அவன் முக்கியமாகப் படித்து வந்தது ஒழுக்கம். அவன் ஒழுக்கமுள்ளவனாய் இந்த ஓராண்டில் திரும்பிவந்தது குறித்துத்தான் எனக்குப்பெரும் மகிழ்ச்சி.

அவன் என்னிடம் சொன்னான்: ''அங்கே என்னுடன் அம்மா இல்லை; அறை சுத்தமாக இல்லையென்றால் மற்ற மாணவர்கள் கோபிப்பார்கள். சாப்பாடு போடுவதற்கும், காப்பி கொடுப்பதற்கும் அம்மா வரமாட்டாங்க. ஆகவே நானே காப்பி போட்டுக் கொண்டேன்! சாப்பாடும் கூட நானே செய்து கொள்ளவேண்டி வந்தது''. 22 ஆண்டுகள் நம் நாட்டிலே படித்து முடியாமல், அமெரிக்காவிலே போய் 50000 ரூபாய் செலவு செய்து ஓராண்டிற்குள் அவன் ஒழுக்கத்தைக் கற்றுக் கொண்டான் என்பதை எண்ணுகிறபோது, நமக்கே அது மானக்கேடாய் தான் உள்ளது....ஆலயத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவில்லை என்றால் அது நாம் ஆண்டவனையே அவமதிப்பது போலாகும். ஆகையால் தான் ஒரு காலத்திலே அப்பரும், மாணிக்கவாசகரும் ஆலயத் தூய்மைப் பராமரிப்புப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, அனைவரையும் ஈடுபட வற்புறுத்தியிருக்கிறார்கள்.

**—தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு டி.வி. அந்தோணி அவர்கள் ஆலயத் தூய்மைப் பராமரிப்புப் பணி துவக்க விழாவில் ஆற்றிய தலைமை உரையிலிருந்து.**

தடுமாறும்' என்றும் அருளிய பெரியோரை வழி பற்றும்வார் சாதியைப் பாராட்டுகிறாரா இல்லையா என்பது கவனிக்கத்தக்கது. இம்மக்கள் சாதியையே கடவுளாகவும் சமயமாகவும் கொண்டிருத்தல் வெள்ளிடைமலை. இவர், சாதியை மறுத்துச்சமரசத்தில் திளைத்த பெரியோரை வழிபடுவதற்கு ஏதாயினும் பொருளுண்டா? வெறும் உருவத்தை மட்டும் வழிபடுவது வழி பாடாகுமா? பெரியோர் அறிவுறுத்திய நெறி நின்றொழுகுவதன்றோ அவரை உண்மையில் வழிபடுவதாகும்? நம் நாட்டார் முன்னோர் அறிவுறுத்திய கொள்கைகளுக்குக் கல்லறையிட்டு புதைத்து, அவரின் உருவங்களை மட்டும் வழிபடுவதில் பேர் பெற்றவர். இக்கரவும் வஞ்சனையும் வளர்ந்து வரும் நாட்டுக்கு உய்வுண்டோ? உரிமையுண்டோ?

இற்றைக்குச் சுமார் ஐம்பது ஆண்டுகட்கு முன்னர் தமிழ் நாட்டில் வதிந்து மறைந்த நம் இராமலிங்க சுவாமிகள், சாதிமத வேற்றுமைகளைப் பலவுரையால் மறுத்துச்சமரச ஞானத்தை அறிவுறுத்திக் கோயில்களெல்லாஞ் சாதிக்கோயில்களாக மாறியது கண்டு, எல்லோரும் போந்து வழிபடுதற்கென இச்சமரசக் கோயிலை (வடலூர்சபை) அமைத்துச் சென்றார். இங்கே யாதல் சுவாமிகள் கொள்கை ஆட்சியிலிருக்கிறதா?ஈங்கும் சாதிப்பேய் புகுந்து தன்னாட்சி செலுத்துகிறது. இந்தக் கொள்ளைக்கு-இந்தக் கொலைக்கு-என் செய்வது?

'எச்சபைப் பொதுவென இயம்பினர் அறிஞர்கள்-அச்சபை இடங்கொளும் அருட் பெருஞ் சோதி'' என்று சுவாமிகள் அருளிச் செய்துள்ளார். இச்சபை அந்நோக்குடன் சுவாமிகளால் நிறுவப்பட்டது. இஃது இப்பொழுது எல்லா நாட்டினர்க்கும், எல்லா மொழியினர்க்கும், எல்லாச் சமயத்தவர்க்கும், எல்லாச்சாதியார்க்கும் பொதுவாகப் பயன்படுகிறதா?

'எச்சமயத்தவரும் வந்திறைஞ்சா நிற்பர்' என்று தாயுமான சுவாமிகள் சிதம்பரத்தின் பொதுமை தெரிந்துப்போந்தார். இப்பொழுது சிதம்பரத்தில் எல்லார்க்கும் இடமுண்டா? தாயுமானார் காலத்தில் பொதுவுடைமையாகக் கருதப்பட்ட சிதம்பரம், இப்பொழுது சிலருடைமையாகவே கருதப்படுகிறது.

அக்கொடுமை கண்டே இராமலிங்க சுவாமிகள் இங்கு இச்சபைக் கோயிலை நிறுவினார். இதுவும் தன் பொதுமையை இழந்து நிற்கிறது. பெரியோர் கொள்கையை வீழ்த்தி அவர் தம் உருவத்துக்கு மட்டும் நம்மவர் விழாக் கொண்டாடுகின்றனர். இக்கொடுமையை யாண்டுச்சென்று முறையிடுவது? ஆண்டவனே உன்னிடத்திலேயே முறையிடுகிறேன். வேறு களைகணில்லை. என் நாட்டார்க்கு நல்லறிவுச் சுடர் கொளுத்துவாயாக.

சமரசம் என்பது நாடு, மொழி, சமய வெறி, சாதி முதலியவற்றில் கட்டுப்படாது கடந்து நிற்பது. எல்லா நாட்டார் எல்லா மொழியினர், எல்லாச் சமயத்தார், எல்லாச் சாதியாரிடத்திலும் புகுந்து நிற்பது சமரச ஞானம். நாடு மொழி சமயம் சாதி முதலியவற்றைக் கொண்டு சமரச உணர்வை இழப்பது அறியாமை. இப்பன்மைகளினூடே படர்ந்து நிற்கும் ஒருமையே சமரசம். அச்சமரசமே கடவுள் காட்சியை நல்கும். அதையே இயற்கை அன்னை மக்களிடைஓம்ப முனைந்துநிற்கிறாள். அவள் முயற்சிக்கு எவருங் குறுக்கே நிற்றலாகாது. இதுகாறும் மனிதன் அறியாமையால் இயற்கை அன்னையை மறந்து இடர்ப்பட்டது போதும்! போதும்! இனியாதல் சமரசத்திற்கு மனிதன் இடந்தந்து வாழ்வானாக.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே, இனி வரும் உலகிற்கு வேண்டற்பாலதாய் சமரசத்தை இராமலிங்க சுவாமிகள் அறிவுறுத்திச் சென்றார். அவர் அருளிய சமரசப் பாக்கள் ஒன்றா? இரண்டா? ஆயிரம்,ஆயிரம். அவற்றை அருட்பாவில் பார்க்க. சில பாக்களை மட்டும் ஈண்டுத்தருகிறேன்.

'சாதியும் மதமுஞ் சமயமுங் காணா
ஆதி அநாதியாம் அருட்பெருஞ்சோதி
சாதியும் மதமுஞ் சமயமும் பொய்யென
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்சோதி
சமயங் குலமுதல் சார்பெலாம் விடுத்த
அமயந்தோன்றிய அருட்பெருஞ்சோதி
சமரச சத்தியச்சபையில் நடம்புரி
சமரச சத்தியத் தற்சுயஞ்சுடரே'

சாதியும் மதமுஞ்சமயமுந் தவிர்ந்தேன்
சாத்திரக் குப்பையுந் தணந்தேன்
நீதியும் நிலையுஞ் சத்தியப்பொருளும்
நித்திய வாழ்க்கையுஞ் சுகமும்
ஆதியும் நடுவும் அந்தமும்எல்லாம்
அருட்பெருஞ் சோதியென் றறிந்தேன்.
ஓதிய அனைத்தும் நீயறிந் ததுநான்
உரைப்பதென் னடிக்கடி யுனக்கே'

''குலத்திலே சமயக் குழியிலே நரகக்
குழியிலே குமைந்து வீண் பொழுது
நிலத்திலே போக்கி மயங்கியே மாந்து
நிற்கின்றார் நிற்கநா னுவந்து
வலத்திலே நினது வசத்திலே நின்றேன்
மகிழ்ந்து நீ யென்னுள மெனுமம்
பலத்திலே நின்றாய் எனக்கிது போதும்
பண்ணிய தவம்பலித் ததுவே.''

இவ்வருட் பாடல்களையும், இப்பொன்னுரைகளையும் உற்று நோக்குங்கள். சாதி, மதம் முதலிய வேற்றுமைகளைச் சுவாமிகள் எவ்வாறு கடிந்துள்ளார் என்பதை உணருங்கள்; வேற்றுமை உணர்வு உள்ளவரை சமரச ஞானம் பெறல் இயலாது என்பதைத் தெளியுங்கள்.

சாதி, மதம் முதலிய வேற்றுமைகளால் விளைந்துள்ள தீமைகளைக்கண்டே, அவைகளைக் களைந்து, சமரசத்தை நிறுவச்சுவாமிகள் முயன்றார்.

சுவாமிகள், அம்முயற்சியில், தலைப்பட்டது உண்மை. எவ்வழிநின்று அவர் அம்முயற்சியில் தலைப்பட்டார்? முனைப்பை அடிப்படையாகக் கொண்டா? காழ்ப்பை அடிப்படையாகக் கொண்டா? பகைமையை அடிப்படையாகக் கொண்டா? இல்லை; இல்லை. முனைப்புங் காழ்ப்பும் பகைமையுங் கடந்த ஒரு நிலையில் சுவாமிகள் அப்பெரு முயற்சியில் தலைப்பட்டார்.

சாதி, மதம் முதலிய வேற்றுமைகளால் உலகம் இடர்படுவதைக் கண்ட சுவாமிகள், அவற்றைக் களைந்து சுத்த சன்மார்க்கத்தை அறிவுறுத்த எல்லாம் வல்ல இறைவன் திருவருளைக் கொழுகொம்பாகப் பற்றினார். ஆண்டவன்திருவருள் துணைக்கொண்டே சுவாமிகள் சீர்திருத்தத் தொண்டில் இறங்கினார். திருவருளில் கருத்துச் செலுத்தாது, முனைப்பால்-காழ்ப்பால் - பகைமையால்-சீர்திருத்தத்துறை நண்ணுதல் மடமை; மடமை.

இக்காலத்தில் சிலர் 'சீர்திருத்தம்' என்னும் பெயரால், ஆண்டவன் உண்மையை மறுத்தும், அவன் அருள் பெற்ற அடியாரை நிந்தித்தும், ஆன்மநேயத்தைக் குறைத்தும் வருவது உங்கட்குத்தெரியும். அவர் வினையால் உலகம் செம்மையுறுங் கொல்? செம்மைக்குப் பதிலாகக் கேடு நிகழும். நாத்திகச் சீர்திருத்தத்தால் பிளவும் பிணக்கும் போருமே விளையும். நம் இராமலிங்க சுவாமிகள் நாத்திகத்தை கனவிலுங்கருதாது, ஆண்டவனுண்மையில் உறுதிகொண்டு முனைப்பு, காழ்ப்பு, பகைமை முதலிய பேய்களுக்கு இரையாகாது ஆண்டவன் அருள்வழி நின்று அவனருள் பெற்ற அடியாரைப் போற்றி ,சாதி மதம் முதலிய வேற்றுமைகளைக் களைந்து, ஆன்ம நேயத்துக்குரிய சமரச ஞானத்தை ஓம்பப்புகுந்தார். சீர்திருத்தக்காரர் என்று வெளிவருவோர் இச்செந்நெறி பற்றி நடப்பாராக.

## மரம் வளர்த்தல் புண்ணியம்

அரசமரம் ஒன்றோ, வேப்பமரம் ஒன்றோ, வில்வமரம் மூன்றோ, நெல்லிமரம் மூன்றோ, தென்னைமரம் ஐந்தோ, புளியமரம் பத்தோ உண்டாக்கி வளர்ப்பவர்கள் நரகம் அடையாமல் தம் உற்றார் உறவினரோடு முத்தி அடைவர் என்று திருவாரூர்ப் புராணத்தில் சொல்லப் பட்டிருக்கிறது.

நம் தமிழகத்தில் ஆலயங்களில் தலவிருட்சங்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது. சான்றாகச் சில ஆலயங்களில் உள்ள தல விருட்சங்கள் மட்டும் இங்கே சுட்டப்படுகின்றன.

1. வன்னிமரம்—அருள்மிகு மருந்தீஸ்வரர் ஆலயம், திருவான்மியூர், சென்னை.
2. வேலமரம்—அருள்மிகு தேவி கருமாரியம்மன் ஆலயம், திருவேற்காடு, சென்னை
3. பனைமரம்—அருள்மிகு பட்டீஸ்வரர் ஆலயம், பேரூர், கோவை.
4. வில்வமரம்—அருள்மிகு வேதநாராயணப் பெருமாள் கோயில், திருநாராயணபுரம், திருச்சி.
5. பாதிரிமரம்—அருள்மிகு புற்றிடங்கொண்டேஸ்வரர் ஆலயம்,அம்மாப்பேட்டை, தஞ்சை மாவட்டம்.
6. வாழை---அருள்மிகு ரத்தினகிரீஸ்வரர் ஆலயம், திருமருகல்
7. புன்னை—அருள்மிகு சாட்சிநாதசுவாமி ஆலயம், திருப்புறம்பியம், தஞ்சைமாவட்டம்.
8. ஆத்திமரம்—அருள்மிகு சுப்ரமணிய சுவாமி ஆலயம், எண்கண், தஞ்சைமாவட்டம்
9. மகிழமரம்—அருள்மிகு திருக்கோகர்ணம் கோயில், புதுக்கோட்டை மாவட்டம்
10. புளியமரம்—அருள்மிகு திருமலைக் குமாரசுவாமி ஆலயம், திருநெல்வேலி மாவட்டம்.
11. வேப்பமரம்—அருள்மிகு வைத்தியநாதசுவாமி ஆலயம், புள்ளிருக்கு வேலூர்.
12. மாமரம்—அருள்மிகு ஏகாம்பரநாதர் ஆலயம், காஞ்சிபுரம்.

# பிரதோச வழிபாடு

வித்துவான் முத்துசாமிப் பிள்ளை, ஐ.ஏ.எஸ்., (ஓய்வு)

சைவ சமயாசாரிய மூர்த்திகளாகிய நால்வரும் தலங்கள் தோறும் சென்று ஆங்காங்குள்ள தீர்த்தங்களில் நீராடி, மூர்த்தி பேதங்களை விதிப்படித் தரிசித்துப் பல அருட்பாடல்களையும் பாடியருளியுள்ளனர் என்பது அனைவரும் அறிந்த உண்மை. இவர்கள் பரமேசுவரனை நேரிற் கண்டும் அவன் அருளைப் பூரணமாகப் பெற்றிருந்தும் நாம் உயரவேண்டித் தாங்களும் தல யாத்திரை செய்து மூர்த்தி வழிபாடு செய்தார்கள். இவர்கள் பாடல்களைப் பெற்ற தலங்கள் பரத கண்டத்தில் கணக்கில்லாமல் இருந்தபோதிலும், பெரியோர்கள் 274 என்று வரையறை செய்துள்ளார்கள். இவைகளை அன்பர்கள் தம் வாழ்நாளில் இயன்றவரை அவசியம் தரிசித்துப் பேரின்ப பேறு பெறவேண்டும். இவர்கள் பிரதோச வழிபாடு பற்றிய விளக்கங்களை மிகத்தெள்ளிவாக எடுத்து இயம்பி உள்ளனர். இவற்றைப் பின்பற்றி பிரதோச வழிபாடு செய்வோமாக.

**பிரதோச வரலாறு:**

பிரதோசம், பாற்கடல் கடையப்பெற்ற நிகழ்ச்சியை ஆதாரமாகக் கொண்டுள்ளது. பாற்கடல் கடையப்பட்டதை எல்லா மாபுராணங்களும் எடுத்துக் கூறுகின்றன. சிவபெருமானை இகழ்ந்த தக்கனுக்குத் ததீசி முனிவர் அறிவுறுத்தும் வகையில் கந்த புராணத்தில் இவ்வரலாற்றை நாம் காண்கிறோம். முன் ஒரு காலத்தில் அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் நீண்ட போர் மூண்டது. மரணத்தைத் தவிர்க்கும் அமிர்தத்தை உண்ண வேண்டுமெனத் தேவர்கள் விரும்பினார்கள். தேவர்கள் பிரம தேவனுடன் சென்று திருமால் உதவியை நாடினார்கள். திருமால் வகுத்த ஏற்பாட்டை அனுசரித்து மந்தர மலையை மத்தாகவும், ஆயிரம் நாவுடைய வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் பூட்டி வாசுகியின் வால்புறம் தேவர்களும் தலைப்புறம் அசுரர்களும் நின்று பாற்கடலை கடைந்தார்கள். பாற்கடல் கடையப்பட்ட வருத்தம் தாங்காது வாசுகி பதைபதைத்து நஞ்சை உமிழ்ந்தது. அதே சமயத்தில் கடலிலிருந்தும் நஞ்சு கிளம்பியது. நஞ்சு என்பதும் ஆலம் என்பதும் ஒன்றே. வாசுகி கக்கிய ஆலமும் கடலிலிருந்து எழுந்த ஆலமும் சேர்ந்து ஆலாலம் என்னும் பெயர் பெற்றது. இந்த ஆலாலம் யுகத்திற்கே முடிவு காண்பது போல் எங்கும் பரவிற்று. தேவர்கள் ஓடலுற்றார்கள். அப்போது அந்த ஆலாலம் அவர்களை வலமாகவும் இடமாகவும் மறித்துத்துரத்திற்று. பிரமதேவர் உள்ளிட்ட தேவர்கள் எல்லாரும் கயிலையம்பதியை யடைந்து ஆங்குள்ள நந்தி தேவரிடம் தங்களுக்கு நேர்ந்த பேரிடரைப் பற்றிக் கூற, இறுதியில் நந்திதேவர் பிரமதேவனையும், திருமாலையும் சிவபெருமான் திருமுன் கூட்டிச் சென்றார். திருமால், பாற்கடல் கடைந்த வரலாற்றை முற்றிலும் எடுத்துக் கூறி அக்கொடிய விடத்திலிருந்து தங்களைக் காக்குமாறு முறையிட்டார்; இந்நிலையை

''தீயென எழுதரு சீற்ற வெவ்விடம்
ஆயதை மாற்றியே அளியர் தங்களை
நீயருள் புரிகென நீல நிறந்திகழ்
மாயவன் உரைத்தனன் வழுத்தி நிற்கவே'

என்பதான கந்தபுராணச் செய்யுள் நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

அது சமயம் இன்னலுற்றவர் பலரும் கயிலையை அடைந்து துதித்தனர்.


தேவர்கள் முறையீட்டிற்குச் செவி சாய்த்த சிவபெருமான் இறைவியைநோக்கி ''இவர்கள் முறையீடு உன் உள்ளத்திற்கு ஏற்றதோ' எனக்கேட்க, அம்மையாரும்,

''வானோர்கள் சரண் புகுந்தார்கள்; அவர்களுக்கு அருள்புரிக'' என வேண்டிக்கொண்டார். இது கேட்ட தேவர்கள் மகிழ்ச்சி யெய்தினர். இது சமயம் சிவபெருமான், தம்மிடத்துப்பணி செய்து கொண்டு வந்த சுந்தரரை நோக்கி, ''அக்கொடிய நஞ்சை இங்கு கொண்டு வருவாயாக'' என்றனர். சுந்தரரும், 'இது இனிது'' என்று கூறிக்கொண்டு சென்று, எங்கும் பரவி நின்ற அந்த ஆலாலத்தைக் கொணர்ந்தார். அந்நஞ்செல்லாம் ஒரு திவளை (ஒரு துளி) போல் ஒடுங்கிற்று. சிவபெருமான் தாம் அந்நஞ்சை ''உண்ணவோ அல்லது எறிந்து விடவோ'' எனக் கேட்டார். அதற்குப் பதிலாகப் பிரமதேவர், ''ஐய! தாங்களன்றி இக்கொடிய விடத்தை யார் மாற்ற முடியும்? இந்த விடத்தைத் தாங்கள், தங்கள் கையிலிருந்து விட்டுவிட்டால், யாராயினும் பிழைத்திட முடியுமா? எல்லோரும் ஒன்றாக மடிந்து விடமாட்டார்களா? இது முதலில் தோன்றிய பாகம். இது தங்களுக்கே உரியது. நாங்கள் எல்லோரும் உய்யுமாறு தாங்கள் இதனை அருந்தி அருள்க'' என வேண்டினார். இதைக் கேட்ட சிவபெருமான் அவ்வாறே அவ்விடத்தை உட்கொண்டு அந்த விடத்தைக் கண்டத்திலே நிறுத்திக் கொண்டார்; பின்னர் அவர்களை நோக்கி, ''இனிச் சென்று பாற் கடலைக் கடைவீர்களாகில், அமுது பெறுவீர்கள்'' என அருள் பாலித்தார். அவ்வாறே அவர்கள் பாற்கடல் கடைந்து அமிர்தம் பெற்றதோடு மற்ற மேலான பொருள்களாகிய காமதேனு, கற்பகதரு முதலியவை கைவரப் பெற்றனர்.

### பிரதோச வழிபாட்டின் தொடக்கம்:

தேவர்களுக்கன்றி, உலகங்களுக்கெல்லாம் துன்பம் விளைவிக்க எழுந்த விடத்தை உட்கொண்ட சிவபெருமான் எல்லா உயிர்களிடத்தும் உயிருக்குயிராயிருப்பவர். தாம் உண்டவிடம் காரணமாக, பிற உயிர்கள் துன்பம் அடையக் கூடாதென்பதற்காகச் சிவபெருமான் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். இந்நாள் ஏகாதசியாகும். அந்நாளில் தேவர்கள் பட்டினியிருந்து சிவபெருமானுக்கு வழிபாடு செய்தனர். அதற்கு அடுத்த நாள் துவாதசி. அந்நாளில் தேவர்கள் தங்கள் விரதத்தை முடித்துக் கொண்டு உணவருந்தினர். அதற்கும் அடுத்த நாள் திரியோதசி நாளாகும்.

இதுவரையில் துன்பத்தில் இருந்துவந்த உயிர்கள் எல்லாம் இன்பம் அடையுமாறு உமாதேவியார் காண, சிவபெருமான் தமது கையில் தமருகமேந்தி இடப தேவரின் இரு கொம்புகளுக்கிடையே திருநிருத்தம் செய்தருளினார். இந்தக் காலம் பிரதோச காலமாகும்.



## திருவண்ணாமலை தீபத் திருநாள்

திருவண்ணாமலையில் கார்த்திகை தீப விழா வரும் நவம்பர் திங்கள் 26ஆம் நாள் செவ்வாய்க்கிழமையன்று கொண்டாடப்பட இருக்கிறது. திருவண்ணாமலை தீபம் கண்டார் காணும் பலன்கள் கணக்கில் அடங்கா.

''புத்திதரும் தீபம், நல்ல புத்திர சம்பத்துமுதல்
சித்திதரும் தீபம், சிவதீபம்-சத்திக்கு
உயிராகும் சோணமலை ஓங்கிவளர்ஞானம்
பயிராகும் கார்த்திகைத் தீபம்''

எனவரும் கார்த்திகைத் தீப வெண்பாப்பாடல், திருவண்ணாமலை தீபத்தெரிசனப் பலனைத் தொகுத்து உரைக்கின்றது.

''இது பணிந்தோர் கண்டோர்
கோத்திரத்தில் இருபத்தோர் தலைமுறைக்கு
முத்திவரம் கொடுப்போம்''

என்று திரு அருணாசலப்புராணமும் உரைக்கின்றது. அத்தகைய புனிதம் நிறைந்த திருவண்ணாமலைத் தீபத்தைக் கண்ணாரக் கண்டுகளித்தல், பக்தர்களின் தலையாயக் கடமையாகும்.

சிவபெருமான் ஆடிய நடனங்கள் பல. அவற்றில் முக்கியமானவை கான்மாறியாடு நடனம், பாண்டரங்க நடனம், கொடு கொட்டி நடனம், சந்தியா நிருத்தம், கண்ட தாண்டவம், கௌரி தாண்டவம், வீராட்ட காசம், ஆனந்தத் தாண்டவம், அனவரதத் தாண்டவம், மகா சங்கார நிருத்தம். இந் நடனங்களால் பெறத்தக்க நன்மை யாது என்பது உணரத்தக்கது. புளியைக் கண்ட விடத்து வாயில் நீர் ஊறுவதுபோல, சிவ பெருமானது திருநடனக் காட்சியைத் தரி சித்தவர்களது உள்ளத்தில் ஆனந்த வெள் ளம் பாய்கிறது; மனவிருள் அகன்றுவிடுகிறது. பின்னர் தங்கள் தங்கள் உள்ளமாகிய ஆன்ம வொளியே ஞான ஒளி என்பதாகவும், அவ் வொளியில் உள்ள சோதியே இறைவன் என வும் அந்த உள்ளொளியின் அசைவே திரு நடனம் எனவும் ஞானிகள் காண்கின்றார்கள்.

''புளிக்கண் டவர்க்குப் புன லூறு மாபோற்
களிக்குந் திருக்கூத்துக் கண்டவர்க் கெல்லாந்
துளிக்குங்கண் ணீருடன் சோர் நெஞ்சத்திருள்
ஒளிக்கு மானந்த அமுதூறும் உள்ளத்தே''
—திருமூலர்.

இத்தகைய பொது இலக்கணத்திற்குட் பட்டதும் தேவர்களும் எல்லா உலகங்களும் உய்யுமாறு, உமைப்பிராட்டியார் திருமுன் கயிலையங்கிரியில் ஒரு சாமம் சிவபெருமான் செய்ததுமாகிய திருக் கூத்து சந்தியாநிருத் தம் எனப்படும். இதன் விவரத்தை,

''பொங்குங் கங்காதரன் காளமயின்
றேயொன்றும்
புகலா மலிருந்தனனோர் கணப் பொழுது
புலவோர்
அங்கவனை யிடைவிடா தருச்சனை
முன்புரிந்தார்
அத்திதியே காதசியா மடுத்ததிதி யதனில்
புங்கவர் பாரணம் புசித்தே பூர்த்தி
யுற்றாரிதன்மேற்
பொருந்துத் திதி தனில்இமவான்
பொற்கொடியிடை வைத்தே
சங்கரன் சூலஞ்சுழற்றி நடித்தனனோர்
யாமஞ்
சதுர்மறை நூலது பிரதோட மெனவே
சாற்றும்''

என ஆகமத்திரட்டு குறிப்பிடுகிறது.

இந்நடனத்தைப் பற்றிய குறிப்பு திரு ஞான சம்பந்தர் பாடல்களிலும் காண் கிறோம்.

''கடலில் நஞ்சு முண்டு இமையோர்
தொழுதே நடமாடி'' எனவும்,

''விடமார் திகழும் மிடறன் நடமாடி''

எனவும் திருஞான சம்பந்தர் குறிப்பிட்டுள் ளது கவனிக்கத்தக்கது.

**பிரதோச வழிபாட்டின் தனிச்சிறப்பு**

பிரதோச வழிபாட்டில் பல தனிச் சிறப்புகள் உள்ளன. இவற்றில் முதன்மைச் சிறப்பு பிரதோச காலத்தின் தனிப்பட்ட அமைப்பைப் பொறுத்துள்ளது. பகல் நேர மானது கருவி கரணங்களுடன் கூடி அறிவு தொழிற்படும் காலமாகும்; இரவோ கருவி கரணங்கள் ஒடுங்கிக் கிடக்கும் காலமாக ஏற்படுகிறது.

''உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு''

என்கின்றார் திருவள்ளுவர். எனவே உறக் கம் நீங்கியதும் காலை நேரம் இறைவனை நோக்கி ''நாங்கள் தங்கள் அடியார்கள்; இன் றைய தினம் நாங்கள் மேற்கொள்ள வேண் டிய பணி எது அதனைக் கேட்டுத் தெரிந்து அதை அனுசரித்து நடந்து கொள்வோம்'' என்பதாக அப்பெருமானிடம் விண்ணப்பம் செய்துகொள்வதற்கேற்ற நேரமாகும். இவ் வுண்மையை,

''எதுஎமைப் பணிகொளும் ஆறது
கேட்போம்.
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே''

என மணிவாசகனார் திருப்பள்ளி எழுச்சி யில் உபதேசிப்பதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு சிவபெருமானிட மிருந்து வேண்டிக் கொண்டதன் பயனாக நாம் புரியும் செயல்களெல்லாம் இறைவன் அருளால் நடைபெறுமாறு மாற்றிக் கொள் ளுதல் வேண்டும். இருள் நேரத்தில் ஒரு பொருளை நாம் கண் ஒளியால் மட்டும் காண இயலாது. ஒரு விளக்கொளியும் வேண்டும். அது போன்றே, சிவ ஒளியில் நம் செயலெல் லாம் அடங்கிக்கிடக்குமாறு அமையவேண் டும். இதையே ''தன்னுடைய இச்சா ஞானக் கிரியைகளின் தொழில்பாட்டுக்கு முதல்வனது இச்சா ஞானக் கிரியைகளை இன்றியமையாத ஆன்மாவும் இவ்வியைபு பற்றி நிகழ்வனவெல்லாம் முதல்வனது இச்சாஞானக் கிரியைகளது நிகழ்ச்சியெனக் கண்டு அம்முதல்வன் வியாபகத்துள்ளாக அடங்கி நிற்றல்'' என்பதாக சிவஞானபாடி யத்தில் சிவஞான முனிவர் எடுத்துக் காட்டு கிறார். இத்தகைய பேறு அளிக்கும் இறை வனுக்கு நன்றி செலுத்தும் வகையில் செய் யப்படும் வழிபாடாகவும், பின் இரவாகிய ஒடுக்கத்திற்கு முன்னேற்பாடாகச் செய்யப் படும் வழிபாடாகவும் பிரதோசம் அமை கிறது. நாள் முழுதும் உழைத்தவர்களுக்குச் சாந்தியளிக்கும் வகையில் பிரதோசகாலம் உள்ளது. பகலில் மற்ற நேரங்களைவிட இந்த நேரம் இன்பமாய் அமைந்துள்ளதை

அனுபவமுறையில் காணலாம். காலைவெயில் உடல் நலத்திற்கு ஒத்ததன்று. பிரதோச காலத்து வெயில் உடல் பிணியையும்போக்கு வதாக உள்ளது. இவ்வெயிலை மஞ்சள் வெயில் என்பார்கள். இந்த நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளாது வீண் செயலில் கழிப்பது அறிவுடைத்தன்று. ''மஞ்சள் வெயில் நேரம் இது; மாலை மயங்கு கிற காலம்; இப்போது தூங்காதே! இக்காரி யம் செய்யாதே!'' என்பதாக பலர் அறி வுறுத்துகிறதை நாம் இற்றை நாளிலும் கேட்டு வருகிறோம்.

இப்பேருண்மையைக் கருத்திற்கொண்டே பெரியோர்கள் திரயோதசி நாட்களில் வரக் கூடிய பிரதோச காலத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்கிறார்கள். திரயோதசி திதியில் வரும் பிரதோச காலம் போன்றே மற்றநாள்களில் வரும் மாலை நேரமாகிய அதே நேரத்தைத் தெய்வ வழிபாட்டிற்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இவ்வகை யில் ஒவ்வொரு நாள் மாலை நேரம் பிர தோச வேளையாக ஏற்பட்டுவிட்டது. திர யோதசி நாள்களில் வரும் பிரதோச காலத் தில் செய்யப்படும் வழிபாட்டினால் கிடைக் கத்தக்க பலனில் ஒரு பகுதியாவது மற்ற நாள்களில் பிரதோச வேளையில் செய்யப் படும் வழிபாட்டினால் அடைய இயலும்.

பிரதோசத்தின்போது சிவபெருமான் நடனம்புரிந்தது கயிலையங்கிரியில். அதை முன்னிட்டுப் பல சிவாலயங்களிலும் பிர தோசவழிபாடு நடைபெறுகிறது. இத் தகைய வழிபாட்டில் மற்ற தெய்வங்களும் கலந்து கொள்கின்றன என்பதாக நாம் கண்டு கொள்ள வேண்டும். இவ்வுண்மையை உணராதவர்களது நிலையைக் குறித்து,

''வானிடத்தவரும் மண்மேல் வந்து
அரன்தனை அர்ச்சிப்பர்
ஊனெடுத்துழலும் ஊமர்
ஒன்றையும் உணரார்''

என்பதாக வருந்துகிறார் அருள் நந்தி சிவா சாரியார் (சிவஞான சித்தியார் 80). இவற்றையெல்லாம் காணுமிடத்து பிர தோசகாலம் புண்ணியமான நேரம் என் பதை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இரண்டாவதாகக் காண வேண்டியது நந்தியெம் பெருமான் அல்லது இடபதேவ ராவார். பிரதோச காலத்தில் சிவபெருமா னுக்கும் நந்தியம் பெருமானுக்கும் ஒரே சமயத்தில் வழிபாடு நடைபெறுகிறது. நந்தி என்னும் பெயரில் உள்ளவர்கள் மூவர்; அதி கார நந்தி, திருமால் நந்தி, தரும நந்தி ஆகிய மூவரும் ஒருவருக்கொருவர் சிறந்த வர். பூவுலகத்தில் வாழ்ந்த காலத்தில் அரிய தவம் செய்த காரணமாகப் பெருவாழ்வு பெற்று அதிகாரம் பெற்றவர் அதிகார நந்தி. இவர் சிவகணங்களுக்குத் தலைவரானார். திருமால் நந்தி அல்லது மால்விடையாவது திருமால் திரிபுர தகனத்தின்போது தாமே சிவபெருமானுக்கு விடையாகி வாகன மானதாகும். இந்த விடைக்கும் வேறானது தரும விடை. இந்த விடையே பிரதோச காலத்தில் பூசிக்கப்படும் நந்தி தேவர். இறுதிக் காலத்தில் எல்லாமே சிவபெருமா னிடத்து ஒடுக்கம் பெறுகின்றன எனச் சாத்திரங்கள் கூறுகின்றன. பிரம விட்டு ணுக்கள் உட்பட ஒருவர் பின் ஒருவராகச் சிவபெருமானிடம் ஒடுங்கி மறைவதைக் கண்ட தரும தேவதை தானும் அவ்வாறு மறைந்துவிடக் கூடாதென விரும்பித் தன்னை வாகனமாக ஏற்றுக்கொள்ளுமாறு

## விநாயகரின் யானைமுகத் தோற்றம்

யானை எல்லா உயிர்களிலும் பெரியது. அது போலவே விநாயகரும் எல்லாத்தேவர் களுக்கும் பெரியவர். யானை பேராற்றல் வாய்ந்தது. அதுபோலவே விநாயகரும் பேராற் றல் மிக்கவர். யானை பகைவரைச் சீறி அழிக்கும். விநாயகரும் கொடியவர்களைத் தண்டித்து மறக்கருணை புரிவார். யானை பாகனுக்கு அடங்கி நடந்து நலம் விளைவிக்கும். விநாயகரும் அடியவர்களுக்கு அவர் வேண்டு வனவெல்லாம் அளித்து எல்லா நலன்களையும் விளைவிப்பார். இத்தகைய பல ஒப்புமைகள் இருத்தலால், விநாயகரை யானைமுகம் உடையவராக மட்டும் இல்லாமல் யானை யாகவே கொண்டு புகழ்ந்துரைத்து அருளாளர் கள் போற்றி மகிழ்வர்.



சிவபெருமானிடம் வேண்ட அவரும் அதை ஏற்றுக் கொண்டார். அது முதல் தருமவிடை சிவபெருமானுக்கு உகந்த வாகனமாக உள்ளது. இதைக் கந்தபுராணம் குறிப் பிடுகிறது:

''ஆறுலாஞ் சடை யண்ணலைச்சேர்வனேல்
ஈறிலா தென்று முய்ந்திடு வேனெனாத்,
தேறியே யறத் தெய்வம் செங்கணான்
ஏறதா யோரெழிலுருக்கொண்டதே''

'தருமத்திற்கு என்றுமே அழிவில்லை' எனச் சொல்லப்படுவதன் உண்மை தரும தேவதை தரும விடையாய், தரும நந்தியாய் இருந்து தருமத்தைக் காத்து வருவதிலிருந்து அறிந்து கொள்ளலாம். அவரவர் வாழ்க்கையில் தருமம் செழிக்கவும் நாட்டில் தருமம் ஓங்க வும் பிரதோச வழிபாடு செய்வது அவசியம். தருமத்தின் சொரூபமான சிவபெருமான் தருமத்தின் வடிவாகிய இடபத்தின் மீது நடனக் காட்சியளித்தது பிரதோசகாலத்தில். ''பேரிடபமோடு... நின்று நடமாடி'' எனவும் ''எருது கைத்து அருநட்டம் ஆடல் பேணு வர்'' எனவும் திருஞானசம்பந்தர் துதிக் கிறார். நாமும் துதிக்க வேண்டியது நமது கடமையாகும்.

மூன்றாவதாக நாம் காணத்தக்கது சிவ பெருமானின் பெருங்கருணை. தேவர்களை அழிப்பதற்காக விடம் அவர்களைத் துரத்தி சென்றது. இது புறப்பயம். அதாவது வெளிப்படை பயம். இப்பயத்தைப் போக் கிச் சிவபெருமான் விடத்தைக் கையில் ஏற்றுக் கொண்டார். பின் அதை உட் கொண்டார். அதை அவ்வாறு உட்கொண்ட தால் எல்லா உயிர்களுக்கும் உள்முகமாக ஏற்பட்ட துன்பம் நீங்கியது. புறப் பயத் தைத் தேவர்கள் முதலியவர்கள் அறிய முடியுமே தவிர, உள்முகமாக ஏற்படக் கூடிய துன்பத்தை அறியத் தக்கவர்கள் அவர்கள் அல்லர். வேடனாகத் தோன்றிய சிவபெருமானின் தலைமீது அருச்சுனன் வில் லால் அடித்தது விண்ணவர் மண்ணவர் எல் லோர் மீதும் பட்டதென வில்லுபுத்தூராழ் வார் பாரதத்தில் கூறியுள்ளதும், பிட்டுக்கு மண் சுமந்த சொக்கலிங்கப் பெருமானின் முதுகின் மீது ப்ாண்டிய மன்னன் கோலால் அடித்தது அப்பாண்டியன் உட்பட எல்லார் முதுகுகளிலும் பட்டதெனப் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் புராணத்தில் எடுத்துக் கூறியுள்ளதும் யாம் அறிவோம். வில்லால் அடிபடுவதாலோ கோலால் மொத் துண்பதாலோ பெரியதொரு விபத்து நேரி டாது. ஆனால் நஞ்சு சிறிதளவினதாயினும் பெருந்தீங்கை விளைவித்துவிடும். எவ் வுயிருக்கும் எத்தீங்கும் விளையக்கூடாதென் பதற்காக அதைத்தாம் உண்டு கண்டத்தில் நிறுத்திக் கொண்டார். இத்தகைய பெருங் கருணையின் சின்னம் அவரது கண்டம், விடமேற்றுக் கொண்டதால் அது கறுத்தது. அதனால் அதற்கு நீலகண்டம் எனப்பெயர் ஏற்பட்டது. அப்பெருமானும் நீலகண்டன் ஸ்ரீ கண்டன் என்னும் பெயர்களைப் பெற்ற னர். இவ்வுண்மையை உணர்ந்தார் திரு நீலகண்ட நாயனாருடைய துணைவியார்; திருநீலகண்டத்தின் ஆணையின் பேரில், தம்மைத் தம் நாயகன் தீண்டக் கூடாது எனக் கேட்டுக் கொண்டார். இத்திருநீல கண்டத்தின் விளைவே திருநீலகண்ட நாயனாரைத் தூயராக்கியது. இத்தகைய பெருங்கருணையே திருநாவுக்கரசு நாயனா ருக்கு நஞ்சு கலந்த பாற்சோறு அளிக்கப் பட்ட போதிலும், அன்னாரைப் பாதுகாத் தது. புவனங்களுக்கு உற்ற துயர் நீங்கச் சிவபெருமான் உண்ட நஞ்சு அமுதமாகு மானால், அவருடைய அடியாருக்கு நஞ்ச மும் அமுதாவது அற்புதமா எனச் சேக் கிழார் கேட்கிறார். கிரேக்க நாட்டு சாக் கிரடீசு என்னும் பேரறிஞர் தம் பகைவர் கொடுத்த நஞ்சுண்டு அதன் விளைவாக் இறந்தார். நஞ்சுண்ட கண்டரை வழிபட்ட நாவுக்கரசருக்குத் தாமுண்ட நஞ்சும் அமுத மாயிற்று. பிரதோச காலத்தில் சிவ வழிபாடு செய்வதால், நஞ்சினைப் போன்ற கெடுதி யும் நேரிடாது என்பதான உட்கருத்தும் நாம் கண்டு கொள்ள வேண்டும்.

இறுதியாக நாம் உணர்ந்து கொள்ள வேண்டியது சிவபெருமான் திருவருளை முன்னிட்டு வேண்டி யாதொன்றையும்செய்ய முற்பட வேண்டுமென்பதேயாகும். சிவ பெருமானின் அனுக்கிரகம் பெறாமல் கடல் கடைந்து தேவர்கள் அடைந்த துன்பமும் பின்னர் அப்பெருமானை வழிபட்டு அமுதம் பெற்ற பேறும் நமக்கு எடுத்துக் காட்டு களாக விளங்குகின்றன.

### பிரதோச வழிபாட்டு முறை

ஒவ்வொரு மாதமும் வளர்பிறை, தேய் பிறை இவ்விரண்டு காலங்களிலும் வரும் திரயோதசி திதியில் சூரியன் மறைவதற்கு முன் உள்ள மூன்றேமுக்கால் நாழிகையும் சூரியன் மறைந்தபின் உள்ள மூன்றேமுக் கால் நாழிகையும் சேர்ந்த காலம் (பிற்பகல் 4.30 மணி முதல் 7 மணி வரையில் உள்ள காலம்) பிரதோச காலமாகும். எனினும் சூரியன் மறைவதற்கு முன் உள்ள மூன்றே முக்கால் நாழிகையளவிலுள்ள நேரமே சிவ தரிசனத்திற்கு ஏற்றதென ஆன்றோர்கள் வகுத்துள்ளார்கள். சனிக்கிழமைகளில் வரும் பிரதோசம் சிறந்ததாகக் கொண்டாடப் பெறுகிறது. சிவபெருமான் நஞ்சுண்டது சனிக்கிழமையில். பின்னர் கயிலையங்கிரியில் நடனமாடியது திரயோதசி திதி மாலை நேரத்தில். ஆகவே சனிக்கிழமைகளில்வரும் பிரதோசம் சிவபெருமான் முதலில் கடல்

நஞ்சுண்டதையும், பின்னர் தேவர்களுக்கு அருள் பாலிக்கச் சந்தியா நடனம் புரிந்ததை யும் ஒருமிக்க காட்டுவதாக உள்ளதால் சனிப் பிரதோசம் மிக முக்கியமானதாகக் கொள் கிறோம்.

திரயோதசி ஒரே நாளில் முழு அளவில் எப்போதும் வருவதில்லை. சில சமயங்களில் இரண்டு நாள்களிலும் திரயோதசி வருவ துண்டு. இத்தகைய சூழ்நிலையில் எந்த நாளில் பிரதோச வழிபாடு செய்யவேண்டும் என்பதைத் தீர்மானித்துக் கொள்ளவேண் டும். சூரியன் உதயத்திலிருந்து 60 நாழிகை யளவும் திரயோதசி உள்ள நாள் உத்தம திரயோதசியாகும்.

இத்தகைய பிரதோச நாள்களில் வழி பாடு செய்ய விரும்புகிறவர்கள், தேவர்கள் ஏகாதசி நாளில் பட்டினி கிடந்து துவாதசி யில் உணவருந்தியது போல் விரதம் மேற் கொள்ள வேண்டியதில்லை. பிரதோச நாளில் மட்டும் பிரதோச வழிபாடு முடித்துக் கொண்ட பின்னர் உணவருந்தும் வழக்கம் மேற்கொண்டால் போதும். அதுசமயம் இயன்ற அளவில் அடியார்களுடன் விரதம் முடித்துக் கொள்ளுதல் நன்று.

அந்நாள்களில் தங்கள் தங்கள் இல்லங் களில் தங்களுக்கு இயன்ற அளவில் வழிபாடு செய்து கொண்டு தங்கள் தங்கள் இருப்பி டத்திற்கு அருகிலுள்ள சிவாலயம் சென்று அங்கு நந்திதேவர் உமையம்மையார் சிவ பெருமான் ஆகியோருக்காக நடைபெறும் வழிபாட்டில் கலந்து கொள்ள வேண்டும்.

---

# தீண்டாமையைத் தொலைக்க எழுங்கள்! எழுங்கள்!

காற்றும் நீரும், கோயிலும் சில வகுப்பார்க்கு மட்டும் உரிய வோ? ஆண்டவனுள் 'தீண் டும் ஆண்டவன்' 'தீண்டாத ஆண்டவன்' என்ற இருவேற்றுமை உண்டோ? ஆண்டவன் 'தீண்டாதவன்' உள்ளத்தில் இல்லையோ? கோயில்களில் எலி, பூனை, பாம்புக்குத் தடை உண்டோ? மனித உடல் தாங்கியுள்ள ஒருவனுக்குத் தானா தடை? என்ன கொடுமை! என்ன கொடுமை!

திருக்கோயில்கள் பலவற்றில் சிலந்தி, யானை முதலிய அஃறிணை உயிர்கள் இறைவனை வழிபட்டுப் பேறுபெற்றன என்று தமிழ்மறை முழங்குகிறது. அக்கோயில்களில் ஆறறிவுடைய மனிதன் ஏன்போந்து ஆண்டவனை வழிபட லாகாது?....'நீண்டகாலப்பழக்கம், போகப்போகப் பார்க்கலாம்' முதலிய பேச்சு மூச்சே வேண்டா. இன்றே இன்னே தீண்டாமையைத் தொலைக்க எழுங்கள்! எழுங்கள்!

—திரு.வி.க.

### சாதி நாற்றமே வீசுகிறது

நாளடைவில் நால்வகைச் சாதி, நாலு லட்சம் சாதிகளாய் விட்டன. சாதிக்குள் சாதியாக வும், கிளைக்குள் கிளையாகவும் சாதிக் குப்பைகள் பெருகிவிட்டன. திண்ணைக்கொரு சாதி, நடைக்கொரு சாதி, கூடத்துக்கொரு சாதி, மாடத்துக்கொரு சாதி, அறைக்கொரு சாதி, அடுப்புக்கொரு சாதி, கொல்லைக்கொரு சாதி, வீட்டுக்கொரு சாதி, தெருக்கொரு சாதி, கோவி லுக்கொரு சாதி, மடத்துக்கொரு சாதி, கடவுளுக்கொரு சாதி—எத்துணைச் சாதிகள்! நாடெங் கும் சாதி நாற்றமே வீசுகிறது.

—திரு.வி.க.

### இயற்கை அன்னை அருள் செய்வாளோ?

தீண்டாமைக் குற்றம் பிராமணர் இடத்தில் மட்டும் இல்லை. பிராமணர் அல்லாதார் பாலும் அக்குற்றம் உண்டு. தீண்டாமையில் பிராமணரினும் பிடிவாதமாகச் சில பிராமணர் அல்லாதார் இருத்தல் எனக்குத் தெரியும்.

'பிராமணர் அல்லாதார் இயக்கம்' என்ற ஒன்று தோன்றியிருக்கிறது. அதன் நோக்கம் என்னை? பிறப்பில் உயர்வு தாழ்வு கருதாது, பிராமணரும் தாமும் எல்லா வழியிலும் ஒத்துவாழ வேண்டும் என்பது. பிராமணர் அல்லாதார் பிராமணருடன் சமத்துவம் பெறமுயல்வது போற் றற்குரியதே. ஆனால் பிராமணருடன் போராடி, அவருடன் ஒத்து வாழ எண்ணும் பிராமணர் அல்லாதாருள் எத்துணைபேர் தீண்டாமை விலக்கை ஏற்றுக் கொள்பவர்? அதற்கு உழைப்போர் எத்துணைபேர்? ஒரு சிலர் இருக்கிறார். பெரும்பான்மையோர்க்குத் தீண்டாமை விலக்கில் கவலையுண்டா? என்பதே எனது கேள்வி. 'பறையர் பறையர், தீண்டல் கூடாது' என்று ஒதுங்கிப் பார்ப்பனருடன் மட்டும் சமத்துவத்துக்குப் பார்ப்பனர் அல்லாதார் போராடினால் அப்போராட்டத்திற்கு இயற்கை அன்னை அருள் செய்வாளோ?

—திரு.வி.க.

# முதுமொழிகளும் மூவர் வரலாறும்

டாக்டர் பருத்தியூர்
கே. சந்தானராமன்.

முன்னோர்களின் அநுபவ மொழிகளே பழமொழிகள். ஒவ்வொருவராலும், வாழ்வில் அவ்வப்பொழுது சந்திக்கப்படும் நிகழ்ச்சிகளினால் அவற்றின் நுட்பமான பொருளினையும் ஆழத்தையும் உணரமுடியும். குறிப்பிட்ட பழமொழி தமக்காகவே எழுந்திருக்க வேண்டுமென்று எண்ணுமளவிற்கு ஒருவரின் வாழ்வுடன் அம்மொழிகள் பொருந்தியிருப்பதையும் உணர முடியும்.

சைவ சமயாச்சாரியார்களில், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவரையும் 'மூவர் முதலிகள்' என அழைப்பர். இம்மூவர் முதலிகளின் வாழ்க்கை நிகழ்ச்சிகளால் கீழ்க்காணும் பழமொழிகள் தோன்றியிருக்கின்றன என்பது தெளிவாகிறது. இராமபிரான் புல்லொன்றினை காகாசுரன் மீது பிரம்மாஸ்த்திரமாக விடுத்த நிகழ்ச்சியிலிருந்து ''வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்'' என்றபழமொழி தோன்றியிருக்கிறது. அவ்வகையில் மூவர் முதலிகளின் வரலாற்று நிகழ்ச்சிகளினால் தோன்றிய பழமொழிகளின் பின்னணியைக் காண்போம்.

அப்போது திருஞானசம்பந்தர் மூன்று வயது குழந்தை. தந்தை சிவபாதவிருதயர்சீர்காழி குளக்கரைக்குப் புறப்பட்டார். குழந்தை தானும் உடன் வருவேன் என்று பிடிவாதம் பிடித்தது. தந்தையும் குழந்தையினைக் குளக்கரைக்கு அழைத்துச்சென்றார். குழந்தையைக் கரையில் நிற்கச் செய்துவிட்டு நீராட இறங்கினார் தந்தை. நீரினுள் மூழ்கி 'அகமர்ஷணம்' என்னும் மந்திரத்தைச் சொல்லிக்கொண்டிருந்தார் சிவபாதவிருதயர். அப்போதுதான் தந்தையினைக் காணாத குழந்தை 'அம்மே! அப்பா!' என்று அழுதது. நீரில்முழ்கி மந்திரம் சொல்லிக் கொண்டிருந்த தந்தையின் காதில் அக்குரல் விழவில்லை. ஆனால் எங்கும் நிறைந்தவனும் அனைத்துயிர்களின் அம்மையப்பனுமாகிய சிவபெருமானின் காதில் விழுந்துவிட்டது! குளக்கரைக்கு எழுந்தருளினார் அம்மை பார்வதியுடன். குழந்தைக்குப்பால் அளிக்குமாறு பணித்தார். அம்மையும் அவ்வாறே தனது திருமுலைப் பாலினைப் பொற்கிண்ணத்தில் கறந்து அழுத பிள்ளையாகிய சம்பந்தருக்கு அளித்தார். அதனைப் பருகிய கணத்திலேயேஅனைத்து ஞானங்களையும் பெற்றுவிட்டார் சம்பந்தர். இது திருஞானசம்பந்தர் திருமுலைப்பால் உண்டவரலாறு. இவ்வரலாற்றோடு தொடர்புடைய பழமொழியே 'அழுதபிள்ளை பால் குடிக்கும்' என்பது. சம்பந்தப் பிள்ளை அழுதது. பால் குடித்தது. பரமசிவன் புகழ்பாடியது! பரசமய வேர் அறுத்தது.

ஒரு வீட்டிற்கு விருந்தாளியாக ஒருவர் வந்தார். அவ்வீட்டுக்காரர் 'வாருங்கள், வாருங்கள் வராதவர் வந்திருக்கிறீர்கள். பலநாள் தங்கிச் செல்லலாம். இருந்தாலும் தங்களுக்குப் பல அலுவல்கள் இருக்கும். அதனால் இன்று ஒரு வேளையாவது சாப்பிட்டுவிட்டுச் செல்லுங்கள்' என்றார்.'' ''ஓ...தாராளமாகச் சாப்பிட்டு விட்டுச் செல்கிறேன். சென்ற முறை எனது தமயனார் வந்தபோது கூட மிகத்தடபுடலாக விருந்து வைத்ததாகச் சொன்னார்'' இப்படி வந்தவர் அவரைப்புகழ்ந்தார்.

''ஆமாம்! உங்கள் தகப்பனார் கூட எங்கள் வீட்டு விருந்தை அப்படித்தான் புகழ்வார்! அதோடு மட்டுமா! அவருக்கு எவ்வளவு தாராள மனது! ஊர் திரும்புகையில் ஒரு நூறு ரூபாய் நோட்டினை குழந்தை கையில் திணித்துவிட்டுப் போனார்'' என வீட்டுக்காரர் கூறினார். இவ்வாறு விருந்தினரும் வீட்டுக்காரரும் ஒருவரையொருவர் போலியாக உபசரித்துப் பேசுவதை தஞ்சை மாவட்டத்தில் 'திருப்பூந்துருத்தி உபசாரம்' என்று வழங்குவர்.

அப்பர்பெருமான் திருப்பூந்துருத்தியில் திருமடம் அமைத்து உழவாரத்திருப்பணி செய்து வந்தார். அச்சமயம் திருஞான சம்பந்தரும் அவ்வூருக்கு வந்தார். அவரை வரவேற்க சிவனடியார் கூட்டத்தினர் திரண்டுவந்து ஊர்

எல்லையில் வரவேற்றனர். அக்கூட்டத்தினரிடையே அப்பரைக்காணாத சம்பந்தர் ''எங்குற்றார் அப்பர்?'' என்றார். திருஞானசம்பந்தரின் பல்லக்கினைப் பிற அடியார்களுடன் சேர்ந்து சுமந்து வந்து கொண்டிருந்த அப்பர் கீழே இருந்து எட்டிப்பார்த்தபடி பல்லக்கில் அமர்ந்திருந்த சம்பந்தரிடம் ''இதோ தங்களதுபல்லக்கினைச் சுமந்துவரும் பேறுபெற்றேன்'' என்றார். அவரது செயலைக்கண்ட சம்பந்தர் துடிதுடித்துவிட்டார். ''அப்பரே! என்ன காரியம் செய்தீர்கள்! சிவபெருமானின் பேரருளுக்குப் பாத்திரமான தாங்களா இங்ஙனம் எனது பல்லக்கினைச் சுமப்பது?'' என்றார். ''இதிலென்ன தவறு? அன்னையின் திருமுலைப்பாலுண்ட தங்களைச் சுமப்பது பெரும் பேறல்லவா?'' என்றார் அப்பர். இங்ஙனம் திருப்பூந்துருத்தியில் சம்பந்தருக்குக் கொடுத்த வரவேற்பின்போது அப்பரும் சம்பந்தரும் ஒருவரையொருவர் அன்புடன், பாசத்துடன்-மரியாதையுடன் போற்றிக் கொண்டனர். இப்படி ஒருவரையொருவர் எதிர்கொண்டு வரவேற்று உபசரிக்கும் செயலே முற்காலத்தில் 'திருப்பூந்துருத்தி உபசாரம்'' என்று பழமொழியாக வழங்கிவந்தது. அதுவே தற்காலத்தில் போலி உபசாரத்தைக் குறிப்பிடும் வழக்கமாய் இருந்து வருகிறது.

விருத்தாசலத்தில் இறைவனைப்போற்றிப் பாடிய சுந்தர மூர்த்தி சுவாமிகள் இறைவனை வேண்டிப் பன்னிரெண்டாயிரம் பொற்காசுகள் பெற்றார். அதனை ''நான் விருத்தாசலத்தில் ஓடும் மணிமுத்தாற்றில் போட்டுவிடுவேன். பிறகு அதனைத் திருவாரூரிலுள்ள கமலாலயம் என்ற குளத்தில் எடுத்துக்கொள்ளஅருள்செய்ய வேண்டும்'' என இறைவனை வேண்டினார். அவரும் அதற்கு உடன்பட பொற்காசுகளை மணிமுத்தாறில் போட்டுவிட்டார் சுந்தரர்.

திருவாரூர் திரும்பியவுடன் பரவை நாச்சியாரையும் அழைத்துச் சென்று கமலாலயக் குளத்தில் தேடினார். வெகுநேரம் தேடியும் பொற்காசுகள் கிடைக்கவில்லை. பின் ''பொன் செய்த மேனியீர்''என்று தொடங்கும் பதிகத்தினைப்பாடி இறைவன் அருளால் பொற்காசு மூட்டையை அடைந்தார். இது சுந்தரர் வரலாற்றில் ஒரு சுவையான நிகழ்ச்சி. இந்த நிகழ்ச்சியை யொட்டியே ''ஆற்றில் போட்டு விட்டுக் குளத்திலா தேடுவது?'' என்ற பழமொழி தோன்றியிருக்கிறது.

இம்மூன்று பழமொழிகளும் மூவர் வரலாற்றுடன் பொருந்தியிருக்கக் காண்கிறோம்.

---

## உழவாரப் பணி செய்குவோம்

ஆலயந் தோறும் அப்பரின் வழியில்
உழவாரப் பணிசெய்குவோம்
கோபுரம் காத்துக் கோயிலும் காத்துக்
குணமுடன் நாம் வாழுவோம்
(ஆலயம்)

கல்லும் முள்ளும்களைந்திடும் பணியில்
காண்போம் நாம் களிப்பு
உள்ளும் புறமும் தூய்மையைக் காத்தால்
உயரும் நம் மதிப்பு
(ஆலயம்)

தெய்வமும் ஒன்று சாதியும் ஒன்று
நமக்கில்லை இனவேற்றுமை
ஆண்களும் ஒன்று பெண்களும் ஒன்று
நமக்கில்லை மனவேற்றுமை
திருமூலர் அவர்சொன்ன மொழிபோற்றுவோம்
திருநாவுக்கரசர்தம் வழி போற்றுவோம்
(ஆலயம்)

நம்வீடு நம்நாடு அதைப் போலவே
நம்கோயில் நாம்காத்தல் கடனாகுமே
தேவாரம் தெய்வீகத் திருவாசகம்
தினம்போற்றி நாம்பாடப் புகழோங்குமே
நம் கடன் பணிசெய்து கிடப்பது எந்நாளும்
நம் நலம் தழைத்தோங்கும் பார்மீது மென்மேலும்
(ஆலயம்)

—டாக்டர் த. அமிர்தலிங்கம்

## திருப்போரூர்

# சிதம்பர சுவாமிகள்

திருப்போரூரான், சென்னை.

பாண்டி நாட்டிலே திருவாலவாயில் சிதம்பரக்கவிராயர் என்று புகழ்பெற்ற ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் சங்கப் புலவர் மரபினிலே தோன்றியவர்; அங்கயற்கண் அம்மையார் உபாசன விரதம் மேற்கொண்டவர்.

அவிநாசியிலே வீரசைவர் மரபினிலே தோன்றிய சிவப்பிரகாச சுவாமிகளது பாக நேயரும், சாந்தலிங்க சுவாமிகளிடம் ஞானோபதேசம் பெற்றவருமான குமாரதேவர் விருத்தாசலத்தில் மணிமுத்தா நதிக்கரையில் அமர்ந்து தியானத்தில் ஈடுபட்டார். அவர் தான் தங்கியிருந்த அரசமரத்திலிருந்து பிரம்ம ராட்சசனுக்கு முன்னைய தேகம் பெற அருள் புரிந்தார்.

அவர் ஆறுமாதங்களுக்கு ஒரு முறைத் தன் குருநாதரை தரிசிக்க அவிநாசி சென்று வருவது வழக்கம்.

தன்னுடைய அனுக்கிரகத்தால் பிள்ளைகளைப் பெற்றவரும் பக்தியில் சிறந்தவருமாகிய ரெட்டியார் ஒருவர் பிள்ளைகளுக்கு மேற்கூறிய சிதம்பரக் கவிராயர் கல்வி பயிற்றுவித்து வந்தார். சிதம்பரக்கவிராயரின் கல்வி தேர்ச்சியை கேள்வியுற்ற குமாரதேவர், சிதம்பரக்கவிராயரை அணுகி சில வேதாந்தச் சொற்களுக்கு பொருள் வினவினார்!

சிதம்பரக்கவிராயரால் அச்சொற்களுக்குப் பொருள் கூற இயலவில்லை. குமாரதேவர் அவரை நோக்கி தாம் மறுமுறை வரும்போது பொருள்கூறுமாறு சொல்லிச் சென்றார்.

குமாரதேவர் சிதம்பரக்கவிராயரிடம் மீண்டும் வந்து பொருள் கேட்டார். அப்பொழுதும் அவுரால் பொருள் கூறமுடியவில்லை.

குமாரதேவர் சிதம்பரக்கவிராயருக்கு ஞானதீட்சை அளித்து, அவரைத்தன் குருநாதர் சாந்தலிங்க சுவாமிகளிடம் அழைத்துச் சென்றார். சாந்தலிங்க சுவாமிகள் சிதம்பரக்கவிராயரையும் சீடராக ஏற்று மிகவும் மன மகிழ்ந்து தாமியற்றிய வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார், கொலை மறுத்தல் ஆகிய நான்கு நூல்களையும் கொடுத்து அவைகளுக்கு சிதம்பரக்கவிராயரை உரை இயற்றப் பணித்தார்.

பிறகு, சிதம்பரக்கவிராயர் வீராகம உத்திர சைவ சித்தாந்த நிரூபணமாகிய வீரசாமான்யாதி தீக்ஷையை விதிப்படியநுகிரகிக்கப் பெற்று, அங்க யோகங்களை உணர்ந்து ஞானோபதேசம் செய்யப் பெற்று ஞானசமாதி கூடியிருக்கையில், மயில் ஒன்று தோன்றி, சொரூபத்தைச் சிறகால் மறைத்து நிருத்தம் செய்தது. அக்குறிப்பையறிய அவர் தன் ஆசிரியரை வின்வ அவரும் அங்கயற்கண் அம்மை அதனைப் புலப்படுத்தும் என்றார்.

சிதம்பரக்கவிராயர் மதுரை அடைந்து, நாற்பத்தைந்து நாட்கள் பொற்றாமரைக் குளத்தில் நீராடி மத்தியான காலத்தில் ஒரு பிடி சருகும் மூன்றுகை நீரும் பருகி நிஷ்டையில் அமர்ந்தார். மீனாட்சியம்மை அவரை சோதிக்கும் பொருட்டு, சுரம், கை கால் பிடிப்பு முதலியவற்றை கவிராயருக்குக் கொடுத்து வருத்தினார்.

கவிராயர் சிறிதும் மனம் தளராமல் தியானத்தில் ஈடுபட்டார். மீனாட்சி அம்மையார் கவிராயருடைய பக்தியை மெச்சி, அவருக்குக் காட்சியளித்து அவருக்கு உற்ற உடற்பிணியுடன் மலப்பிணியும் போக அருள் புரிந்து, இப்பகுதிக்கு முப்பது யோசனை தூரத்தில் யுத்தபுரி என்ற சுப்ரமண்ய சேத்திரம் உள்ளது. அவ்வூர் ஆறுமுறை பிரசித்திப்பெற்று இப்பொழுது அழிந்துள்ளது. அந்த ஊர் உன்னாலேயே ஜுர்ணோத்காரணமாகிநிலைபெற்று விளங்கவேண்டும். முருகக்கடவுளே உனக்குக்குருவாய் வந்து 'மற்ற உண்மைகளை விளக்குவார்.'' என்று கூறினார். தேவியின் ஆணையைச் சிரமேற் கொண்டு சிதம்பரக்கவிராயர் யுத்தபுரி என்னும் திருப்போரூரை நோக்கி நடந்தார்.

அவ்வமயம் திருப்போரூர் அழிந்து பனங்காடாய் இருந்தது. ஒரு பெண் பனை மூலத்தில் ஸ்ரீசுப்ரமணியர் புற்றிடம் கொண்டு விளங்கினார். அப்பனை மரம் நன்றாக வளர்ந்து ஓலைக்கோர் பாளை விட்டிருக்கவே மரமேறும் சான்றோர்கள் பாளைக்கோர் பானைகட்டி கள் இறக்கினர். ஆனால் அப்பனை மரத்தைச்



எதுபிழை செய்தாலும் ஏழையே னுக்கிரங்கித்
தீது புரியாத தெய்வமே—நீதி
தழைக்கின்ற போரூர்த் தனிமுதலே நாயேன்
பிழைக்கின்ற ஆறுநீ பேசு

—தவத்திரு சிதம்பர சுவாமிகள்

சுற்றிலும் கொடிகள் அடர்ந்து நாளும் படர்ந்தவண்ணமிருந்தன.

அக்கொடிகளை தினமும் வெட்டி வந்த போதிலும், மறுநாள் தழைத்து வளர்ந்து காணப்பட்டன. அக்கொடிகளை அடியோடு அகற்றயெண்ணி, அவைகளின் வேரை கோடரி போன்ற ஆயுதங்களால் வெட்டினர். அவ்வாறு வெட்டும்போது புற்றினருகில் குருதி வெளிப் பட்டது. புற்றை அகற்றிப் பார்க்க அங்கு சுப்ரமணியர் சுயம்புவாய் குடிகொண்டிருக்கக் கண்டனர்.

அன்று முதல் அவ்வூரார் ஒரு ஆதி சை வரைக் கொண்டு சுப்ரமணியருக்குத் தினந் தோறும் வழிபாடு செய்து வந்தனர். ஒரு நாள் எதிர்பாராவிதமாக கூரையும் கோயிலும் ஊரும் தீப்பற்றி எரிந்தன. இது அவ்வூராருக்கு அதிசயமும் ஆச்சரியமும் அளித்தது.

இது நிற்க, சிதம்பரக் கவிராயர் மீனாட்சி யம்மையின் உத்தரவை நிறைவேற்ற மதுரையை விட்டு புறப்பட்டார். அவர் விருத்தாசல மடைந்து, குமாரதேவர் நிஷ்டையில் இருந்த தால் அவரை மும்முறை வலம் வந்து திருப் போரூரை நோக்கி நடந்தார்.

செல்லும் வழியில் பொம்மையபாளையம் என்ற ஊரை அடைந்த பொழுது, தம்மைக் காண விழைந்த, முக்கள்ளிப் பாலையே உண வாக அருந்திவந்த பாலைய சுவாமிகளை சந்தித்து அளவளாவி மகிழ்ந்து, அவரிடம் விடைபெற்றுச் சென்றார். கிளியனூர் சென்ற டைந்தபோது மலபரிபாகம் அடைந்த, செங் குந்த மரபைச் சார்ந்த ஒரு மூதாட்டியார் வேண்டுகோளுக்கிணங்கி அங்கு ஓராணடு காலம் தங்கிப்பின், அவரிடம் விடைபெற்று திருப்போரூர் சென்றடைந்தார்.

சிதம்பரக் கவிராயர் திருப்போரூரில் தினந்தோறும் வெள்ளைப் பூக்கள் நிறைந்த ஓடையில் நீராடி, நியம நிட்டைகளை முடித்துக்கொண்டு பிரணவ மலைச்சாரலில், வேம்படி விநாயகர் கோயிலில் தங்கி வந்தார்.

மூன்றாம் நாள் மாலையில் சிதம்பரக் கவிராயர், ஓடைக்குச் செல்லுகையில் அவர் அணிந்திருந்த ஆப ணங்களை அபகரிக்கக் கள்வர்கள் அவரைத் தொடர்ந்தனர். ஆனால் அவர்கள் களவாட எண்ணியபோதே அவர் களுக்கு கண்கள் தெரியாமல் போயின. அவர் கள் சிதம்பரக் கவிராயரிடம் மன்னிப்பு கோரினர்.

கவிராயரும் அவர்களுக்குக் கண்தெரியு மாறு அருள்புரிந்து, அவர்கள் சம்பாதித்து வைத்திருந்த பொருளின் பெரும்பகுதியைக் கோயில் கட்ட கொடுக்குமாறு கேட்டுக் கொண் டார். அவர்களும் அதற்கு இசைந்தனர்.

சிதம்பரக் கவிராயர் ஓடையில் நீராடி நியம நிட்டைகளை முடித்துக்கொண்டு, பெண் பனை மூலத்தில் சுயம்புவாய் முளைத்திருந்த முருகக் கடவுளை வழிபட்டுக்கொண்டு, பிள்ளையார் கோயிலில் தங்கி வந்தார். ஒரு நாள் முருகக் கடவுள் குமாரதேவர் உருவம் தாங்கி வந்தார். சிதம்பரக் கவிராயர் அவரை வணங்கி மீனாட்சியம்மை அருள்புரிந்து கட்ட ளையிட்டதைக் கூறினார்.

அதைக் கேட்ட குமாரதேவராய் வந்த முருகக் கடவுள், ''நாமிருவரும் சுவாமியை தரிசிப்போம். வருக'' என்று கூறினார்.

முற்காலத்தில் ஆலயம் எவ்வாறிருந்த தென சிதம்பரக் கவிராயர் கேட்டார்.

முருகப் பெருமான் அவருக்கு தீட்சை கொடுத்து ஆலய அமைப்பு, கர்ப்பக்கிருகம், மண்டபம், தேவிமார்கள் சந்நிதி, திருமதில் கோபுரவாயில், துவஜஸ்தம்பம், மாடவீதி, மடாலயம், தீர்த்தம் முதலிய யாவும் சிற்ப நூலளவுப்படி சிறப்பாக விளங்க உணர்த்தி னார்.

முருகக் கடவுள் ஆலயத்துட்புகுந்து சுயம்புவாயிருந்த தம்மைத் தாமே 'ஹர, ஹர' என்று அஞ்சலி செய்தார். சிதம்பரக் கவி ராயர் அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி எழுந்துபோது குமார தேவராய் வந்தவர் முருகக் கடவுளே என்று கவிராயர் உணர்ந்தார். கவிராயரும் அத்தருணம் முதல் சுவாமி களானார்.

சிதம்பர சுவாமிகள் சுரம், சூலை, வயிற்றுவலி, மகோதரம் முதலிய உபாதைகளி லிருந்து திருநீறு பூசி, மக்களை குணப்படுத் தினார். துன்பம் நீங்கியவர்கள் கொடுத்த காணிக்கைகளையும், முன்பு கள்வர்கள் கொடுத்த பொருளையும் கொண்டு ஆலயத் திருப்பணியை செய்ய உத்தேசித்தார். அவ் வூர்க்குடிகளும் சான்றோர்களும் கோயிலை ஜீர்ணோத்தாரணம் செய்து, நித்திய பூசை செய்ய வழிவகுக்க வேண்டுமென்று சிதம்பர சுவாமிகளிடம் கேட்டுக் கொண்டனர்; அவரும் அதற்கு இசைந்தார்.

அப்பொழுது கிளியனூர் மூதாட்டியார் தம் சரீரப் பிரயாசையால் சேகரித்த ஒரு பொன்னைக் கொண்டுவந்து கொடுத்தார். அதைச் சிதம்பர சுவாமிகள் சிரசிலும் நெற்றி யிலும் கண்ணிலும் ஒற்றிக் கொண்டு அப்பொன் னைக் கர்ப்பகிரக வேலைக்குப் பயன்படுத்திக் கொண்டார்.

சென்னையிலிருந்து வந்த பாளையத்தா ரெட்டியார் என்பவர் இரண்டு பை வராகன் களை சுவாமிகளிடம் கொடுத்தார். அதை சுவாமிகள் எட்டு நாட்களுக்குப் பிறகு ஏற்றுக் கொண்டார்.

இவ்வாறு கிடைத்த காணிக்கைகளை கொண்டுகோயிற் திருப்பணிகளை நிறைவேற்றி யந்திர ஸ்தாபனம் அமைத்துக் கும்பாபிஷேகம் செய்து நித்தியபூசை முதலியவைகளை நடத்தி வந்தார்.

இது நிற்க, தாம் வீற்றிருந்த புளிய மரத்தின் தென்கிழக்கில்ஒரு பரிணாமம் நிரு மாணித்து அதன் வடபாலிருந்த சிறுகுளத்தைத் தடாகமாக்கி அதன் மேற்பால் ஓர் சிற்றா லயம் கட்டுவித்து அதில் விநாயகப் பிரதிட்டை யும், வேலாயுதப் பிரதிட்டையும் செய்து அப்பிள்ளையார்க்கு சுந்தர விநாயகர் என்றும் தடாகத்திற்கு வேலாயுத தீர்த்தம் என்றும் பெயர் தந்தனர்.

ஆலயத்திருப்பணி நடத்திவரும் காலத்தில் திருப்போரூர் சந்நிதி முறை, பஞ்சாதிகார விளக்கம், வைராக்கிய சதகம் முதலான பல நூல்களுக்கும் உரை செய்து திருவாசகத்தில், ''புணர்ப்பதொக்க வெந்தை யென்னை'' என்னும் பாசுரத்திற்கு ஆசிரியராய் வந்த முருகக்கடவுள் கட்டளையின்படி பதவுரை வழங்கினார்.

சில நாட்களுக்குப் பின் வைகாசி மாதம் விசாக பௌர்ணமியில் தாம் சமாதியில் நிரதி சயானந்த நிலையிற்கலவாமல் கலந்து நிற்கும் செவ்வி வருவதுணர்ந்து அதற்கு முன்னாளாகிய சுவாதி நட்சத்திரத்தில் மகேசுவர பூஜையும், மறுநாள் விசாகத்தில் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு மகாபிஷேகமும் மூன்றாம் நாள் தொடங்கி வேம்படி விநாயகர்க்கும் பிரணவ மலை தியாககைலாசநாதர் சந்நிதி முதலிய வற்றிற்கும் முறைப்படி அபிசேகாதிகளும் செய்வித்துத் தரிசனம் செய்து வரக்கடவை என்று கட்டளையிட்டு, அன்று மகேசுவர பூசையை நடத்திக்காட்டி, மறுநாள் வைசாக பௌர்ணமியாதலால் அபிஷேகம் முதலிய வற்றை நடத்தும்படி சிவசங்கர சுவாமிகளை ஆலயத்திற்கு அனுப்பி, தாம் வேலாயுத தீர்த்தத்தில் முழ்கிச் சிவபூசை யாராதனை முடித்து நிட்டை கூடியிருந்தார்.

அவ்வமயம் திருவண்ணாமலையில் கிரிப் பிரதட்ணம் செய்து வந்த சோணாசல தேவரை, அருணகிரீசர் ஆதிசைவரைப்போல் காட்சியளித்து திருப்போரூர் சென்று சிதம்பர சுவாமிகளை சந்திக்கப் பணித்தார். சிதம்பர சுவாமிகள் அவர் கோரிக்கையை நிறைவேற்றி ஒடுக்கத்தில் அமர்ந்தார். கோயிலில் கற்பூர தீபராதனை நடக்கும்பொழுது சிதம்பர சுவாமிகள் தோன்றி மூலவரோடு இரண்டறக் கலந்தார்.

அக்காட்சியைக் கண்ணுற்றபலர் ஆனந்தப் பரவசமடைந்து "அர அர" என்ற ஒலி எழுப்பினர்.



## பிரணவ கணபதி விளக்கம்

''விநாயகர்'' என்ற சொல்லின் பொருள், தமக்குமேல் நாயகர் அற்றவர், ஒப்புயர்வற்றவர் என்பதாம். விநாயகர் திருவுருவத்தின் அமைப்பு, யானை முகம், ஒடிந்த கொம்பு, பருத்த தொந்தி, இடதுகையில் மோதகம், மூசிகவாகனம் இவற்றுடன் இருக்கும் கோலத்தோடு விளங்குவதாகும். இவர் பரமசிவத்தின் மூத்த குமாரர் ஆவார். எல்லாம் வல்ல பரம்பொருளாகிய கடவுளிடமிருந்து முதலாவது உண்டாகிய படைப்பு 'ஓம்' எனும் பிரணவநாதமேயாகும். அந்த ஓம் எனும் ஒலியின் வரிவடிவமே விநாயகரின் திருவுருவமாம். இறைவனிடமிருந்து முதற்கண் தோன்றியது ஓங்காரப் பிரணவமே. ஆகையால் இவர் ''பிரணவ கணபதி'' என்றும் ''ஓங்கார ரூபன்'' என்றும் அழைக்கப்படுகிறார்.

# கிருட்டிணன் தூது

டாக்டர் த. அமிர்தலிங்கம்

(முன் தொடர்ச்சி)

பாரதத்தில் விதுரர் சிறந்த நீதிமானாகவும், சிறந்த வில்வீரராகவும் போற்றி உரைக்கப்படுகிறார். ''நீதி புனை விதுரன்'' ''வில் விதுரன்'' எனவே அவரைக்குறிப்பிடும் இடங்களில் எல்லாம் அடைமொழி கொடுத்துப் போற்றி உரைத்திருப்பதைப் பாரதம் முழுதும் காண முடியும். துரியோதனன் அவருடைய பிறப்பை இழித்துக்கூறும் அளவிற்கு அவர் இழி பிறப்பாளரா? எனில் இல்லை இல்லை என்றே சொல்லுதல் வேண்டும். ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்'' என்ற வள்ளுவர் வாய்மொழியே எக்காலத்திற்கும் பொருந்தும் பொன்மொழி என்பதை நன்மனத்தோர் ஒப்புவர். வியாச முனிவருக்கும் அம்பிகைக்கும் பிறந்தவர் துரியோதனனின் தந்தையாராகிய திருதராட்டிரர். வியாச முனிவருக்கும் அம்பாலிகைக்கும் பிறந்தவர் பாண்டவர்களின் தந்தையாராகிய பாண்டு. வியாசமுனிவருக்கும் அம்பிகையின் பணிப்பெண்ணிற்கும் பிறந்தவரே விதுரர்.

விதுரரின் மேன்மையை வியாசமுனிவரே

''அம்பிகைக்கொடி தோழியை விடுத்தனள்
அவள்புரி தவந்தன்னால்
உம்பரிற்பெறு வரத்தினால் தருமன் வந்து
உதித்திடும்பதம் பெற்றான்
வெம்படைத் தொழில் விதுரன் என்றவன்
பெயர்''

(சம்பவச் சருக்கம். 20)

எனக் கூறியிருப்பதைக் காணலாம். அறக்கடவுளாகிய எமனே விதுரராகப் பிறந்தார் என்பது வியாசர் வாக்கு. அவருடைய அத்தகைய சிறப்பினைப் போற்றித்தான், வீடமரும் விதுரரையே அமைச்சராக்கி அவனி ஆள வைத்துள்ளார். அத்தகைய நீதிமானை நீசன் துரியோதனன் பழித்துரைத்ததும் அவன் வினையே அல்லாமல் வேறில்லை.

விற்களிலே சிவனுடைய வில் ஒன்று விஷ்ணுவினுடைய வில் ஒன்று, ஆக இரண்டு விற்களே மேன்மையான விற்கள் என்று காவியங்களில் பேசப்பட்டுள்ளன. சிவபெருமானுடைய வில்லை முறித்தே இராமன் சீதையை மணங்கொண்டான் என்பதுஇராமாயணத்தால் அறியலாகும் செய்தி. மற்றொரு வில்லாகிய விஷ்ணுவின் வில், பரசுராமனிடம் இருந்து, பின்பு இராமபிரானிடம் வந்துற்றது. இராமபிரானிடம் இருந்த அவ்விஷ்ணுவில்லே விதுரனிடம் வந்து விளங்கியது என்பதைப் பாரதத்தால் அறிகிறோம். அவ்விஷ்ணு வில்லைக் கொண்டே நிகரற்ற வில்வீரராக விளங்கினார் விதுரர். அவர் போர்க்களத்திலே எதிர்நிற்பாரேயானால், அர்ச்சுனனும் அவரை வெல்ல முடியாது. திருமாலின் அமிசமாகிய கண்ண பெருமானும்கூட வெல்லுதல் அரிதேயாகும். ஆகவே நடைபெறும் பாரதப் போரில் பாண்டவர் வெல்லவேண்டுமானால், விதுரரின் கையில் இருந்த விஷ்ணு வில் முதலில் அழிந்தாக வேண்டும். பாண்டவரின் தூதராக வந்த கண்ணன், விதுரரின் வில்லை அழிக்க செய்த தந்திரம் தான், விதுரரும் எதிர்பாராமல் அவர் வீட்டிற்கு விருந்தாகச் சென்றது. அதனால் துரியோதனுக்குக் கோபம் வந்து 'தாசி மகன்' என விதுரரைப் பழிக்க விதுரரும் 'வில்லிரண்டினும் உயர்ந்த வில்லதனை வேறிரண்டு படவெட்டினார்'' என்பதை மேலே கண்ணுற்றோம்.


வீடமரும், விதுரரின் வில்லின் சிறப்பை ''காரனைத்தும் விடு தாரையன்ன பலகணைகள் ஏவி அமர்கருதும் வில்'' என்று கூறி ''வீரனைப் பழுதுரைத்த நீ பகையை எங்ஙனே தனிகொல் வெல்லுவாய்'' என துரியோதனனைக் கண்டிப்பதைக் காணுகின்றோம். துரியோதனன் அவையில் இருந்த அரசர் பலரும் ''விஷ்ணு வில் முறிந்து போனதே! விசயன் போருக்கு வருவானேயானால்,எந்த வில்லி எதிர் நிற்கும்?'' என்று வருந்தி உரைப்பதையும்காணுகின்றோம் ''அப்படிப்பட்ட சிறந்த வில்லை ஏன் முறித்தீர்'' எனக் கண்ணபெருமானும் தெரிந்தும் தெரியாதவரைப்போல் விதுரரை

''இருசிலையுண்டென்றறிந்த இருநிலத்
தியம்பும் வில்லின்
ஒரு சிலை முறித்த சீற்றமென் கொலோ?''

(கிருட்டிணன் தூது 141)

என வினவுவதைக் காணுகின்றோம்.

''உரைத்த புன்சொல் எனக்கிசையாமல் யானும் இருஞ்சிலை இறுத்தேன்'' என்று



மயிலை அருள்மிகு வெள்ளீஸ்வரர் ஆலயத்தில் 15.8.85 இல் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் பா. வளர்மதி கலந்துகொண்டபோது எடுத்த படம்.

விதுரர் விடை கூறுகிறார். உடனே வில் முறிந்தது குறித்து கண்ணபெருமானுக்கு உண்மையில் வருத்தம் இருக்குமானால் தம் வருத்தத்தை அல்லவா விதுரரிடம் தெரிவித்திருக்க வேண்டும். அவர் மன மகிழ்ச்சியே கொண்டாராம்.

''மாயனும் மகிழ்ந்து நோக்கி
மாசுணமுயர்த்த மன்னன்
போயருஞ்சேனையோடு போர்க்
களங் குறுகும்போது
நீயவனருகு நில்லா தொழியின்
நின்நேய மைந்தர்
தாயமுஞ் செல்வமுற்றுந் தரணியும்
பெறுவர்அன்றே''

(கிருட்டிணன் தூது. 145)

என்ற பாடலை நன்கு படித்துப் பாருங்கள். 'மாயன்' என்கிறார் கண்ணனை வில்லிப்புத்தூராழ்வார். தம்மை 'ஆயன்' என்று பழித்த துரியோதனனை மாய்க்கவே 'மாயன்' தந்திரமாய் தூது என்ற பெயரில் அத்தினாபுரி வந்து, விதுரர் வீட்டில் விருந்தாகத் தங்கி, வில்லொடிக்கச் செய்தார் என்பது இப்பாடலால் தெளிவாகும். மேலும் கண்ணபெருமான் சொல்லுகிறார்.

''ஏற்றிய நறுநெய் வீசி
இந்தனம் அடுக்கினாலும்
காற்றுவந் துறாதபோது
கடுங்கனல் கதுவவற்றோ
நீற்றணி நிமலன் அன்ன நின்கை
வில்இற்ற தாயிற்
சீற்றவேல் அரசன்சேனை
தென்புலம்படர்கை திண்ணம்''

(கிருட்டிணன் தூது. 164)

'விறகுகளை அடுக்கி, நெய்யை ஊற்றி எரிய வைத்தபோதும், காற்று சாதகமாக வீச வில்லையானால், மிகுந்த நெருப்பு பற்றாமல் போய்விடும். விபூதியைத் தரித்த குற்றமற்ற சிவபெருமானை ஒத்த விதுரரே! உம் கையில் இருந்த வில்லை நீர் ஒடித்தது பாண்டவர் பக்கமாய் வெற்றிகாற்றினை வீச வைத்திருக்கிறது. இனி துரியோதனன் படைகள் யம லோகம் செல்வது உறுதி' என்பதாகக் கண்ண பெருமான் தம் எண்ணத்தைத் தெளிவுபடுத்தியிருப்பதால், பாரத அமரில் யாவரையும் நீறாக்கிப் பூபாரம் தீர்க்கவே புயல்வண்ணன் சூழ்ச்சிகள் புரிகிறான் என்பதை உணரலாம். வில்லை ஒடித்த அச்சூழ்ச்சியுடன் கண்ணனின் மாயை நின்று விடவில்லை. ''துரியோதனன் மொழிந்த வெல்லாம் பொறுத்துக்கொள்''என்ப

தாக விதுரரைத் தேற்றி தாம் வந்த வேலையை மேலும் தொடரக் கண்ணபெருமான் கர்ணனை பயந்த காதற்கன்னிதன் கோயில் புகுந்தாராம். கர்ணனைப் பயந்த காதற்கன்னி யார் என்பது கர்ணனுக்கே தெரியாத ஒன்று.

கர்ணனுக்கு மட்டுமல்ல. கண்ணபெருமான் ஒருவருக்கு அன்றி மற்ற எவருக்குமே தெரியாத மாபெரும் இரகசியமே அது. துரியோதனனுக்கு உற்ற நண்பனாகவும், பஞ்சபாண்டவர்களுக்குக் கொடிய பகைவனாகவும் விளங்கும் கர்ணனைப் பெற்றவள் யார் என்பதைத் தெரிந்துகொள்ளும்போது அது நமக்கே விந்தையாகத்தான் விளங்குகிறது. எந்தப் பஞ்சபாண்டவர்களை வெல்வேன் என்று கர்ணன் உறுதிபூண்டு விளங்குகின்றானோ, எந்தப்பஞ்சபாண்டவர்களில் ஒருவனாகிய அர்ச்சுனனைத் தன் கொடிய நாகாத்திரக்கணையால் கொல்வேன் என்று, கர்ணன் வஞ்சினம் பூண்டு விளங்குகின்றானோ, அந்த அர்ச்சுனன் உள்ளிட்ட பஞ்சபாண்டவர்களை ஈன்ற குந்திதேவியே, கர்ணனைப் பயந்த தாய் என்பது கண்ணபெருமானால், குந்திதேவியிடம் அறிவிக்கப்படும்போது, அச்செய்தி குந்தியே ஆச்சரியப்படத் தக்க செய்தியாகத்தான் இருக்கிறது! அந்தவிவரங்களை இனி விரிவாகக் காண்போம்.

பஞ்சபாண்டவர்கள் வனவாசத்தில் வாடிய அந்தப் பதின்மூன்று ஆண்டுக்காலமும் குந்தி அத்தினாபுரியில் தனக்கென திருதராட்டிரர் ஒதுக்கியிருந்த ஓர் அரண்மனையில் தங்கியிருந்தாள். தம் அன்பிற்குரிய மக்கள் ஐவரையும் மருமகளையும் குந்திதேவியும் பதின்மூன்றாண்டுக்காலம் காணப்பெற்றாள் இல்லை. கண்ணபெருமான் தம் மனைக்கு எழுந்தருளக் கண்ட குந்தி, தம் மக்களையே நேரில் கண்டாற் போன்ற பெருமகிழ்வு கொண்டாள். ''கானுறு மைந்தர் தம்மைக் கண்டனள் போன்றாளாகி'' களிப்புற்ற குந்திதேவி ''யானுறை இல்லின் வந்தது என்ன மாதவம்?'' என்று கண்ணபெருமானை ஏத்தி, அதன்பின் கண்ணபெருமான் அத்தினாபுரிக்கு வந்துற்ற காரணத்தையும் வினவுகின்றாள்.

அதற்குக் கண்ணபெருமான்

''நின்பெரும் புதல்வர் சொல்ல நெடும்புனல் நாடுவேண்டி
வன்புடை யரசர்கோமான் மனக்கருத் தறிய வந்தேன்
தென்புலவேந்தன்வெஃகச்செருத்தொழில் புரிவன் என்றான்''

(கிருட்டிணன் தூது.150)

என்று பாண்டவர்களுக்காக தூது வந்ததையும், துரியோதனன் நாடுதர மறுத்துப் போரே புரிவேன் என முடிவுசெய்திருப்பதையும் எடுத்துக் கூறுகின்றார். போர் நடப்பது உறுதியாகிவிட்டதை அறிந்த அந்தத்தாயின் மனம், போரில் வெல்பவர் யாரோ? விதியினால் சாபவர் யாரோ? என்று எண்ணிக்கலங்குகிறது. அப்போதுதான் கர்ணனும் குந்தி பெற்ற பிள்ளையே என்ற இரகசியத்தை கண்ணபெருமான் குந்திக்கு எடுத்துரைத்து அவளை அதிசயிக்கவும் ,அதிர்ச்சியடையவும் செய்கிறார்.

கோபத்திற்கும் சாபத்திற்கும் பேர்போன துர்வாச மாமுனிவர் குந்திபோஜராஜனின் அரண்மனைக்கு எழுந்தருளியிருந்த காலத்தில், மன்னன் தன் மகளான குந்தியை முனிவர்க்குப் பணிவிடை செய்யுமாறு பணியில் அமர்த்தியிருந்தான். குந்தியும் அவ்வாறே ஓராண்டுக்காலம் துர்வாச முனிவருக்கு எல்லாப் பணிவிடைகளையும் சிறப்பாக நிறைவேற்றி, முனிவரின் மதிப்பிற்கு ஆளானாள். அதனால் பெருமகிழ்ச்சியுற்ற துர்வாசமாமுனிவர் தேவர்களை வரவழைக்கவல்ல ஆறு மந்திரங்களைக் குந்திக்கு உபதேசித்தருளி, இம்மந்திரங்களைச் சொல்லி தியானித்தால் அந்தந்த மந்திரங்களுக்குரிய தேவர்கள் வந்து அவளுக்கு அவர்களின் அமிசமாக விளங்கும் புத்திரர்களைத் தருவர் எனக் கூறி, வாழ்த்திச் செல்கின்றார். முனிவர் சென்றபிறகு, குந்தி அம்மந்திரங்களைச் சோதித்துப் பார்க்க விரும்பி சூரியனுக்குரிய மந்திரத்தைச் சொல்லி தியானித்தாள். உடனே சூரிய பகவானும் அம்மந்திரவல்லமையால் குந்தியின் முன் தோன்றித் துருவாசர் கூறியவாறே தம் அமிசமாக ஒரு குழந்தையையும் உண்டாக்கிக் குந்திதேவியிடம் கொடுத்து, மறைந்துபோனார். அதற்குப்பிறகுதான் குந்தி, தனக்கு இன்னும் திருமணமே ஆகாத நிலையில், இப்படியொரு குழந்தைக்கு தன் அறியாமையால் தாயாக நேர்ந்ததை எண்ணி, இவ்வுண்மை மற்றவர் அறியநேரின் பழிவந்து சேருமே என மனம் பதைத்து, வேறு வழியின்றி ஒரு மரப்பேழையில் குழந்தையை வைத்து யமுனை ஆற்றில் விட்டுவிட, யமுனையாறும் அக்குழந்தையைக் கங்கையாற்றில் கொண்டுபோய் சேர்த்தது. கங்கையாற்றில் மிதந்து வந்த மரப் பேழையைத் திருதராட்டிர மன்னனின் தேரோட்டியாகிய அதிரதன் அடையப்பெற்றுக் குழந்தையைக் கண்டெடுத்து தனக்குப் பிள்ளை இல்லாததால் தானே மகிழ்ந்து அதனை வளர்க்க ஆசைகொண்டு வாரி எடுக்குங்கால் கர்ணகுண்டலங்களுடன் பிறந்த இக்குழந்தையைக் கர்ணன் என அழைக்குமாறு சூரியனும் அசரீரியாக ஆகாயத்தில் நின்று ஆணையிட, கர்ணனும் தேரோட்டியின் மகனாக வளர்ந்தான் என்ற விவரங்களையெல்லாம் முக்காலமும் அறிந்தவராகிய கண்ணபெருமான், குந்திதேவிக்கு எடுத்துரைத்தருளுகின்றார்.

''கதிரவன் அருளினாலோர் கணத்திடை காதல் கூர
மதலையங் கொருவன் தன்னைப் பயந்த பின் வடுவென்றஞ்சி
மிதவையம் பேழைதன்னிற் பொதிந்து நீ விட அப்போது அந்
நதியும் மகவைக் கங்கைநதியிடைப் படுத்ததன்றே''

(கிருட்டிணன்தூது153)

''காதல்நின் புதல்வன் தன்னைக் கண்ணிலா அரசன் பொற்றேர்ச்
சூதன்வந் தெடுத்துக்கொண்டு சுதனென வளர்க்குங்காலை
ஆதபன் இவனை யாருங் கன்னன் என்று அழைக்கவென்றான்
தாதையும் விசும்பிற் சொன்ன நாமமே தக்கதென்றான்''

(கிருட்டிணன்தூது154)

இவ்வாறாகக் கர்ணன் குந்திதேவியின் தலைப்பிள்ளையாவதை எடுத்துரைத்த கண்ண பெருமான் அம் மூத்தபிள்ளை கர்ணன், துரியோதனனின் அன்புக்குப் பாத்திரமாகி அங்க நாட்டு மன்னனாக விளங்குவதையும், அர்ச்சுனனைப் பாரதப்போரில் கொன்றே தீருவது எனக் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதையும் தெரிவித்து, அதன்பிறகு தாம் குந்தியைத்தேடி வந்த காரணம் என்னவென்பதையும் விவரிக்கிறார். பாண்டவர்களுக்கு வெற்றித்தேடி தருவதொன்றே கண்ணபெருமானின் இலட்சியம். அந்த இலட்சியம் நிறைவேற தடையாயிருந்த விதுரரின் வில்லை அவர் வீட்டில் விருந்தாளியாகத் தங்கியதன்மூலம் ஒடிக்கச்செய்து வெற்றி கண்ட கண்ணபெருமான் இத்தனைக்காலம் குந்தியின் பிள்ளை கர்ணன் என்பதைத் தெரிவிக்காமல் இருந்து, இப்பொழுது அதைக் குந்திக்குத் தெரிவிப்பதன் மூலம், பாண்டவர்களின் வெற்றிக்கு பாடுபடுகிறார். அதனால் தான் குந்தியிடம் ''நின் மகன் கர்ணனை, பாண்டவர்கள் பக்கம் வருமாறு நீ போய் விரைவில் கூறிக் கூட்டுவிக்கவேண்டும். அதனால் கர்ணனுக்கு உண்டாகப்போகும் நன்மைகளையும் அவனுக்கு நீ எடுத்துரைக்கவேண்டும்'' என்பதாகக்கண்ண பெருமான், குந்திதேவியிடம் அறிவிக்கிறார்.

''அந்தநின் மைந்தன் தானே அருஞ்சிலை விசயனோடு
வந்தெதிர் மலைய நின்றான் உறவுமற் றறியமாட்டான்
சிந்தையின் ஐயம் தீர இதனை நீதெளியச் சொல்லிக்
கொந்தவிழ் அலங்கலானைக் கூட்டுக விரைவினம்ம''

(கிருட்டிணன் தூது 156)

''தம்பியர் ஐந்துபேரும் தனித்தனி ஏவல் செய்ய
வம்பவிழ் அலங்கலோடு மாமணி மகுடஞ் சூட்டி
அம்புவி முழுதும் நீயேயாளலாம் வருக''

(கிருட்டிணன் தூது 157)

என்று கூறி பாண்டவர் அணியில் வருமாறு, பாண்டவர்க்கும் மூத்தவனாகிய கர்ணனைப் போய் உடன் அழைத்துவரக் கண்ணபெருமான் கேட்டுக்கொள்கிறார். அவ்வாறுஅழைத்தாலும் கர்ணன் வரமாட்டான் என்பதும் கண்ணபெருமானுக்குத் தெரிந்தே இருக்கிறது. அதனால் தான் அனைத்தும் அறிந்திருப்பவராகிய கண்ண பெருமான் கர்ணனின் செஞ்சோற்றுக்கடன் சிறப்பையும் மிக நன்றாகவே அறிந்தவராகப் பாண்டவர் அணியில் வந்து சேர கர்ணன் நிச்சயம் மறுத்துவிடுவான் என்பதையும் தெரிந்தவராய், அந்நிலையில் கர்ணன் வர மறுத்தால் குந்தி தேவி என்ன வரம் அவனிடம் கேட்டு பெற்றுவர வேண்டும் என்பதையும் கூறுகிறார்.

''எரியமுதருந்தக் கானம் எரித்தநாள் அகன்று போன
அரவினை அங்கர்கோமான் ஆசுகமாகக் கொண்டான்
வரிசிலை விசயன்தன் மேல் மறுகணை தொடுக்காவண்ணம்
ஒருவரம் வேண்டுகென்றான் உற்றவர்க்கு உறுதி சூழ்வான்''

(கிருட்டிணன் தூது158)

தன்னை நம்பி வாழ்பவர்களாகிய பஞ்ச பாண்டவர்களுக்கு எஞ்ஞான்றும் நன்மையே எண்ணி, நாடியதே முடிக்கும் செயல்திறமும் அருட்திறமும் வல்லவராகிய கண்ணபெருமான் குந்தி, கர்ணனிடம் கோரிப்பெறவேண்டிய வரமாகத் தெரிவிப்பது என்னவென்றால் அர்ச்சுனன் காண்டவ வனத்தை எரித்து அக்கினி பகவானுக்கு அமுதாக்கியபொழுது, தப்பிப் பிழைத்த அசுவசேனன் என்ற கொடிய நாகம் கர்ணனை அடைந்து அர்ச்சுனனைக் கொல்லும் நாகாத்திரமாய் விளங்குவதால், அக்கணையை ஒரு முறைக்குமேல், அர்ச்சுனன் மேல் ஏவலாகாது என்ற ஒரு வரத்தையே கோரிப்பெற்று வருமாறு கோருகிறார்.

காண்டவ வனத்தை அர்ச்சுனன் எரியூட்டு மாறுசெய்தவரும்கூட கண்ணபெருமான் தான். எப்பொழுதோ நடக்கப்போகும் பாரதப் போரை முன்கூட்டியே கணித்துக் கொண்டவராகிய கண்ணபெருமான், அப்போரில் துரியோதனாதியர்களை வெல்லுவதற்காக அர்ச்சுனன் அக்கினிபகவானிடம் காண்டீபம் எனும் ஒப்பற்ற வில்லை பெறவேண்டுமென விரும்புகி

றார். அதற்காகவே இந்திரனுக்கு உரிமையுடையதான காண்டவ வனத்தை அக்கினி பகவான் தனக்கு அவ்வனத்திலுள்ள சராசரங்களுடன் எரியூட்டவேண்டுமென வேண்டியபோதும் அர்ச்சுனனை இசையவைத்து காண்டீபம் என்னும் ஒப்பற்ற வில்லையும், கணைகளையும் அக்கினியிடம் பெற்றுத்தருகிறார். அக்கினி அக்காண்டவனத்தைத் தன் தீ நாக்குகளால் எரித்து உண்ணும்போது அக்காட்டின் தலைவனாகிய இந்திரன் தன் பரிவாரங்களுடன் வந்து பெரும்பேய் மழையைப் பொழிவித்து தீயை அணைக்க முற்படுகிறான். ஆனால் அர்ச்சுனன் அம்புகளால் சரக்கூடம் கட்டித் தன் ஆற்றலால் மழைநீர், தீயை அணைக்க இயலாதவாறு தடுத்துவிடுவதுடன், தப்பிஓட முற்பட்ட தக்ககன் என்ற கொடிய நாகத்தின் மனைவியையும் தன் கணையால் கொன்று வீழ்த்திவிடுகிறான். இந்திரன் தன் நண்பன் ஆகிய தக்ககனின் மகன் அசுவசேனனை மட்டும் அக்கினி உண்ணாவண்ணம் காப்பாற்றி வனத்திலிருந்து வெளியேற்றிவிடுகின்றான். அவ்வாறு காப்பாற்றப்பட்ட அசுவசேனன் தான் தன் தாயைக் கொன்ற அர்ச்சுனனைப் பழிவாங்கும் பொருட்டு கொடிய நாகாத்திரமாகக் கர்ணனிடம் போய் தங்கியுள்ளான்.

அக்கொடிய நாகாத்திரத்தினால் அர்ச்சுனன் உயிருக்கு நேர உள்ள அபாயத்தை அறிந்திருப்பவராகிய கண்ணபெருமான், குந்தியிடம் அக்கணையை ஒருமுறைக்குமேல் ஏவாதிருக்கக் கர்ணனிடம் வரம்கேட்டுப் பெறவேண்டும் எனத் தெரிவிக்கின்றார். அப்பொழுது குந்தி, கர்ணனைத் தன் புதல்வன் எனக் கண்டுகொண்டதனால் மகிழமுடியாமல், ஏன் கண்டுகொண்டோம் என்பதாகத் துன்பமே கொள்கிறாள். தம் துன்பத்தைக் கண்ணனிடம் கூறிப்புலம்பவும் செய்கின்றாள். ''கண்ணா! கர்ணன் என் பிள்ளை தான் என்பது உனக்கு முன்னமே தெரியும் அல்லவா! அப்படி தெரிந்திருந்தும் எனக்கு முன்னமே தெரிவிக்காமல், இப்பொழுது போரினை உண்டாக்கிவைத்துவிட்டு, இப்பொழுது வந்து கர்ணன் நின்மகன் என்று கூறி பெரிய பாரத்தை என்மீது சுமத்துகிறாயே! முன்னமே நீ எனக்கு இந்த உண்மையைத் தெரிவித்திருப்பாய் ஆனால் கர்ணனை துரியோதனனிடம் நெருங்காமல் நான் தடுத்திருப்பேனே! இப்போது நீ கர்ணனிடம் வரம் ஒன்றும் வாங்கிவரச்சொல்லுகிறாய். அந்த வரத்தை நான் கேட்டு கர்ணனிடம் வாங்கிவிட்டால் அர்ச்சுனனால் நிச்சயம் கர்ணன் மாண்டுபோவான். அந்த வரத்தை நான் கேட்டு வாங்காமல் போனாலோ கர்ணன் நிச்சயம் அர்ச்சுனனைக் கொன்றுவிடுவான். இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான நிலையில் என்னைக் கொண்டு வந்து நிறுத்திவிட்டாயே! கண்ணா என்ன செய்வேன்! நான் என்ன செய்வேன்?''! என்பதாகக் குந்திதேவி கூறிப்புலம்புகிறாள்.

''மன்றலந் தெரியல் வெய்யோன் மதலை
யென் மைந்தனென்பது
அன்றெனக் குரைத்தாயாயின் அவனுடன்
அணுகவொட்டேன்
சென்றுயிர் ஒழிக்குமாறு செருவினை
விளைத்துப்பின்னை
இன்றைக்கு உரைத்தாய் ஐயா என்
நினைத்து என் செய்தாயே!''

''கான்பட்ட கனலிற்பாயுங் கடுங்கணை
விலக்கினேனேல்
வான்பட்ட புரவித்தேரோன் மகன்படும்
மகவான்மைந்தன்
தான்பட்டு மடியுஞ் சென்று தடாதினி
யிருந்தேனாகில்
யான்பட்ட கொடுமை நன்று என்று என்
பட்டாள் இரங்கி வீழ்ந்தாள்''

(கிருட்டிணன் தூது 160)

இவ்வாறாகப் புலம்பி, மயங்கிவிழுந்த குந்திதேவியின் துயரம், கொடும்துயரம்தான். எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு பெற்ற அந்த ஆண்மகவை, மரப்பேழைக்குள் வைத்து மானத்திற்கஞ்சி ஆற்றிலேவிட்டாள். அந்தக் குழந்தை இருக்கிறதா இறந்துவிட்டதா என்பதும் தெரியாமல், துன்பத்தைப் பிறரிடம் எடுத்துக்கூறி ஆறுதல்பெறவும் முடியாத துன்பத்தில் அவள் வாடினாள். கண்ணபெருமான் வந்து அந்தப்பிள்ளை பிறந்ததையும், ஆற்றில் அவள் விட்டதையும் கூறியபோது, தன்மகவு உயிருடன் எங்கிருக்கிறான் என்பதை அறிந்துகொள்ளும் ஆர்வமும் குந்திக்கு ஏற்பட்டிருக்கக்கூடும். அந்த பிள்ளை கர்ணன் தான் என்பதை கண்ணன் எடுத்துரைத்தபோது அவள் ஆர்வம் குறைந்து, அதிர்ச்சியே மிஞ்சியது. இப்போது கண்ணன் உண்மையை உரைத்திருப்பதோகர்ணனிடம் வாங்கிவந்தாக.வேண்டிய வரத்தின் அவசியத்தைப் பொறுத்ததாய் உள்ளது. வரம் கேட்டு வாங்கிவந்தால் தலைப்பிள்ளையின் உயிருக்கு ஆபத்து. வரம் கேட்டு வாங்காமல் போனாலோ செல்லப்பிள்ளை அர்ச்சுனன் உயிருக்கு ஆபத்து. இந்நிலையில் குந்தி மனத்தடுமாற்றம் கொண்டு மயங்கிவிழாமல் என்தான் செய்வாள்?

அப்பொழுது, ஆபத்சகாயனான கண்ணன் குந்திதேவியைத் தேற்றுகின்றார். பஞ்சபாண்டவர்கள் ஐந்துதலைப் பாம்பினைப்போல உடல் ஐந்தும், உயிர் ஒன்றும்கொண்டவர்கள். அர்ச்சுனன் ஒருவன் இறந்தாலும், தருமர், பீமன், நகுலன், சகாதேவன் ஆகிய நால்வருமே மாண்டுபோய்விடுவார்கள். ஆகவே ஐவர் ஒருசேர மாண்டுபோவது வேண்டுமா? அல்லது என்றோ ''மகனில்லை'' என்பதாகக் கைவிடப்பட்ட ஒருவன் - கர்ணன் மாண்டுபோவது வேண்டுமா? அறிவோடு ஆய்ந்து பார்த்து குந்தி

முடிவு காணவேண்டும் என்பதாகக்கண்ணபெருமான் குந்தியைத்தேற்றும் பாரதப்பாடல் வருமாறு:

''பைவருந் தலைகள் ஐந்து படைத்த
பன்னகமேபோல
ஐவரும் படுதல்நன்றோ அங்கர்கோன்
படுதல்நன்றோ?
உய்வரும் சமரில் ஆவி ஒருவர்போய்
ஒருவர் உய்யார்
நைவரும் துயரம்மாறி நடப்பதேதருமம்''
(கிருட்டிணன்தூது162)

என்று கண்ணபெருமான் குந்திக்குத்தேறுதல் கூறி, விதுரரின் மனைக்குப் புறப்பட்டுப் போய் விடுகிறார். இப்படியாகப் பாண்டவர்களின் வெற்றிக்கு கண்ணபெருமான் தூது வந்த வேலையுடன் வேறு பல வேலைகளில் ஈடுபட்டிருக்கும் அந்த இரவு வேளையில், துரியோதனனோ, தன் தந்தை திருதராட்டிரன், தம்பிமார்கள்,கர்ணன் மற்றும் சகுனி ஆகியோருடன் ஆலோசனை மண்டபத்தில் கூடி ஒரு மாபெருஞ் சதித் திட்டத்தில் ஈடுபட்டிருக்கிறான். அந்தச் சதி பாண்டவர்க்குத் தூதுவனாகத் தனித்து வந்திருக்கும் கண்ணனை எப்படியும் மாய்த்து விட வேண்டும் என்பதே. அத்தினாபுரியிலிருந்து உயிரோடு மீண்டுசெல்ல கண்ணனை விட்டு விடக் கூடாது என்பதற்காகவே அத்தனை பேரும் அந்த இரவு வேளையில் கூடிச் சதி ஆலோசனையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களின் சதி ஆலோசனையின் பயனாய் அவர்கள் எடுக்கும் முடிவு என்ன? அந்த முடிவுக்கு ஏற்ப அவர்களால் கண்ணபெருமானை மாய்க்க முடியுமா? பாண்டவர்களின் ஆபத்தைத் துடைக்கப்பாடுபடும் கண்ணபெருமான், தமக்கே ஒரு பெரும் ஆபத்து காத்துக் கொண்டிருந்ததை அறிந்துகொண்டாரா? இவற்றையெல்லாம் அடுத்த இதழில் இனிக்காண்போம்.

## உழவாரப்பணி விளக்கம்

உழவாரப்பணி என்பது ஆலய வெளிப்பிரகாரங்களில் ஆலயத் தூய்மையைக் கெடுக்கும் வண்ணம் வளர்ந்தும், நிறைந்தும் உள்ள புல்லைச் செதுக்குதலும், முள்ளையும் கல்லையும் களைதலும் ஆகிய திருப்பணி ஆகும். இவற்றினோடு கோவிலைத் திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருவிளக்கு ஏற்றுதல், நந்தவனம் வளர்த்தல், மலர்மாலை கட்டி யளித்தல், கோயில் மதில்களில் முளைக்கும் செடிகளை வேரறக் களைதல் போன்ற பணிகளும் உழவாரப்பணிகளே ஆகும். கி.பி.7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்தவரும், சமயக் குரவர் நால்வரில் ஒருவரும் ஆகிய திருநாவுக்கரசர் உழவாரப் பணிபுரிந்து ஆலயத் தூய்மையைக் காத்த திருப்பணிச் செல்வர்ஆவார். அவர் இறைவனை வணங்குவதைக்கூட இரண்டாவதாகத்தான் கொண்டாராம். உழவாரப் பணி செய்து ஆலயத்தின் தூய்மையைப் பேணுதலையே அவர் முதற் கடமையாகக் கொண்டு வாழ்ந்துள்ளார். ஆகவே தான் சேக்கிழார்

''உழவாரத் தனிப்படையும் தாமும் ஆகி
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப் பரவிச் செல்வார்''


எனப் போற்றிப் பாடியிருக்கிறார். திருவீழிமிழலை இறைவர், திருநாவுக்கரசருக்கு வாசியில்லாப் பொற்காசு நல்கி அருள்புரிந்தமைக்கும் காரணம், அவர்தம் உழவாரப் பணியைச் சிறப்பிக்கவே ஆகும்.

# தீண்டாமை தொலைந்தது

தீயவரைத் தீண்டாத தீண்டாமை வேண்டும்.
தாய்வயிற்றுப் பிள்ளைக்குள் தாழ்வென்றும் உயர்வென்றும்
நோய்வைத்த பேயவரைச் சீந்தாமை வேண்டும்.
இறையுயிர்கள் பிறப்பத ால் ஒன்றெனவே பெருமை பெற
கறையுயிர்கள் கத்தினவே கீழென்றும் மேலென்றும்
கண்டிட்டால் தீட்டென்றும், மற்றவர்கள் தம்தெருவை
அண்டிட்டால் தீட்டென்றும், அவர்வார்த்தை காதுகளில்
பட்டிட்டால் தீட்டென்றும் பலபலவாய்ப் பழுதுரைத்துப்
பாராள்வோர் துணையதனால் சீர்வாழ்வு தாம்கொண்டு
இருள்வாழ்வு இவர்க்களித்த அருளற்றோர் அக்கொடுமை
நாவுரைத்தால் நடுங்காதோ? நெஞ்சுரைத்தால் வேகாதோ?
காலமாய் அவர்வடித்த கண்ணீரை மாற்றிடவே
காந்தியெனும் வடிவெடுத்து வந்ததொரு அன்புதெய்வம்
கொத்தடிமைக் கொடுஞ்சிறையைத் தூளாக்கித் தோள்சேர்த்து
ஆண்டவனின் பிள்ளையென அன்னவரை அணைத்திட்டார்
எண்சாண் அங்கத்தில் பல்லுறுப்பு இருந்தாலும்
எல்லாமே சமமாகும், எல்லாமே உயர்வாகும்.
காலொன்றைக் கீழென்று தாழ்வாக்கி ஒடித்திட்டால்
விழைவதோர் இடத்திற்கு விரைபயணம் வீணாகும்.
மண்ணுக்குள் பிறப்பெடுத்த மாந்தருள் ஒருசிலரைப்
பின்னுக்கு வைப்பதனால் பின்னுக்கே போய்விடுவோம்.
கண்ணுக்குக் கண்ணாடி அணிவித்து மகிழ்வதுபோல்
காலுக்கும் உயர்செருப்பு அணிந்தன்றோ மகிழ்கின்றோம்.
மேலென்ற மக்கட்கு மலையாக்கி உரிமைகளை
கீழென்ற ஒருசிலர்க்குக் கைவிரித்தால் அதுகொடுமை
உறுப்பாலே குறையுண்டோ? உணர்வாலே குறையுண்டோ?
பிறப்பாலே குறையென்று பேசும்பித்த மதியுடையீர்!
பிறந்தீரோ இருதலையும் நாற்காலும் கொண்டுலகில்?
நீர்செய்யா தொழில்புரிந்து நுமக்குதவி புரிவாரைத்
தாழ்வென்று உரைத்தக்கால் செய்நன்றி கொல்கின்றீர்
நன்றிகொல்லும் நீரன்றோ தீண்டாதார் ஆகின்றீர்.
நல்லவர்கள் நல்லதற்காய்க் கண்டிட்ட நால்வருணம்
பொல்லாரின் தந்நலத்தால் பேசுபேதம் கொண்டாலும்
சூழியற்கை எல்லார்க்கும் பொதுவென்றே வாழ்கிறது.
வீசுதென்றல் வெண்ணிலவும், கார்மேகம் கதிரவனும்,
கூறுமந்த உயர்குலத்தார் குடிதழைக்க வருவதுவா?
வேறின்றி எல்லார்க்கும் பொதுவுடைமை தருவதுவா?
எண்ணுங்கால் ஏறாதோ எல்லோரும் ஒன்றென்று.
கோடியென வாழுயிர்க்கும் ஓடுவது செங்குருதி.
தேடியவை இறுதியிலே முடியுமிடம் மண்புழுதி;
ஆதலினால் தீண்டாமை அறிவற்றோர் தனியுடைமை,
அம்மடமை அஃழித்தனைவர் ஒன்றெனலே பொதுவுடைமை.

—செவ்வேள்

# மகாத்மா காந்தியடிகளாரின் மணி மொழிகள்



O உண்மை எனது தெய்வம். அஹிம்சை அத்தெய்வத்தை அடையும் வழி. சினம் அகிம்சையின் பகைவன். கர்வம் அகிம்சையை விழுங்கும் பூதம்.

O உடலுக்கு உணவு எவ்வளவு அவசியமோ அதுபோல ஆன்மாவுக்கு வழிபாடு மிகவும் அவசியம்.

O அகிலம் அனைத்தும் பரவி நிற்கும் மெய்ப்பொருளை நேருக்குநேர் காணவேண்டுமாயின் படைப்பில் மிகத்தாழ்ந்த உயிரிடத்தும் மேலான அன்பு காட்டவேண்டும். இந்நிலையை அடைய விரும்பும் ஒருவன் வாழ்வில் எத்துறையிலும் பங்குகொள்ளாது துறவியாக முடியாது. சத்தியத்தில் எனக்குள்ள பற்று என்னை அரசியலில் இழுத்துவிட்டது. சமயத்திற்கும் அரசியலுக்கும் எவ்விதத்தொடர்பும் இல்லை என்போர்க்குச் சமயம் என்றால் என்ன என்று தெரியாது என்று தயக்கமின்றி, ஆனால் பணிவோடு கூறுவேன்.

O வகுப்பு உணர்ச்சிக்கோ அல்லது தீண்டாமை உணர்ச்சிக்கோ மனத்தில் இடம் தரலாகாது. தோட்டிவேலை செய்யவும் தயாராக இருக்கவேண்டும்.

O மன்னுயிர்க்குப் பணிசெய்வதன் மூலம் இறைவனைக் காண யான் முயலுகின்றேன். ஏனெனில் இறைவன் சுவர்க்கத்திலும் இல்லை. கீழுலகிலும் இல்லை. ஆனால் ஒவ்வொரு மனிதனிடத்தும் இறைவன் உள்ளான். இது எனக்குத் தெரியும்.

O எனக்கு மறுபடியும் பிறக்கப்பிரியமில்லை. ஆனால் மறுபிறவி எடுத்தாக வேண்டும் எனில் ''தீண்டாதான்'' ஒருவனாகப் பிறக்கவேண்டும். எதற்காக? அவர்களுடைய துயரங்களிலும் கஷ்டங்களிலும், அவர்கள் மீது எறியப்படும் அவதூறுகளிலும் நான் பங்குகொண்டு அத்தகைய துயர நிலையினின்றும் என்னையும் அவர்களையும் விடுவிக்கும் பொருட்டு முயலுவதற்காகவே.

O தீண்டாமை நீடிக்குமானால் அந்த இந்து மதம் அழிவதையே நான் விரும்புகிறேன். இந்து சமுதாயத்தின் உயிரைக் குடித்துக் கொண்டிருக்கும் கொடிய விஷம் தீண்டாமையாகும். கடவுளை நம்பும் எவனும் இன்னொருவனை இழிவானவன் என்று கருதமுடியாது. எல்லோரையும் உடன் பிறந்தவர்களாகவே அவன் கருத வேண்டும். இதுவே ஒவ்வொரு சமயத்திற்கும் அடிப்படைத்தத்துவம்.


O அஹிம்சை ஹிம்சையை விட எத்தனையோ மடங்கு பெரியதென்று நான் நம்புகிறேன். தண்டிப்பதைவிட மன்னிப்பதே சிறந்த ஆண்மைக்கு அழகு. மன்னிக்கும் மனோபாவம் ஒருவனை அலங்கரிக்கிறது. தண்டிக்கும் ஆற்றல் ஒருவனிடத்து இருந்தும் அவ்வாறு செய்யாமல் விடுவதே மன்னிப்பதாகும். கையாலாகாத ஒருவன் மன்னிக்கிறான் என்றால் அதில் அர்த்தமில்லை. எலி கடித்துக் குதறப்படும்போது பூனையை அது மன்னிப்பதே இல்லை.

O மூட நம்பிக்கை தொடர்ந்து இருந்து கொண்டுதான் வரவேண்டும் என்று நான் சொல்லவில்லை, அத்துடன் முழுமூச்சுடன் போராடி அதை ஒழித்தேயாக வேண்டும். ஆனால் மதத்தை அவமதிப்பதனால், அதைச்செய்ய முடியாது. மதத்தை மதித்து அதைப்பாதுகாப்பதன் மூலமே அதைச்செய்ய முடியும்.

O நாம் எல்லோருமே விக்கிரகங்களை வழிபடுகிறவர்கள் என்பதே எனது அபிப்பிராயமாகும். ஹிந்துக்களுக்குக்கோயில் இல்லையாயின் வாழ்க்கையிலே மகோன்னதமாகக் கருதும் பொக்கிஷத்தை அவர்கள் இழந்தவர்களாகி விடுகிறார்கள். கோயில்கள் ஹிந்து சமயத்தின் ஒரு முக்கியமான அமிசம் என்பதே எனது உறுதியான கொள்கை.

# உலக உயர்வும் சமயங்களும்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்



''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி யில்லை நும்சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே

—திருமூலர்.

## ஒற்றுமையே உயர்வு தரும்

இன்று காந்தி அடிகள் பிறந்தநாள். உலக சமாதானத்தூதுவராக விளங்கிய மகாத்மா காந்தி அடிகளின் பிறந்தநாளில் சமாதான யாத்திரைக் குழுவினரை வரவேற்று வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம். இந்தியா சுதந்திரம் அடைவதற்குமுன்பே மகாத்மா காந்தியடிகள் உலக சமாதானத்திற்காகப் பாடுபட்டார் என்பது வரலாறு. ஆனால் இன்று மனிதர்களை மனிதர்கள் பகைத்துக் கொள்வதும் அதன் அடிப்படையில் போர் நிகழ்த்தி இருபக்கமும் அழிவைத்தேடிக் கொள்வதும் பல இடங்களில் காணக் கிடைக்கும் காட்சிகள் ஆகும். இந்நிலை நீங்கவே நல்லோர்கள் நாளும் முயற்சித்து வருகிறார்கள். மனிதன் பிறிதொரு மனிதனை இனவேறுபாடு காரணமாகவோ இடவேறுபாடு காரணமாகவோ மொழி வேறுபாடு காரணமாகவோ மதவேறுபாடு காரணமாகவோ பகைமை பாராட்டுவதை இனியேனும் மாற்றிக் கொள்ளுதல் அவசியமாகும்.

## இருநிலமாந்தரை இணைக்கும் இலக்கியம் :

மனிதனாகப் பிறந்தவர் எவரும் உலகிலுள்ள எவரையும் தம் உறவினவராகக் கருதி அன்பு செலுத்துதல் வேண்டும் என்று நம் தமிழ் மொழியில் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே சங்கப் புலவர் கணியன் பூங்குன்றனார் வற்புறுத்திக் கூறியுள்ளார்.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்''

என்பது அப்பொருளுடைய தொடர். கேளிர் என்பது சுற்றத்தாரைக் குறிக்கும். இவ்வெண்ணம் எல்லோருக்கும் எப்படிவரும் என்பதற்குரிய காரணத்தையும் அப்புலவர் விளக்கிச் சென்றுள்ளார். தமக்கு வரும் நன்மைக்கும் தீமைக்கும் தாமேதான் காரணம் என்பதை அனைவரும் உணர்ந்து விட்டால் பகையுணர்வு யார் மீதும் தோன்றாது என்கின்றார்.

''தீதும் நன்றும் பிறர்தர வாரா''

---

இந்திய - சோவியத் கலாசாரக் கழகத் தமிழ்நாடு மாநிலக் குழுவினர் சமாதான யாத்திரையை மேற்கொண்டு தென்குமரியிலிருந்து சென்னை வந்தடைந்தபோது தருமை யாதீனகர்த்தர் அவர்கள் வழங்கிய ஆசியுரை இங்கே வெளியிடப்படுகிறது.

என்பது அக்கருத்தை விளக்கும் அடியாகும். கல்வியின் அவசியத்தை வற்புறுத்தவந்த திருவள்ளுவர்,

''யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு''

என்று கூறுகின்றார். 'கற்றவர்களின் சிறப்பு உலக ஒருங்கிணைப்பிற்கு உதவுதல்' என்பதை இக்குறளால் அறிய இயல்கின்றது.

## ஆளுடையபிள்ளையின் அரியபாடல்:

நம்முடைய சமய அருளாளர்களும் தமிழ் நாடு நலமுறவேண்டும் என்றோ இந்தியா வளம் பெற வேண்டும் என்றோ எண்ணாமல் உலக முழுமையும் நலமும் வளமும் பெறவேண்டும் என்றே அருளுகின்றனர். திருஞானசம்பந்த சுவாமிகள்

''வாழ்க அந்தணர்; வானவர்; ஆனினம்;
வீழ்க தண்புனல்; வேந்தனும் ஓங்குக;
ஆழ்க தீயது; எல்லாம் அரன் நாமமே
சூழ்க; வையகமும் துயர் தீர்கவே!''

என்னும் பாசுரத்தை மதுரையில் புனல்வாதம் நிகழ்ந்தபோது அருளிச்செய்தார். தன்னலம் கருதாது உலக நலம் கருதித் தொண்டுசெய்யும் அந்தணரும் வானவரும் ஆனினமும் வாழ்க என்று அவர் வாழ்த்துகின்றார். எனவே பிறர் நலம்பேணுவோரை வாழ்த்துதலே நம் அருளாளர்களின் கடனாக இருந்திருக்கிறது என்பதை இதனால் அறிய முடிகின்றது. இத்தகைய மூவரும் நன்முறையில் வாழ்ந்தால் தண்புனல் பெருகும் என்பதும் அதன்வழி ஆட்சியும் நலமுற நிகழும் என்பதும் ஆளுடையபிள்ளையின் கருத்தாகும். நல்லாட்சி நிகழ்வதற்குச் சான்றாகத் தீயசெயல்கள் அடக்கப்படவேண்டும் என்பதை ''ஆழ்க தீயது'' என்பதனால் குறித்து, இத்தகைய் உயர்நிலையை உலகம் முழுமையும் பெறவேண்டுமாயின் எல்லாம் அரன் நாமமே சூழ்க என்றும் அருளிச்செய்கின்றார். இத்துணையினாலும் நிறைவாகக் கிடைக்கும் பயன் யாது எனின், வையகம் முழுமையும் துயர் நீங்கி இன்புற்று வாழ்வதே என்பதை முடிந்த முடிபாகப் பிள்ளையார் அருளுவது ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

## உலகம் உயர்வதே உயர் சமய அடிப்படை:

எனவே சமய அருளாளர்களின் நோக்கமெல்லாம் ஆன்மீக நெறியில் நின்று உலகம் முழுவதையும் ஒன்றாகக் கருதுவதும் அனைத்துயிர்களிடத்தும் அன்பு செலுத்துவதுமேயாகும் என்பதைத் தெளிதல் அவசியம். இதனால் தான் சமய இலக்கியங்களெல்லாம் 'உலகம்' என்பதையே முதலாகக்கொண்டு தொடங்குகின்றன. திருமுருகாற்றுப்படை 'உலகம் உவப்ப' என்றும் பெரியபுராணம் 'உலகமெலாம்' என்றும் கம்பராமாயணம் 'உலகம் யாவையும்' என்றும் தொடங்குகின்றன. அரசியல் நிலையில் 'ஜெய்ஹிந்த்' என்றாலும் அருளியல் நிலையில் 'ஜெய்ஜகத்' என்று கூறிவருவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. சமஸ்கிருத மொழியில் உள்ள 'லோகாஸ் ஸமஸ்தா சுகினோ பவந்து' என்பதும் உலகநலமே ஆன்மீகத்தின் அடிப்படை என்பதை விளக்கும். தாயுமான சுவாமிகள்

''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே''

என்று அனைவரின் இன்பத்தையே விரும்பும் அன்பு மனப்பான்மையை விளக்குகின்றார். ஒட்டி உறவாடி மகிழும் மனித வர்க்கத்தின் மீது மட்டுமல்லாது நம்முடைய அன்பைப் புரிந்து கொள்ளத் தெரியாத நல்லுயிர்களான பிறவுயிர்களிடத்தும் அன்பு செலுத்தக் கற்றுக் கொடுக்கிறது சமய நெறி.

''எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய்! பராபரமே''

என்றருளினார் தாயுமானவர். ''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்'' என்றார் வள்ளலார். ஆன்ம நேய ஒருமைப்பாட்டை இராமலிங்க அடிகள் வற்புறுத்திய நோக்கம் இவ்வடிப்படையிலேயாகும். அரசியல் விடுதலை பாடவந்த பாரதியார் சிறந்த ஆன்மீக வாதியாதலின்,

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே-நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல்வேண்டும்-இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெதுவேண்டும்'

என்று பாடுகின்றார். ''காக்கை குருவி எங்கள் ஜாதி'' என்றும் அவர் உயிரிரக்க உணர்வை ஊட்டுகின்றார்.

## அடுத்தடுத்து வளர்கின்ற அனைத்துலக ஒற்றுமை:

அன்பு என்பது முதற்கண் குடும்பநிலையிலும் பின், தான் வாழும் சமுதாய நிலையிலும் அதன் பின் தன்னாட்டு நிலையிலும் நிறைவாக உலக நிலையிலும் படிப்படியாக வளர்தல் அவசியமாகும். அதனால்தான் தனிமனிதனின் மன வளர்ச்சிக்கு அடிப்படையாக இல்லறத்தை வற்புறுத்தினர். வாழ்க்கையின் தொடக்கத்தில்தன்

மனைவியிடத்தும் பின் தன் பிள்ளைகளிடத்தும் அன்பு செலுத்தக் கற்றுக்கொள்ளும் மனிதன் அதன் வளர்ச்சியில் சமுதாயநிலையில் அன்புடன் வாழ முனைகின்றான். படிப்படியாக நாடு, உலகம் என்று அன்பின் பரிணாம வளர்ச்சி ஏற்படுகிறது. அது அருளாக மலர்கிறது. அன்பு தொடர்புடையார் மாட்டு நிகழும் நேயம்; அருள் தொடர்பில்லாதார் மாட்டும் நிகழும் கருணை. தொடர்பில்லாதார் மாட்டு என்று கூறினாலும் அதிலும் ஒரு தொடர்பு இருப்பதனை மறத்தல் கூடாது. அது மனிதனை நேசிக்கும் மனித நேயம் ஆகும். எனவே வாழ்க்கையின் தொடக்கமே பிறருக்காக வாழும் பண்பை வளர்ப்பதாகவே அமைகிறது. இத்தகைய பண்பும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் அனுசரித்துப் போகும் குணமும் உடைய நல்லவர்கள் கூடிவாழும் குடும்பமே பல்கலைக்கழகம் என்று பாராட்டப்படுகிறது. அத்தகைய பல்கலைக்கழகங்கள் பல சேர்ந்ததே சமுதாயம். இத்தகைய உயர் சமுதாயம் உருவானால் அங்குக்கருத்து வேறுபாடுகளுக்கே இடமில்லை. இருந்தாலும், குழப்பத்திற்கு இடமில்லை.

தனிமனிதன் சமுதாயத்துடன் சேர்ந்து பழகி அன்பைப் பரிமாறிக்கொள்வதற்குச் சமயத்தின் அடிப்படையில் ஒருவழி இருக்கிறது. அது தலயாத்திரை செல்லுதல் என்று குறிக்கப் பெறுகிறது. இந்த யாத்திரைகள் மேற்கொள்வதால் மொழி, இன, இடவேறுபாடுகள் மறைகின்றன. மறைந்து சமய அடிப்படையில் ஒற்றுமை வளர்கிறது. காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை என்றும், இமயம் முதல் குமரி வரை என்றும், காசி முதல் இராமேசுவரம் வரை என்றும் சமயநிலையில் நிகழும் இந்த யாத்திரைகளினால் பல்வேறு கலாசாரங்கள் நிறைந்த இந்தியாவில் வாழும் மக்கள் ஒன்றுபட்டு வாழ வழி ஏற்படுகின்றது. இதனால் வேற்றுமையில் ஒற்றுமை காணமுடிகிறது. கடவுள் என்ற ஒன்றை வைத்து மதங்கள் இணைய முடிகின்றன. மனிதன் என்ற நிலையை வைத்து மக்கள் ஒன்றுபட முடிகிறது; உயிர் என்ற நிலையைவைத்துப் பறவை, விலங்கு, ஊர்வன நீர்வாழ்வன, தாவரங்கள் இடையே மனிதன் அன்பு செலுத்த முடிகிறது. இக்கருத்தில் தான் நம் திருமூலர்,

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"

என்று அனைத்துயிர்களின் ஒருமைப்பாட்டை அருளிச் செய்கின்றார். குலம் ஒன்றுதான்; தேவன் ஒருவன்தான் என்பதனால் அனைத்துலக ஒருமைப்பாட்டைச் சமயம் வலியுறுத்திக் கூறுகிறது என்பதனை உணரலாம்.

## இறையருள் முன்பு இணைகின்ற உயிரினங்கள்:

இத்தகைய ஆன்மீக வளர்ச்சியில்தன்னைப் படிப்படியாக வளர்த்துக்கொண்டோர் ஞானிகள் எனப் போற்றப்பெறுவர். அவர்தம் திருமுன்னிலையில் உயிரினங்கள் தம்முள் பகைமை நீங்கி ஒன்றுபட்டுவாழும். நம்முடைய ஆதீன ஆதிபராமாசாரிய மூர்த்திகள் தம் திருமுன்னிலையில் தருமபுரத்தில் புலியும் பசுவும் ஒரு குளத்தில் ஒன்றாகவே நீர் அருந்தி வாழ்ந்தன என்பது வரலாறு. இதனை இறைவனிடத்துள்ள பொருள்களையே வைத்தும் உணர்ந்து கொள்ளலாம்.

பரம்பொருளாகிய சிவபெருமானின் திருமேனியிலுள்ள பொருள்கள் வேற்றுமை கொண்டவை என்பதுண்மை. ஆனால் பெருமானின் திருமேனியில் அவை இருப்பதால் பகை நீங்கிப் பண்பு நலத்துடன் சிறந்து விளங்குகின்றன. இதனை அப்பரடிகள்,

"பாம்பும் மதியும் புனலும் தம்மிற்
பகைதீர்த் துடன்வைத்த பண்பா போற்றி"

என்றருளிப் போற்றுகின்றார். நாம்வணங்கும் இறைவன் தன்னிடமுள்ள உயிர்களின் பகையை நீக்கி உடன் வைத்தருளுகின்றார் என்பதனால் அவரையே தலைவராக எண்ணி வழிபடும் அன்பர்களுக்கும் அவரை வழிபடும் உயிரினங்களுக்கும் அவ்வெண்ணம் படிப்படியாகப் பதிதல் இயல்பாகும். எனவே சமயநலம் சமுதாயத்தில் வளருமானால் சமாதான உணர்வும் நாளுக்கு நாள் வளரும் என்பதில் ஐயமில்லை.

## சுதந்திரம் காத்துச் சுகவாழ்வு பெறுவோம்:

ஆன்மீகநெறியில் அசைக்கமுடியாத நம்பிக்கைகொண்ட மகாத்மாகாந்தி அடிகள் தலைமை ஏற்றுச் சுதந்திரப்போரை நிகழ்த்தியதனால் கத்தியின்றி இரத்தமின்றிச் சுதந்திரம் கிடைத்தது. அச்சுதந்திரம் இன்று ஒருவரை ஒருவர் அழித்துக்கொள்ளப் பயன்படுவதை நல்லோர்கள் ஒருக்காலும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். எத்துணை மனவேறுபாடுகள் இருப்பினும் இருதரப்பினரும் மனமுவந்து பேசித் தீர்த்துக்கொள்ளுதலே பெருமையைத் தரும். இதனை ஆழமாகச் சிந்தித்து மக்கள் அனைவரும் பகைமை நீங்கிச் சமாதானப் பாதையில் வாழ்ந்து இன்புறுவார்களாக!

இன்று இந்திய அளவில் உள்நாட்டில் பஞ்சாப், குஜராத், அஸ்ஸாம் போன்ற இடங்களில் பூசல்கள் தோன்றியுள்ளன. அண்டை நாடான பாகிஸ்தான் ஒற்றுமையுணர்வோடு இணங்கி வரவில்லை. இலங்கையில் வாழும் மக்கள் மன அமைதியின்றி வாழுகின்றனர். உலகநாடுகள் அளவில் அமெரிக்கா, சீனா, இரஷ்யா போன்ற நாடுகள் தங்கள் வல்லமையைக் காட்டும்போட்டியில் உலக நலத்தை மறந்து செயல்படுகின்றன. இவை அனைத்தும் மறைந்து எல்லோரும் அன்புடன் இணங்கி உயர்ந்த இன்ப வாழ்க்கையை எய்த எல்லாம்வல்ல இறைவன் தான் அருள வேண்டும்.

## எண்ணிய எண்ணம் திண்ணமாய் வளர்க!

இத்தகைய காலநிலையில்போரை விரும்புவோரையும் அதற்கான ஆயத்தங்கள் செய்வோரையும் தடுத்துச் சமாதான உணர்வை ஊட்டும் நோக்கத்துடன் இந்திய சோவியத் கலாசாரக் கழகத்தின் தமிழ்நாட்டுக் குழுவினர் தென்குமரியிலிருந்து சென்னை வரைசமாதான யாத்திரை மேற்கொண்டு செயல்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

ஆன்மீக உணர்வின் அடிப்படையில் எவ்வுயிரும் தன்னுயிர்போல்எண்ணும்எண்ணத்தை வளர்த்துச் சமாதானப் பயிரை வளர்க்க இக் குழுவினர் பாடுபடுவார்களாக!

### வாழ்த்து:

சமாதான யாத்திரை நிறைவு பெற்றுள்ள இந்நிலையில் இதில் கலந்துகொண்டுள்ள தேச பக்தர்களும் அவர்களை வழிநடத்திய குழுவினரும் பிறரும் எல்லா நலன்களும் பெற்று நீடு வாழவும் உலக மக்கள் பக்தியுடன் இருந்து சமாதான உணர்வில் உயர்ந்து மன அமைதி பெற்று இன்பமுடன் வாழவும் எல்லாம்வல்ல ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

''வான்முகில் வழாது பெய்க; மலிவளம் சுரக்க; மன்னன்
கோன்முறை அரசு செய்க; குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க; நற்றவம் வேள்வி மல்க;
மேன்மைகொள் சைவ நீதி விளங்குகஉலக மெல்லாம்''.

வாழ்க உலகெலாம்! வளர்க மனித இனம்! ஓங்குக உயிர்க் குலங்கள்!

---

## தமிழ் இசையைப் பெருமைப் படுத்தும் அரிய செப்பேடு



கும்பகோணம் நாகேசுவரசாமி ஆலயத்தின் நிர்வாக அதிகாரி அவர்களால் அவ்வாலயத்தில் உள்ள ஒரு அரிய செப்பேடு அறிஞர் பெருமக்களின் கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டுள்ளது. இச்செப்பேட்டினை ஆய்ந்த தமிழக அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் தெரிவிப்பதாவது:

இச்செப்பேடு கி.பி. 1734-இல் தஞ்சை, திருச்சி பகுதிகளை ஆண்ட மராட்டிய மன்னர் துக்கோஜி காலத்தில் வெளியிடப்பட்டுள்ளது. கும்பகோணத்துச் சிவன், விஷ்ணு ஆலயங்களில் இருந்த 'நாகபாசக்காரர்கள்' ஒருமடம் ஏற்படுத்தியதையும், அம்மடத்தைப் பராமரிக்க இசையாளர் வகுப்பைச் சார்ந்தவர்களிடம் (வீணையாளர், நாட்டியக்காரர், வேஷக்காரர், மேளக்காரர் முதலியோர்) பணம் வசூலித்துத் தந்தமையையும் இச்செப்பேட்டுத் தகவல் குறிப்பிடுகிறது.

இத்தகவல், தமிழ்எழுத்துக்களில் ஒருபுறம் எழுதப் பட்டிருக்கச் செப்பேட்டின் மறுபுறம் நடராசர், சிவகாமி, திருமால், உபயநாச்சிமார்கள், கஜலட்சுமி, அனுமார், வீரபத்திரர் உருவங்களுடன் 43 இசைக் கருவிகளும் சித்திரிக்கப்பட்டிருப்பது இச்செப்பேட்டின் சிறப்பு அம்சமாகும். ஏழெட்டு வகையான வீணைகள், மத்தளம், தக்கை, குழல், நாதசுவரம், பஞ்சமுகவாத்தியம், தவுல், கொம்பு முதலிய இசைக் கருவிகளோடு மேலும்பல இசைக் கருவிகளும் இடம் பெற்றுள்ளன.

''கி.பி. 1725-ஆம் ஆண்டு வாக்கில் தமிழகத்தில் எந்தெந்த இசைக்கருவிகள் வழக்கில் இருந்தன என்பதை, இசை ஆய்வாளர்கள் ஆராயப் பயன்படும் அரிய செப்பேடு இது'' என்கிறார் டாக்டர் இரா' நாகசாமி.

உ

# வாழ்வு ஒளிபெற ஓது திருமுறை

டாக்டர் சிவ. பார்வதி, M.A., Ph.D.,

துணை இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்ககம், சென்னை-600 006

மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும் அம்மா! என்றார் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை. மனையறம் என்னும் மரத்திற்கு ஆணிவேராக இருப்பவள் பெண்தான் என்று சேக்கிழார் பெருமான் கூறுகின்றார். 'மனையறத்தின் வேராகி விளங்கு திருவெண்காட்டுநங்கை' என்று சிறுத்தொண்டர் மனைவி திருவெண்காட்டு நங்கையை அறிமுகப்படுத்துகிறார். வாழ்க்கைத் துணை எல்லாச் சிறப்புகளையும் பெற்றவளாக அமைந்துவிட்டால் ஒரு மனிதனுக்கு இல்லாதது என்று எதுவுமே இல்லை என்பது வள்ளுவர்கருத்து. ''இல்லதென் இல்லவள் மாண்பானால்'' என்பது வள்ளுவம். 'தையலை உயர்வுசெய்' என்றார் பாரதியாரும். இங்ஙனம் தேசியக் கவிஞரும் அருளாளரும் அறநூலாசிரியரும் பெண்களை உயர்த்தியே பாடியுள்ளனர்.

பெண்ணுக்கு ஏன் இந்த உயர்வு? சிந்திக்க வேண்டுவது அவசியமே!

ஒரு பெண் புகுந்த வீடு செல்லும் காலம்வரையிலும் பிறந்தகத்திற்குப் பெருமை சேர்த்தும், புகுந்த வீட்டுக்குச் சென்ற நாள் தொடங்கி பிறந்தகத்திற்கும் புகுந்தகத்திற்கும் சிறப்புக்களைத் தேடித்தந்தும்-எந்நிலையிலும் தன்னை வெளிக்காட்டாது அடங்கி வாழ்தலில் இன்பம் காணும் இயல்பு அப்பெண்ணுக்கே உரியதாக இருப்பதனால்தான் அவள் உயர்வு பெறுகிறாள். நம் சைவ சமயத்தில் பெண் தனியே துறவு மேற்கொள்வதாகக் கூறுவதில்லை. ஏனெனில் அப்பெண்ணின் வாழ்க்கை அமைப்பே துறவு நிலையில் அமைந்துள்ளது. பெரியபுராண நாயன்மார்களின் வாழ்க்கைத் துணைவியர்பலரும் தங்கள்கணவனின் கொள்கைக்கு முட்டுப்பாடு வந்தபொழுது உடனிருந்து உரியவாறு தீர்வு காண உதவினர். அச்செயலே அவர்கள் ஈறில்பதம் பெறத்துணை நின்றது. இத்தகைய உயர்வும் தியாக உணர்வும் பெற்று வாழவேண்டிய பெண்கள் எஞ்ஞான்றும் சிவசிந்தனையுடன் இருக்க வேண்டுவது அவசியமாகும். இன்று பெண்கள் அங்ஙனம் வாழ்கின்றார்களா? என்றால் பெரும்பாலும் இல்லை என்ற பதிலே நமக்கு கிடைக்கிறது. அவர்கள் காலையில் இமை திறந்தநேரம் தொடங்கி தங்கள் இல்லறக் கடமைகளைச் செய்து வரும்போது இடையறாத சிவசிந்தனையுடன் இருப்பதுஅவர்களுக்கும் அவர்தம் குடும்பத்திற்கும் நல்லது. அதற்குத் தனியாக ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. விடியற்காலையில் எழும்பொழுதும் வீட்டைத் தூய்மைப்படுத்தும் பொழுதும் நீராடும்பொழுதும் அழகுபடுத்திக் கொள்ளும் பொழுதும் வழிபாட்டு நேரங்களிலும் சமையல் செய்யும் பொழுதும் குழந்தையை அழைத்து அறிவுரைகூறிப் பள்ளிக்கு அனுப்பும் பொழுதும், இளம் பெண்களாய் இருப்பின் தம்மையொத்த பெண்களோடு விளையாடும்பொழுதும், தாய்நிலையில் இருப்பின் குழந்தையைத் தாலாட்டும் பொழுதும் இரவு துயில் கொள்ளச் செல்லும் பொழுதும் சிந்தனையைச் சிவத்தின்பால் செலுத்தத்துணை செய்யும் வகையில் திருமுறைப் பாடல்கள் சிலவற்றைத் தேர்ந்து அச்செயல்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் ஓதிக்கொண்டிருப்பது மனத்திற்கும் மொழிக்கும் செய்கைக்கும் நன்மையைத்தரும், ''நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே'' என்று அருளினார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். வெற்றுப்பொருளியல் பாடல்களை முணுமுணுத்துக்கொண்டிருப்பதை விட அருளியல் பாடல்களை அசைபோட்டுக்கொண்டிருப்பதால் ஆத்மசுத்தி ஏற்படும் என்பது உறுதி. அங்ஙனம் உள்ள செயல்களுக்குப் பொருத்தமான திருமுறைப் பாடல்கள் சிலவற்றை உங்கள் நினைவிற்காக இங்கே தொகுத்துத் தருகின்றேன்.

## துயில் எழும்பொழுது

அதிகாலைப் பொழுதில் எழுந்திருந்தவுடன் கீழ்வரும் திருமுறைப் பாடல்களை ஓதிக்கொண்டே வீட்டு வேலைகளைத் தொடங்கலாம்.

''காலை யெழுந்து கடிமலர் தூயன
தாங்கொணர்ந்து
மேலை யமரர் விரும்பு மிடம்விரை யான்மலிந்த
சோலை மணங்கமழ் சோற்றுத்துறையுறை
வார்சடைமேல்
மாலை மதியமன் றோளம் பிரானுக் கழகியதே''

—திருநாவுக்கரசு சுவாமிகள் திருச்சோற்றுத்துறையில் அருளியது; நான்காம் திருமுறை திருவிருத்தம்.

''மேலை விதியே வினையின் பயனே
விரவார் புரமூன் றெரிசெய்தாய்
காலை யெழுந்து தொழுவார் தங்கள்
கவலை களைவாய் கறைக்கண்டா
மாலை மதியே மலைமேல்மருந்தே
மறவே னடியேன் வயல்சூழ்ந்த
ஆலைக்கழனிப் பழனக் கச்சூர்
ஆலக்கோயில் அம்மானே,''

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கச்சூர் ஆலக் கோயிலில் அருளியது. ஏழாம் திருமுறை; பண்-கொல்லிக்கௌவாணம்.

**நீராடும்பொழுது:**

பெண்கள் தாம் நீராடும் பொழுது கீழ்வரும் திருமுறைப் பாடல்களை ஓதிக்கொண்டு சிவசிந் தனையில் ஈடுபடலாம்.

''பிடியெலாம் பின்செலப் பெருங்கைமா மலர்தழீஇ
விடியலே தடமூழ்கி விதியினால் வழிபடும்
கடியுலாம் பூம்பொழிற் கானப்பேர் அண்ணலின்
அடியலால் அடைசரண் உடையரோ வடியரே''

—திருஞானசம்பந்த சுவாமிகள் திருக்கானப்பேரில் அருளியது.
மூன்றாம் திருமுறை-பண்-கொல்லி.

''மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி,
ஐயா, வழியடி யோம்; வாழ்ந்தோங்காண்!
ஆரழல்போற்
செய்யா வெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா, நீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம்
உய்ந்தொழிந்தோம்'
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்''

—மாணிக்கவாசகரால் அருளிச் செய்யப் பெற்ற திருவெம்பாவைப் பாடல்; எட்டாம் திருமுறை.

**நீராடி திருநீறு அணியும்பொழுது:**

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமைபங்கன் திரு ஆலவாயான்
திருநீறே

—திருஞானசம்பந்தர், திருஆலவாயில் அருளியது, திருநீற்றுப்பதிகம் இரண்டாந்திருமுறை, பண் காந்தாரம்.

**திருவிளக்கு ஏற்றும் பொழுது:**

கீழ்வரும் திரு முறைப்பாடல்களை ஓதலாம்.

''இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே''

—திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது. பொதுப்பதிகம் நான்காம் திருமுறை; பண்—காந் தார பஞ்சமம்.

''விளக்கினார் பெற்றவின்ப மெழுக்கினால்
பதிற்றியாகும்.
துளக்கினன் மலர்தொடுத்தாற் றூயவிண்
ணேறலாகும்
விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி
ஞானமாகும்
அளப்பில கீதஞ்சொன்னார்க்கடிகள்தாம்
அருளுமாறே''

—திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது, பொதுப்பதிகம் நான்காம் திருமுறை;
திருநேரிசை.

**அபிடேகம் செய்யும்பொழுது:**

பாலினால் நறுநெய்யால் பழத்தினால் பயின்று
ஆட்டி
நூலினால் மணமாலை கொணர்ந்து அடியார்
புரிந்தேத்தச்
சேலினார்வயல்புடைசூழ் செங்காட்டங்குடியதனுள்
காலினால் கூற்றுதைத்தான் கணபதீச்சரத்தானே.

—திருஞானசம்பந்தர், திருச்செங்காட்டங் குடியில் அருளியது. முதல் திருமுறை; பண்-பழந் தக்கராகம்.



**சென்னை நகரில் மிக நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வரும் ஆலயமென திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தசாரதி ஸ்வாமி ஆலயத்தைத் தேர்ந்தெடுத்து மயிலாப்பூர் அகாடமி சுழற்கேடயம் வழங்கியது. ஆலய நிர்வாக அதிகாரி திரு சுவாமி வெங்கடாசலம் சுழற்கேடயம் பெற்றுக் கொண்டபோது எடுக்கப்பட்ட படம்.**

''தேனுடை மலர்கள் கொண்டு திருந்தடி
பொருந்தச்சேர்த்தி
ஆனிடை யஞ்சுங்கொண்டே யன்பினா லமரவாட்டி
வானிடை மதியஞ்சூடும் வலம்புரத் தடிகள்தம்மை
நானடைந் தேத்தப்பெற்று நல்வினைப்
பயனுற்றேனே''

—திருநாவுக்கரசு சுவாமிகள் திருவலம்புரத்தில் அருளியது. நான்காம் திருமுறை—திருநேரிசை.

**மாலை கட்டும்பொழுது:**

பெரியபுராணத்தில் சங்கிலி நாச்சியார்மாலை கட்டும் பணியைச் செய்து கொண்டு வந்தார். அவ்வம்மையார் மாலை கட்டும்பொழுது நெஞ்சுக்குள் அன்பையே நாராகக்கொண்டு ஐந்தெழுத்துஎன்னும் மலர்களைக் கட்டினார் என்று சேக்கிழார் பெருமான் அருளுகின்றார். 'அன்புநாராக ஐந்தெழுத்தை நெஞ்சு தொடுக்க' என்பது சேக்கிழார் வாக்கு. எனவே, மாலை கட்டும்பொழுதுபெண்கள் அகநிலையில் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதிக் கொண்டும் பஞ்சாக்கரப்பதிகங்களை ஓதிக்கொண்டும் செயல் செய்வது நலம் பயக்கும். அதோடன்றி, மனம் ஒன்றி வழிபாடற்றல் மிகவும் அவசியமாகும். அப்போது கீழ்வரும் திருமுறைப் பாடல்களை ஓதுதல் நன்று.

''காதலாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக்குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாத னாமம் நமச்சி வாயவே''

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது. பொது, மூன்றாம் திருமுறை, பண்—கௌசிகம்.

''வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறுதிங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்வெள்ளி
சனிபாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே''

—திருஞானசம்பந்தர் அருளியது, கோளறுப் பதிகம்; பண்—பியந்தைக் காந்தாரம்.

''மற்றுப்பற்றெனக் கின்றிநின்திருப்
பாதமேமனம் பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேன்இனிப்பிற
வாத தன்மை வந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவாஉனை நான்மறக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே''

—சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பாண்டி கொடுமுடியில் அருளியது. ஏழாம் திருமுறை. பண்-பழம் பஞ்சுரம்.

**கன்னிப் பெண்கள் விளையாடும் பொழுது:**

மாணிக்கவாசகர் தாம் அருளிய திருவாசகத்தில் பெண்கள் விளையாடும் பல்வேறு விளையாட்டு வகைகளின் அமைப்பில் பாசுரங்கள் சில அருளிச் செய்துள்ளார். திருஅம்மானை, திருப்பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பொன்னூசல் என்னும் தலைப்புக்களில் அமைந்துள்ள பாடல்கள் மேற்சொன்ன கருத்தமைப்பில் உள்ளவையாகும். கன்னிப்பெண்கள் இன்றைக்கும் இப்பாடல்களை பாடி, விளையாடும் போதும் சிவசிந்தனையுடனிருக்க பழகிக்கொள்ள வேண்டும்.

**திருஅம்மானை :**

''பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறை
யான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக்கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவான் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண்
அம்மானாய்''

**திருப்பொற்சுண்ணம் :**

''முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூபம்நல் தீபம் வைம்மின்
சத்தியும் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டி சைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொள்மின்
அத்தன்ஐ யாறன் அம்மானைப் பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே''

**திருச்சாழல் :**

''பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ!
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ''

**திருப்பூவல்லி :**

''வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய்
வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத்துஎம்
பெருமான்
அணங்கொடு அணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ,''

**திருப்பொன்னூசல் :**

''நஞ்சமர் கண்டத்தன் அண்டத் தவர்நாதன்
மஞ்சுதோய் மாடமணி உத்தர கோசமங்கை
அஞ்சொலாள் தன்னோடும் கூடி அடியவர்கள்
நெஞ்சுளே நின்றமுதம் ஊறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்பறுப்பான் தூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூச லாடாமோ''

**பாலூட்டும்பொழுது :**

கருவிலே திருவுருவாகப்பெற்ற தாய் அம் மகவை ஈன்றெடுத்து பிறகு அதைப் பாலூட்டி, தாலாட்டி, சீராட்டும்போது சிவசிந்தனையுடனேயே அக்குழவியை வளர்ப்பாள் என்பதற்கு கீழ் வரும் பாடலைக் காட்டலாம்.

''பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந்திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத்தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே.

—மாணிக்கவாசகர் அருளியது, எட்டாம் திருமுறை.

குழந்தைக்கு அறிவுரை கூறும்பொழுது:

''தலையே நீவணங்காய்—தலை
மாலை தலைக்கணிந்து
தலையாலேபலிதேருந்தலைவனைத்
தலையே நீ வணங்காய்.''

''கண்காள் காண்மின்களோ—கடல்
நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசிநின் றாடும்பி ரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ''

''செவிகாள் கேண்மின்களோ—சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான்திற மெப்போதும்
செவிகாள் கேண்மின்களோ.''

''தேடிக்கண்டுகொண்டேன்—திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே
தேடிக்கண்டுகொண்டேன்''
முதலிய அங்கமாலைப்பாடல்கள்.

—திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது. பொது. நான்காம் திருமுறை பண்-சாதாரி.

குழந்தையைத் தாலாட்டும்பொழுது:

''பாரிதனை நலிந்தமரா பயமெய்தச்
சயமெய்தும் பரிசுவெம்மைப்
போரிசையும் புரமூன்றும் பொன்றவொரு
சிலைவளைத்தோன் பொருந்தும்கோயில்
வாரிசைமென் முலைமடவார் மாளிகையின்
சூளிகைமேன் மகப்பாராட்டக்
காரிசையும் விசும்பியங்குங் கணங்கேட்டு
மகிழ்வெய்துங் கழுமலமே''

—திருஞானசம்பந்தர் திருக்கழுமலத்தில் அருளியது. முதல்திருமுறை பண்—மேகராகக் குறிஞ்சி.

''எண்ணிறந்த அமணர்களு மிழிதொழில்சேர்
சாக்கியரு மென்றுந்தன்னை
நண்ணறிய வகைமயக்கித் தன்னடியார்க்
கருள்புரியும் நாதன்கோயில்
பண்ணமரு மென்மொழியார் பாலகரைப்
பாராட்டு மோசைமேட்டு
விண்ணவர்கள் வியப்பெய்தி விமானத்தோ
டும்இழியு மிழலையாமே''

-திருஞானசம்பந்த சுவாமிகள் திருவீழிமிழலையில் அருளியது. முதல் திருமுறை; பண்-மேகராகக் குறிஞ்சி.

இரவு துயில் கொள்ளும்பொழுது:

''மண்பொருந்திவாழ்பவர்க்கு மாதீர்த்த
வேதியர்க்கும்
விண்பொருந்து தேவர்க்கும் விடுபேறாய்
நின்றானைப்
பண்பொருந்த விசைபாடும் பழனஞ்சே
ரப்பனையென்
கண்பொருந்தும் போதத்துங் கைவிடநான்
கடவேனோ.''

—திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பழனத்தில் அருளியது. நான்காம் திருமுறை,; பண்-பழந்தக்கராகம்.

முடிவுரை: திருமுறைப் பாடல்களை நாளும் நெஞ்சுருக ஓதி வருவதால், பலன்கள் கிட்டும் என்பது முடிந்த முடிவாகும். அப்பாடல்களை ஓதுவதற்கென்று தனியே நேரம் ஒதுக்க இயலாத நிலையுடையோர்—குறிப்பாகப் பெண்கள் மேற்கண்ட வண்ணம் தங்கள் இல்லறக் கடமைகளைச் செய்யும்பொழுதே அப்பாடல்களை ஓதுவது இயலக்கூடியதே. எனவே, இவ்வண்ணம் ஓதி பொய் வண்ணம் நீங்கி மெய்வண்ணமுற்று எல்லா நலன்களும் அடைந்து நீடுவாழ்வார்களாக!

— — — — — —

# வாசகர் எண்ணங்கள்

திருக்கோயில் ஜூலை, ஆகஸ்ட் இதழில் மாண்புமிகு ஆர். எம்.வீ அவர்கள் ஆற்றிய ஆலய மேம்பாட்டுச்செயல்முறைத் துவக்க விழா உரையைப் படித்தேன். ஆலய மேம்பாட்டுத்திட்டம் அறநிலையத்துறைக்குப் பெருமை கோடி சேர்க்கும் மகோன்னத திட்டம். தஞ்சை மண்ணில் இவ்விழா எடுக்கப்பட்டதன் காரணத்தை அமைச்சர் விவரித்திருப்பதைப் படித்து மனம் உருகிப் போனேன். இத்தகைய சிறந்த அமைச்சர் நமக்குக் கிடைத்திருப்பது நாம் செய்த பாக்கியம் அல்லாமல் வேறில்லை.

அ. செவ்வேள், சென்னை-5.


அமரர் மகாகவி பாரதியாரின் ''கோயில் திருத்தம்'' எனும் கட்டுரையைத் திருக்கோயிலில் வெளியிட்டிருப்பதற்கு என் மனமார்ந்த நன்றி. எல்லா இனத்தவரும் ஆலயத்திற்குள் சென்று ஆண்டவனைவழிபட,அன்று பாரதியார் கண்ட கனவே இன்று நனவாகியிருக்கிறது. 'எல்லோரும் ஓர் குலம். எல்லோரும் ஓர்நிறை' என்று அவர் வற்புறுத்திச்சென்ற சாதியற்ற சமுதாயம் மலரத் 'திருக்கோயில்' பாடுபட வேண்டும்.

—இரா. மனோகரன், சென்னை.

''பகவான் இராமகிருட்டிணரின் பொன் மொழிகள்'' தொகுப்பு சிறப்பாக இருந்தது. இதழ்கள் தோறும் ஒரு பக்கம், சமயச்சான்றோரின் பொன்மொழிகளைத் தொகுத்துத்தர வேண்டுகிறேன்.

—சி. குமாரசுவாமி, சென்னை.

— — — —



சென்னை இராயப்பேட்டை அருள்மிகு சித்தி புத்தி விநாயகர் மற்றும் சுந்தரேசுவரர் திருக்கோயிலில் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திருமிகு இராம. வீரப்பன் அவர்கள் அருள்மிகு பழநியாண்டவர் சன்னிதி முகப்பு மண்டபத்தைத் திறந்துவைத்தும், அருள்மிகு ஐயப்பசுவாமி சன்னிதிக்குக் கால்கோள் செய்தும் சிறப்பித்தபோது எடுத்த படம். அறநிலையத்துறை ஆணையர் மற்றும் சமூக நலத்துறையின் அரசுச் செயலாளர் திரு கு. ஆளுடைய பிள்ளை ஐ.ஏ.எஸ்., துணை ஆணையர் திரு ந. சுவாமிநாதன், திரு சாம்பசிவ சிவாச்சாரியார், தக்கார் M. பழநியப்பன் மற்றும் நிர்வாக அதிகாரி தெ. ப. ஏகாம்பரம்ஆகியோர் படத்தில் உள்ளனர்.





சேலம் மாவட்டத்தைச் சார்ந்த கொல்லிமலையில் திருஅரப்பளீசுவரர் ஆலயத்தின் அஸ்டபந்தன மகா கும்பாபிஷேகத்தில் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திருமிகு இராம. வீரப்பன் அவர்கள் கலந்து கொண்டபோது எடுத்தபடம். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திருமிகு க. இராசாராம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திருமிகு சு. முத்துசாமி, மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திருமிகு ந. நல்லுசாமி ஆகியோர் உடன் உள்ளனர்.





மாண்புமிகு தமிழக முதல்வர் ''பொன் மனச் செம்மல்'' டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் துணைவியார் திருமதி ஜானகி இராமச்சந்திரன் அவர்கள் பழநி அருள்மிகு தண்டாயுத பாணி சுவாமி ஆலயத்திற்கு 17-9-85 ஆம் நாளன்று தரிசனம் செய்ய வந்த பொழுது எடுக்கப்பட்ட படம். துணை ஆணையர் திரு K. S. சோம சுந்தரம் படத்தில் உள்ளார்.